Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 16 திங்கட்கிழமை (29.04.2013) பக்கங்கள் 20 ஓசை - 211

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2517)



06



08



11



17



18


# இலங்கை உள்விவகாரங்களில் தலையிடுகிறது அமெரிக்கா

## "த நேசன்" குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் உள்ளக விடயங்களில் அமெரிக்கா தலையீடு செய்துவருவதாகவும், இவ்வாறு தலையிடும் கொள்கையானது இராஜதந்திர அணுகு முறையை மீறிய செயற்பாடெனவும் கொழும்பிலிருந்து வெளிவரும் "த நேசன்" எனும் ஆங்கில நாளிதழ் குற்றம் சுமத்தியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலைக்குச் சென்ற இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சிஸன், முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 20 அமைப்புக்களுடன் கலந்துரையாடியுள்ளார். சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்தக் கலந்துரையாடலில் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை, அவர்களின் காணி விவகாரம் வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படுகின்றமை,

19 ஆம் பக்கம் பார்க்க




## பலாத்காரமாக காணிகளை பறிக்கிறது அரசாங்கம்

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுமக்களின் குடியிருப்புக் காணிகளை அரசாங்கம் பலவந்தமாக அபகரித்து வருவதாகவும் குறிப்பாக வடமாகாணத்தில் இந்தச் சம்பவம் அதிகம் நிகழ்வதாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியில் மக்களின் காணிகளைப் பலவந்தமாக அரசாங்கம் கையகப்படுத்தி வருகின்றது. கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த இந்த மக்கள் தமது காணிகளுக்குச் சென்று குடியேறுவதற்காகக் காத்திருக்கும் நிலையில் அவர்களின் காணிகளை அரசாங்கம் பலவந்தமாகக் கையகப்படுத்தியுள்ளது. வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீள்குடியேற்றப்

19 ஆம் பக்கம் பார்க்க

## உதயன் பத்திரிகைக்கு எதிராக 4 ஆவது மானநட்டஈடு வழக்கு

### தாக்கல் செய்தார் அமைச்சர் டக்ளஸ்

தன்னை அவமானப்படுத்தும் நோக்கிலும், அவதூறுக்கு உள்ளாக்கும் நோக்கிலும் நியூ உதயன் பப்ளிகேசன் (பிறை வேட்) லிமிட்டட் கம்பனி தான் வெளியிடும் "உதயன்" பத்திரிகையின் மூலமாக பல தவறான செய்தி அறிக்கைகளை பிரசுரம் செய்துள்ளதென்றும், அத்தகைய மூன்று செய்திப் பிரசுரங்கள் தொடர்பாக மேற்படி கம்பனிக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் மூன்று மானநட்டஈடு கோரும் வழக்குகளை ஏற்கனவே தாக்கல் செய்து, இவ் வழக்குகள் மூன்றும் தற்போது இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகின்ற நிலையில், மேற்படி கம்பனிக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் ஒரு வழக்கினை தனது சட்டத்தரணி செல ஸ்ரீன் ஸ்ரனிஸ்லொஸ் மூலம் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்துள்ளார்.

நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியால் 2012 நவம்பர் மாதம் 7 ஆம் திகதி பிரசுரம் செய்து வெளியிடப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்ட உதயன்

19 ஆம் பக்கம் பார்க்க

## மண்ணெண்ணெய்க்குப் பதில் தண்ணீர் ஏமாற்றப்பட்ட வர்த்தகர்கள்

### முள்ளியவளையில் சம்பவம்

(முள்ளியவளை)

மண்ணெண்ணெய் எனத் தண்ணீரை வழங்கி மண்ணெண்ணெய்க்குரிய பணத்தையும் பெற்று இரண்டு வர்த்தகர்களை இனந்தெரியாதவர்கள் ஏமாற்றிச் சென்ற சம்பவம் தண்ணீரூற்று முள்ளியவளையில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய அமர்வுக்கு முழுமையான பிரதிநிதிகள் இல்லை

### கனடா அறிவிப்பு

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அமர்வுகளுக்கு முழுப் பிரதிநிதிகள் குழுவினையும் அனுப்பப் போவதில்லை என கனடா அறிவித்துள்ளது.

மனித உரிமை விவகாரங்களில் மேம்பாடு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கனடா, இலங்கையிடம் கோரியிருந்தது. எனினும், மனித உரிமை விவகாரங்களில் மேம்பாடு ஏற்படுத்தப்படவில்லை என கனடா சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்விற்கு முழு அளவிலான பிரதிநிதிகள் குழுவினை அனுப்பி வைக்கப் போவதில்லை என கனடா அறிவித்துள்ளது.

இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து கனடா தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிக்கும் என கனேடிய

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு தேர்தலில் போட்டியிடுவதா? தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்

### என்கிறார் கே.பி.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் நான் போட்டியிடுவதா? இல்லையா? என்பதை தமிழ் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர், கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில், கே.பி.யுடன் தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்புகொண்டு இத் தேர்தலில் போட்டியிடுவீர்களா என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது பற்றி இதுவரை

19 ஆம் பக்கம் பார்க்க

## மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மானிப்பாய் மேற்கு, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த சிறிதரன் ஜீவகரன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை இடம்பெற்ற இவ் விபத்தில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இரு

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...
விஜய வருட
பொதுப் பலன்கள்

உள்ளே...
புலமைப்
பரிசில்
மாதிரி
வினாத்தாள்

# மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் உணர்வுபூர்வமாக செயற்படவேண்டும்



கூட்டுறவுத்துறை சார்ந்தோர் உணர்வுபூர்வமாக, மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களாகச் செயற்பட வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபைக்கான புதிய நிர்வாகத் தெரிவும், கலந்துரையாடலும் நேற்று முன்தினம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன் தலைமையில் நடைபெற்றபோதே நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,


புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வீழ்ச்சி நிலைக்குச் செல்ல அலட்சியப் போக்கும், அக்கறையீனமுமே காரணமாகவுள்ளது. இப்பிரதேச மக்களினதும், சுற்றுலாப் பயணிகளினதும் தேவைகள் அதிகமாக உள்ளபோதும் அவற்றை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் கூட்டுறவுச் சங்கத்தின் பணிகள் அமையவில்லை. எனவே இவ்வாறான வீழ்ச்சி நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றபோது மக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களாக நாம் உள்ளோம். பொருத்தமான, சரியான வழியில் செயற்படுபவர்களின்மூலமே இக் கூட்டுறவுச் சங்கத்தை உயர்நிலைக்கு இட்டுச் செல்லமுடியும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், உறுப்பினர்கள் சூழ்ச்சி மற்றும் கபளிகரமான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேச மக்களுக்கு அதிகமான தேவைகள், குறைபாடுகள் உள்ளது. குறிப்பாக சில அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கடந்த காலத்தில் எமது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது எமது மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த பலத்த பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் பாடசாலை சமூகத்திலும் சில ஒழுங்கினங்கள் காணப்படுகின்றது. இவற்றை நிவர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளும் விரைவில் எம்மால் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து நிர்வாக சபைக்கான தெரிவுகள் இடம்பெற்றது இதன்போது 7 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அவர்களிடையே இருந்து புதிய தலைவராக நாகமுத்து நாகராசா தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பியின் புங்குடுதீவு பிரதேச இணைப்பாளர் சிவநேசன்(நவம்) கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் இராஜரட்ணம், பொதுமுகாமையாளர் செல்வவதனி, கூட்டுறவுச் சங்க பணியாளர்கள், அங்கத்தவர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கரணவாயில் வாகன விபத்து 12 பேர் படுகாயம்



(கரணவாய்)

கரணவாய் குஞ்சர்கடை பகுதியில் நேற்றுக் காலை பாரிய விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த இராணுவ டிராக் வண்டியுடன் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 6 இராணுவத்தினரும் 6-பொதுமக்களும் பலத்த காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் சம்பவம் பற்றி நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (18,109)



முள்ளியவளை தண்ணீரூற்று நகரப்பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை நாளாந்தம் அதிகரித்துள்ளது. போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதிகளில் நாளாந்தம் தொல்லைதரும் கட்டாக்காலிகள் இவை . (125)

## சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய சப்பற வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய புதிய சப்பற வெள்ளொட்ட விழா இன்று மாலை 5 மணிக்கு ஆலய பரிபாலன சபைத்தலைவர் கா.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன், ஓய்வு பெற்ற அதிபர் செ. சோதிப பெருமாள்,கோண்டாவில் வட மேற்கு கிராம அலுவலர் க.முருகையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை நல்லை [illegible]ன முதல்வர் உள்ளிட்ட பலர் வழங்கவுள்ளனர்.

இவ்வாலய மஹோற்சவம் கடந்த 17ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில் சப்பறத்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமையும் தேர்த்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமையும் இடம் பெறவுள்ளது.

## விண்ணப்பங்கள் கோரும் கார்கில்ஸ் பூட்சிற்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கை பூராகவும் சுமார் 214 கிளைகளைத் தன்னகத்தே கொண்ட கார்கில்ஸ் பூட்சிற்றி வடமாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்திலும் புதிதாக பல கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது.

புதிய கிளைகளுக்கான காசாளர், சேவை உதவியாளர் கள் போன்ற பதவிகளுக்கு இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காசாளர் பதவிக்கு க.பொ.த (சாதாரண)தரத்தில் கணித பாடத்தில் திறமைச்சித்தி பெற்றுள்ள 18-24 வயதுக்குட்பட்ட யுவதிகளும், சேவைஉதவியாளர் பதவிக்கு க.பொ.த (சாதாரண) தரம் வரை கற்ற 18-27 வயதுக்குட்பட்ட ஆண்களும் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு அருகில் உள்ள கார்க்கில்ஸ் பூட்சிற்றி முகாமையாளரை அல்லது இல.40 யோர்க் வீதி, கொழும்பு 01 இல் அமைந்துள்ள கார்கில்ஸ் பூட்சிற்றி மனிதவளத் துறை முகாமையாளரோடு தொடர்புகொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (10)

## போட்டிப்பரீட்சை

நாடளாவிய ரீதியில் கடந்த ஒக்ரோபர் மாதம் கிராம அலுவலர் தரம் iii இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதனடிப்படையில் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை அதற்கான போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சேவாலங்கா நிறுவனத்தின் கண்காட்சி யாழில்

(யாழ்ப்பாணம்)

சேவாலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் காடழிப்பும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் சம்பந்தமான கண்காட்சி ஒன்று இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது.

இலக்கம் 54/2 பலாலி வீதி, கோண்டாவிலில் உள்ள நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இந் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதில் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இக்கண்காட்சி மாலை 5 மணிவரை இடம்பெறும். நாளை காலை 9 மணிமுதல் இக்கண்காட்சியைப் பார்வையிட முடியும் என சேவாலங்கா நிறுவனத்தினர் அறிவித்துள்ளனா.(இ)

## இன்றைய ஆர்ப்பாட்டத்தில் மாக்சிச லெனினிசக் கட்சி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு முன்பாக காணி சுவீகரிப்புக் கெதிராக இன்று நடாத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி பங்கு பற்றும் என்று அதன் தலைவர் சி.கா. செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில்நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

வலி.வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க தமது கட்சி பாடுபடும் என்றும் அவர் குறிப்பிட்டதுடன் எதிர்வரும் மேதின நிகழ்வுகளுக்கு வலுச் சேர்ப்பதற்காக் தமது கட்சி இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் என்றும் தெரிவித்தார். (பா)




கோண்டாவில் நலன் விரும்பி ஒருவரினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 60 இலட்சம் ரூபா பெறுமதியான கோண்டாவில் உப தபாலக புதிய கட்டிடத்தின் திறப்புவிழாவில் மன்னார் அஞ்சல் அத்தியட்சகர் பெயர் பலகையை திரைநீக்கம் செய்வதையும் புதிய அலுவலகத்தை விருந்தினர்கள் திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (54)

# மேதின எழுச்சிக்கு தயாராகிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக உரத்துக் குரலெழுப்பும் நாள்தான் மேதினமாகும். இந்நாளில் உயிர் வாழ்கைக்காக உழைக்கின்ற அனைத்துத் தொழிலாளர்களின் உரிமைகளும் வென்றெடுக்கப்பட வேண்டுமென்று உளமாரக் கோசமிடுவோம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.


“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்ற முதுமொழி எம்மிடம் இல்லாமல் போனதுவே உரிமைகளை நாம் இழப்பதற்குக் காரணம். சுய இலாபங்களுக்காக உரிமைகளை இழந்து அடிமைப் பட்டு வாழ்வது ஊசலாடும் உயிரினத்திற்கே இழிவானது.

ஒருவரை ஒருவர் குறை சொல்லி, மறைமுகமாகவும், நேரடியாகவும் வசைபாடி, கோள்மூட்டி வாழ்பவர்களே எம்மிடமிருந்த ஒற்றுமை, இதயசுத்தி என்பன இழக்கப்பட்டதற்குக் காரணம்.

உரிமைக்காகக் குரலெழுப்புவோரின் குரல்வளைகளை நசுக்குவதற்குத் துணைபோகும் [illegible]ஷமிகளை இந்நாளில் இனங்கண்டு சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம். பதவிக்காகவும், பரிசுகளுக்காகவும் பக்கவாத்தியம் போடும் பரிதாபப் பிறவிகளை எமது சமூகத்தில் இருந்து அந்நியப்படுத்த அணிதிரள்வோம்.

கல்வியாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், இன்று படுகின்ற துயரங்கள் எண்ணிலடங்கா! மாணவர்களை வழிப்படுத்தமுடியாத காலச்சூழ்நிலை, சுதந்திரமாகக் கடமையாற்றமுடியாத நெருக்கீடுகள் விரும்பாத, முறையற்ற இடமாற்றங்கள் என்பவற்றால் அல்லல்படும் எமது கல்விச் சமூகத்திற்காக அனைவரும் ஒன்று பட்டு குரலெழுப்ப முன் வர வேண்டுமென்று இந்நாளில் வேண்டுகின்றோம்.

எமது சமூக வளர்ச்சிக்காக நெடுகாலம் உழைத்துவருகின்ற ஊடகசுதந்திரத்திற்கு எதிராக விடுக்கப்படுகின்ற அடக்குமுறைகளை ஒடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம் என்று மேற்படி தொழிற்சங்கம் தனது தொண்டர்களுககு அழைப்பு விடுத்துள்ளது.



கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையிலான சிவகுருநாதன் வெற்றிக் கிண்ண 2 நாள் இனிங்ஸ் போட்டியில் முதல் நாள் ஆரம்ப நிகழ்வில் யாழ்., இந்துக் கல்லூரி அணியினருக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கைலாகு கொடுப்பதைக் காணலாம். (படம்: கே.நந்தகுமார்)

# இருளில் மூழ்கிக்காணப்படும் அச்சுவேலி பஸ்தரிப்பிடம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பஸ்தரிப்பிடத்தில் மின்விளக்குகள் இல்லாமையால் அப்பகுதி இருளில் மூழ்கிக் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பஸ்தரிப்பிடமானது தற்போது பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

இருப்பினும் அங்கு வீதி விளககுகள் எவையும் பொருத்தப் படவில்லை எனவும் தெரிவிக்கும் மக்கள், இரவில் பஸ் இலக்கங்களையும் தாம் சரியாக இனம்கண்டு கொள்ள முடியவில்லை எனவும், இதனால் தாம் பல விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அபாயம் உள்ளதாகவும் மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் பஸ்தரிப்பிடத்திற்கு மின் விளக்கினைப் பொருத்தி மக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிளை அலுவலகம் திறப்பு

(யாழ்.நிருபர்)

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் கிளை அலுவலகம் எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இல. 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அலுவலகத் திறப்பு விழா நடைபெறவுள்ளது.

கடந்த 10 வருடங்களாக தலைநகர் கொழும்பை மையமாகக் கொண்ட இந்த ஆணைக்குழுவின் அலுவலகம் வெளிப்பிரதேசத்தில் திறந்து வைக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

எதிர்வரும் 3 ஆம் திகதி கொண்டாடப்படும் உலக பத்திரிகை சுதந்திரதினத்தை நினைவுகூரும் வகையில் இந்த அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படுகிறது.

இதன்மூலம் வடபகுதி மக்கள் இலகுவாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பயன்களை அடைவதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. (10)

# சேவையில் ஈடுபடத் தடை விதிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி தனியார் பேருந்து சேவையில் ஈடுபடும் சாரதிகளில் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத சாரதிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் கிடைத்தும் அவர்களை சேவையில் ஈடுபடுவதற்கு சங்கத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக சாரதிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தாம் பல்வேறு சிரமத்தின் மத்தியில் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றும் இரண்டு வருடங்களின் பின்பே சேவையில் [illegible]படமுடியும் என சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் தாம் அசௌகரியங்களுக்குள்ளாகியிருப்பதாக அவாகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் அக்கறை கொண்டு சாரதிகளின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு சாரதிகள் கோரிக்கை விடுகின்றனர்.

மேற்படி சாரதிகள் இலகுவாகன அனுமதிப்பத்திரம் மாத்திரம் பெற்றமையினாலேயே மேற்படி சங்கத்தினர் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் பட்டப்பகலில் திருட்டு

பட்டப்பகலில் மோட்டார் சைக்கிள் திருடிய சம்பவம் ஒன்று ஆவரங்கால் பகுதியில கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இத் திருட்டுச் சம்பவத்தில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பல்ஸர் இன மோட்டார் சைக்கிளே களவாடி செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவகையில மேற்படி நபர் மோட்டார் சைக்கிளை பூட்டாமல் வீதியோரத்தில் நிறுத்தி விட்டு அருகில் உள்ள கடையில் தொலைபேசிக்கு மீள் நிரப்பும் அட்டை வாங்கச் சென்றுள்ளார். பின் அட்டையினை வாங்கி விட்டு வந்து பார்த்தபோது மோட்டாா சைக்கிளை காணாது திகைத்துப்போயுள்ளார்.

பட்டப்பகலில் அனைவரின் கண்ணிலும் மண்ணை தூவி விட்டு களவாடப்பட்ட சம்பவம் அப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து அச்சுவேலி குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (15)

# வீதியில் நின்று மது அருந்திய இருவர் பொலிஸாரால் கைது

(அச்சுவேலி)

பாதசாரிகளுக்கு இடையூறு தரும் வகையில் வீதியில் நின்று மதுபானம் அருந்திய இரண்டு நபர்களை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும் போது இவர்களை கைது செய்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

புத்தூர் சந்திக்கு அருகாமையில் உள்ள மதுபான நிலையத்தில் வாங்கி வீதியோரமாக நின்று மது அருந்திக்கொண்டு இருக்கும்போது இவர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இதில் ஒருவர் புத்தூர் மேற்கைச் சேர்ந்தவரும், மற்றையவர் ஆவரங்கால் பகுதியினைச் சேர்நதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கைது செய்த இருவரையும் பொலிஸார் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(15)

# குமிழமுனை பிரதான வீதி புனரமைப்பு எப்போது?

(முல்லைத்தீவு)

குமிழமுனை தண்ணீரூற்று ஊடாக முல்லைத்தீவு வரையான பிரதான வீதி இதுவரை எவ்வித புனரமைப்புக்கும் உட்படாமல் குண்டும் குழியுமாக மிகமோசமாகச் சேதமடைந்திருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேறி 2 வருடங்களாகியும் இவ்வீதி புனரமைக்கப் படாமல் இருப்பதால் இவ்வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் மற்றும் வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதி போக்குவரத்து மிக முக்கியமானதாக அமைந்துள்ளதுடன் இதனூடாக பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள், வர்த்தகர்கள் எனப் பலர் பயணம் செய்கின்ற நிலையில் இவ்வீதி புனரமைகக்கப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வீதிகள் புனரமைப்பு செய்யப்படுகின்ற போதிலும் இவ்வீதி புனரமைப்பு இன்றி இருப்பது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (04)







காரைநகர்ப் பிரதேச வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற வைத்திய முகாமின் ஆரம்ப வைபவத்தில் பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி உரையாற்றுவதையும், அருகில் வைத்திய அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும், வைத்தியர்களால் மக்களுக்கான மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதையும் வைத்திய முகாமுக்கு வருகை தந்த பொதுமக்களையும் காணலாம். (50)

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே. அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார், நீ அதை வென்றுவிடலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## யாருக்காக யார் சவால் விடுவது?

"தமிழ்மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்" என்று முன்னாள் தமிழ் நீதியரசர் ஒருவரும் தன் பங்கிற்கான உசுப்பேத்தலைத் தொடங்கியிருக்கிறார். நடந்து முடிந்த பாடழிவும் அவல வேதனைகளும் வேறு எந்த நாட்டு மக்களுக்கோதான் நடந்தது என்ற பாவனையோடு, நமது மக்களை அழித்த அதே பழைய வசனங்களை ஏந்திக்கொண்டு இவரும் இப்போது வந்து குதிக்கிறார்.

நடந்த இவ்வளவு போராட்டங்கள், அழிவுகள் அவலங்களுக்கும் எங்கிருந்தார் இவர்? இப்போது அடுத்த கட்டமாய்ப் போராட தமது பிள்ளைகளையோ பேரப்பிள்ளைகளையோ தயார்படுத்தி அழைத்துக்கொண்டு வருகிறாரா? வன்னியில் அவலப்பட்ட — அவலப்படும் தமிழ்மக்கள் பற்றி அவர்கள் என்ன அறிவார்கள்? நம் தமிழ்வாழ்வு அந்தரிப்பின் சிறுதுளியையேனும் அவர்கள் உணர்ந்தவர்களா?

எப்படி பொறுப்பற்றதனமாகப் பேசி யார் யாரையோ போராட்டத்துக்குத் தூண்ட முடிகிறது இவர்களுக்கு? மக்கள் உணர்ச்சிகரமாக எதைச் சொன்னாலும் மயங்கிவிடுவார்கள் என்றால், எவர் எவரோ வந்து எதையெதையோ சொல்லி மக்களின் ரோசநரம்புகளைச் சூடேற்றி அவர்களை அழியவிட்டுப் போய்விடலாமா? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்?

வரலாற்றிலிருந்து கற்றுக்கொண்டதை உரைத்துப் பார்த்து மக்களைப் பாதுகாக்கும் யதார்த்த வழியைப் புரிந்தவர்கள் இதைக் கண்டிக்க வேண்டாமா? நமது மக்கள் எவ்வளவு இழிநிலையில் அரைபட்டுக் கிடந்தாலும், 'நமக்கு மற்றவர்கள் சமதையானவர்கள் இல்லை' என்ற சிந்தனையிலிருப்பவர்களே இந்த மக்களின் அரசியல் குரலாக எழுந்தெழுந்து வந்துகொண்டிருப்பது தமிழ்வாழ்க்கையின் துரதிர்ஷ்டம்தான்!

எதிர்த்தரப்பை இணங்க வைத்து வெல்வதற்குப் பதிலாகக் கோபப்படுத்துவதில் யார் யாரோ தற்திருப்தி அடைகிறார்கள்; நாம் தொடர்ந்து வாதைகளை அடைந்து கொள்கிறோம்.

எதிர்த்தரப்பை ஆவேசப்படுத்துவதில் – பிளவு அரசியலில் குறுகிய அரசியல் ஆதாயங்களைக் கண்டுகொள்கிறார்கள் இந்தத் தளுக்கு அரசியல் செய்பவர்கள். குரலற்ற மக்கள் மீது மேலும் மேலும் துன்பங்களைச் சுமத்தியவாறே 'ரோச அரசியலை' தொடர்கிறார்கள்.

நம் அறிஞர்கள் பிரமுகர்கள் எனப்படுவோரும், மக்களுக்காகக் குரல் தருவதாகக் காட்டிக் கொள்வோரும் வீரம், ரோசம், பழம் பெருமை என்பவற்றைச் சொல்லி வன்முறை எதிர்ப்பு உணர்வைக் கைவிடாதிருப்பதே உயர்வான மனித மதிப்பீடுகளாகப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எதிர்ப்புக் கோஷங்களின் மூலம் பகைவரைப் பணிய வைத்துவிடலாம் என்ற உணர்ச்சிகர ஏமாற்றினால் மக்களது வாழ்வைச் சிதைத்து வருகிறார்கள்.

இப்போதும் சாதாரண மக்கள் வாழ்வை அழித்துக் கொண்டிருப்பதையே இவர்கள் வீரம் ரோசம் எனும் பண்புகளாக விதந்தோதிக் கொண்டிருக்கிறார்கள். எதார்த்த நிலையை மறைத்து இவர்கள் காட்டும் பழம்பெருமை மதிப்பீடுகள் பற்றிய முழக்கங்களால் மக்களை மயக்கநிலையில் வைத்திருப்பதுடன் வாழவொட்டாமலும் வதைத்து வருகிறார்கள்.

வாழ்வைப் பெறும் வழி பற்றி எந்த நம்பிக்கையும் கொடுக்காமல், வழிகளைத் தேடும் பேச்சுக்கும் நம்பிக்கை காட்டாமல், வெறுப்பு விரக்திக் குற்றச்சாட்டுப் பகை அரசியலிலேயே மக்களை மூழ்கடித்து வருபவர்களை நிறுத்தி நாம் கேள்வி கேட்க வேண்டும். இப்படிச் சிந்திப்பதே 'தமிழ்வீரத்திற்கு' இழுக்கு என்ற மதிப்பீடுகளிலிருந்து நாம் மீண்டாக வேண்டும்.

நம்மையே வதைத்துக் கொள்ளும் ரோசமும் வீம்பும் பழிவாங்கும் திருப்தியும் அதற்காக உசுப்பேத்திப் பேசப்படும் வீரவசனங்களும் ஒருபோதும் மக்களது சுதந்திர வாழ்வாக ஆகமாட்டாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். - ஆசிரியர்

# அடம்பிடிக்கிறது கூட்டமைப்பு தயாராகிறது புரிந்துணர்வு ஒப்பந்தம்

## உடைவைத் தவிர்க்க முடியாத நிலை நீடிப்பு

(திருகோணமலை)

நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து தமக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வதில் நீடித்துச் செல்லும் இழுபறி நிலையைத் தொடர்ந்து மேற்படி நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து மேற்படி முடிவுக்கு வந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படா விட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., புளோட், ரெலோ ஆகிய நானகு கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு முன்னணியாக பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என திருகோணமலையில் நடைபெற்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு இடம்பெற்ற கூட்டத்தினைத் தொடர்ந்து மத்திய குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் வெளியிடப்பட்டன. அவையாவன,

தமிழ்த் 'தேசிய இனத்தின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக உழைக்கக் கூடிய அரசியல் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில இயங்கிவந்தாலும் இலங்கை தேர்தல் திணைக்களத்தில் ஒரு அரசியல் முன்னணியாகவோ தனி அரசியல் கட்சியாகவோ பதிவுசெய்யப்படவில்லை.

பதிவுசெய்வதற்கான இழுபறி நிலைகளை நீக்குவதற்கு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையிலான புத்திஜீவிகள், சிவில் சமூகம் எடுக்கும் முயற்சிகளுக்கு பூரண ஆதரவை வழங்குவது எனவும், இலங்கை தமிழரசுக் கட்சியுடன் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) நேரடி பேச்சுவார்த்தைகளை நடாத்தி சுமுக நிலைகளை எட்டுவதற்காக முழு முயற்சிகளை எடுக்கவேண்டும் எனவும் ஏனைய கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., புளோட் ஆகிய கட்சிகளுடன் ஒற்றுமையை பலப்படுத்த முழு முயற்சிகள் இரு வாரங்களுக்குள் எடுக்கப்பட வேண்டும் எனவும் இந்த மத்தியகுழு தீர்மானிக்கின்றது.

இந்த முயற்சிகள் வெற்றி பெறமுடியாத சூழ்நிலையேற்படுமிடத்து இதுவரை இணக்கம் கண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., புளோட், ரெலோ ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு முன்னணியாக பதிவுசெய்யப்பட வேண்டும் என்றும் கூடிய விரைவில் தனி அரசியல் கட்சியாக பதிவுசெய்யப்படவேண்டும் எனவும் மத்தியகுழு வேண்டுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னணியாக பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் அல்லது தனி அரசியல் கட்சியாக பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் இதில் சேர விரும்பும் தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளை வெளிப்படுத்தக்கூடிய ஏனைய கட்சிகளையும் இணைத்து தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையை பலப்படுத்தி சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் இனத்தின் அபிலாசைகளை தீர்க்கக் கூடிய தீர்வொன்றை வென்றெடுக்க வேண்டும் என்றும் இந்த மத்திய குழு தீர்மானிக்கின்றது.

# அரசின் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து அமைச்சர்களுக்கு ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)

அமைச்சர்கள் தங்களுக்குள் முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டால் அது அரசின் ஸ்திரத்தன்மையை மிக மோசமாக சிதைத்துவிடும் என்று ஜனாதிபதி அனைத்து அமைச்சர்களுக்கும் அறிவுரை கூறியிருக்கிறார்.

அமைச்சர்களுக்கிடையிலான முரண்பாடுகளை உடனடியாக களைய வேண்டும் என்றும், அமைச்சர்களுக்கு இடையில் அடிக்கடி முரண்பாடு ஏற்படுவது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கு இடையிலான முரண்பாடுகளை எதிர்க்கட்சிகள் பிரசார நோக்கத்திற்காக பயன்படுத்திக்கொள்ளக் கூடும். அரசாங்கத்தின் நன்மதிப்பிற்கு பாதகத்தன்மை ஏற்படக்கூடிய அபாயம் நிலவுகின்றது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# வாக்காளர் பட்டியல் தயாரிப்பு ஆயத்த நடவடிக்கைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த ஆண்டுக்கான புதிய வாக்காளர் இடாப்பைத் தயாரிப்பதற்காகவே இந்த வாக்காளர் பதிவுகள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

அடுத்தமாதம் நடுப்பகுதியில் அனைத்து குடும்பங்களுக்கும் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு இந்த வாக்காளர் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களம் அனைத்து நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக அனைத்து பிரதேச செயலகங்களிலும் கிராம அலுவலர்களுக்கு வாக்காளர் பதிவு தொடர்பான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

# புனர்வாழ்வு பெற்ற புலிகளை எவரும் தவறாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது

## மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற்ற புலிகளை யாரும் தவறான வழிகளில் பயன்படுத்த முயற்சிக்கக்கூடாது என்று ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

உலகில் உள்ள அனைத்து வகையிலான பயங்கரவாதங்களும் இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

எங்கு எவ்வாறான பயங்கரவாதம் தோன்றினாலும் அதனை இல்லாதொழிக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை மேற்குலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரச படையினர் விடுதலைப் புலிப் பயங்கரவாதத்தை இல்லாதொழித்த தாகத் தெரிவித்துள்ளார். மக்களைப் பாதுகாக்க வேண்டியது நாட்டின் கடமையாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

11000 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கடும்போக்குடைய குழுக்கள் இவர்களை இலகுவில் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இன்னமும் வடக்கு, கிழக்கில் ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# நல வாழ்வுக்கு விவசாயம்

- ஆர்.எஸ்.நாராயணன்

நல வாழ்வை மையமிட்டுத்தான் விவசாயம் வளர்ந்தது. உணவே மருந்தாக விளங்கியது. இயற்கை விவசாயம் முழுமையுடன் விளங்கிய காலத்தில், மனிதர்களுக்கு நோய் வருவதுகுறைவு. வலிமையுடன் வாழ்ந்தனர். மருத்துவமனைகளும் குறைவு. அலோபதி வைத்தியம் அபூர்வமே. மனிதர்கள் நீண்ட நாள் வாழ்ந்தனர். இன்று இயற்கை விவசாயம் முழுமையாக அழிக்கப்பட்டது. இரசாயன விவசாயத்தால் உணவு விஷமாயுள்ளது. மனிதன் நோயுறுகிறான். சிறுவயதிலிருந்தே மருந்து மாத்திரைகளுக்கு மனிதன் இரையாகிவிட்டான். மருத்துவமனைகள் பெருகிவிட்டன. மருந்து உற்பத்தி பெருகிவிட்டது. நல வாழ்வை மனிதன் தொலைத்து விட்டான். வள வாழ்வை வைத்தியர்கள் தேடிக்கொண்டு விட்டனர்.

விவசாயத்தில் இரசாயனம் எப்போது அறிமுகமானது? மாசாக்கப்பட்ட மண்ணால் மனிதன் நோயாளியான கதை என்ன?

பசுமைப்புரட்சி வருவதற்கு முன்பே விவசாயத்தில் இரசாயனப் புரட்சி ஏற்பட்டு விட்டது என்பதே கசப்பான உண்மை. உலகில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியவர் நோர்மன் போலாக். உண்மையில் இவர் கண்டுபிடித்தது குள்ளரக கோதுமை. ஜப்பானியக் குள்ளரகத்தைக் கொலம்பிய ரகத்துடன் ஒட்டுக்கட்டி உருவான மெக்சிகன் வெள்ளை இவர் கண்டுபிடிப்பாகும். உலக கோதுமை ஆராய்ச்சி நிறுவனம் மெக்சிகோவில் உள்ளது. பிலிப்பைன்ஸில் நிறுவப்பட்ட உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தில் வீரிய கோதுமை ரகத்தைக் கண்டுபிடித்த நோர்மன் போலாக்கின் அதே உத்தியைக் கடைப்பிடித்து ஐ.ஆர்.8, தைச்சுங் போன்ற வீரியரக நெல் விதைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவையெல்லாம் 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்தன. 5 அடி வரை வளரக்கூடிய நெல், கோதுமை ஆகியவற்றின் உயரத்தை 2½ அடிக்கும் பாதியாக குறைத்து வைக்கோலாக வேண்டிய நார்ப் பொருளை மாப் பொருளாக்கி நெல் அல்லது கோதுமை மணிகளைக் கூட்டும் D.N.A.(De-Oxy-ri-bo-Nu-cleic-Acid) மூலம் வீரியரக நெல், கோதுமை உருப்பெற்றன. இதைத் தமிழ்ப்படுத்திக் கூற வேண்டுமானால், உயர் தொழில்நுட்பத்தின் மூலம் 'விதையில்' உள்ள உயிர்மங்களை அடையாளமிட்டு பிரித்து மாற்றுதல் எனலாம். இதையெல்லாம் நினைத்தவுடன் செய்ய முடியாது பல்லாண்டு ஆராய்ச்சிக்குப் பின்னரே புதிய விதைகளை உருவாக்க முடியும். இதன் பின் விளைவு மிகவும் மோசமாயிருந்த விவரத்தை கவனிக்கும் முன்பு மண்ணைக் கெடுத்த மாபாவி ஜேர்மன் விஞ்ஞானியை அறிவோம். அவர்தான் பேரன் யொஸ்டஸ் வான் லீபெக் (Baron Justus Von Liebig) 1840இல் வேளாண்மையிலும் உடற்கூறிலும் இரசாயனப் பண்பாடு என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை வெளியிட்டார்.

பல வகையான உணவுத்தாவரங்களை எரித்துக் கிடைத்த சாம்பலில் உள்ள தாது உப்புகளை அளவிட்டு அந்த உப்புகளை சிந்தட்டிக்(செயற்கை) வடிவில் வழங்கலாமென்று கண்டறியப்பட்டது. பசுமைத்தாவரங்களில் அடிப்படையாக நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம், கல்சியம் உள்ள அளவையும் கணக்கிட்டு NPK தத்துவம் உருவானது. இதை உருவாக்கிய லீபெக் வயல்களில் சோதனை செய்தார். இந்த என்.பி.கே. கலவையுடன் சிறிது சுண்ணாம்பையும் (ஜிப்சம்) சேர்த்து மண்ணில் வழங்கிய போது நல்ல விளைச்சல் கிட்டியது. லீபெக் உண்மையில் ஒரு வெடிகுண்டு விஞ்ஞானி. இவர் கண்டுபிடிப்புகளான சூப்பர் பொஸ்பேற், பென்சீன், ஆலிக்கலி போன்றவை வெடிகுண்டுக்குரிய தாதுஉப்புகள் ஆகும். அவை போர்க்கப்பல்களில் வெடிகுண்டு வீசப் பயன்பட்டன. அதே வெடி உப்புகள் விவசாயத்திலும் பயன்பட லீபெக் காரணமானார்.

மண்ணுக்கு இயற்கை உரமே தேவை இல்லை என்றும் மேற்படி இரசாயன உரங்களே போதும் என்று போதித்த லீபெக்கை வெடிமருந்து நிறுவனங்கள் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடிய காலகட்டம் முதல் உலகப் போருக்கு முற்பட்டது. முதல் உலகப்போர் தொடங்கிய காலம் 1914. விவசாயத்தில் இரசாயன உரங்களைப் பயன்படுத்திய போது பசுமை மிகுதியால் பூச்சி பூசணத் தாக்குதல் அதிகமாயிற்று. அவற்றைக் கட்டுப்படுத்த உயிர்கொல்லிகள் பூச்சிமருந்துகளாகப் பயனாயிற்று. முதல் உலகப் போருக்கு முன்பே மண் விஷமாகிவிட்டது.

**உணவு உற்பத்திக்கு அடிப்படை விவசாயம். விவசாயத்திற்கு அடிப்படையானது மண், மண்ணை வளப்படுத்துவது தான் நலவாழ்வு விவசாயம். இரசாயனம் இட்டு மண்ணைச் சுரண்டுவது நோய் விவசாயம். மண் என்பது இரசாயனப் பொருள் இல்லை. மண் உயிருள்ளது. மண் உயிரோட்டம் உள்ளது. நுண்ணுயிர்கள் நிரம்பியது. அந்த நுண்ணுயிரிகள் நலமாயிருந்தால் மண் ஆரோக்கியமாயிருக்கும். ஆரோக்கியமான மண்ணிலிருந்து விளையும் உணவும் ஆரோக்கியமானது.**

உலகில் முதல் முறையாக விவசாயத்தில் இரசாயன உரம் - பூச்சி மருந்து உபயோகத்தால் மண்ணும் மனிதர்களின் வாழ்விடங்களும் விஷமாவதை எச்சரித்த் விஞ்ஞானி டாக்டர் அலெக்சிஸ் கர்ரெல் (Dr. Alexis Carrel). இவர் எழுதிய மனிதன் - ஒரு புதிர் (Man – the unknown) என்ற நூலுக்கு நோபல் பரிசு 1912ஆம் ஆண்டு கிடைத்தது. மனிதன் தன்னுடைய வாழ்விடத்தை மாசுபடுத்துவதில் பன்றியை விட மோசமானவன் என்று அந்த நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஷமாக்கப்பட்ட மண்ணிலிருந்து விளையும் உணவு நோயை ஏற்படுத்தும் என்று கூறிய கர்ரெல் மண்ணில் இயற்கையாக உள்ள தாதுஉப்புக்களே மனிதர்கள் மற்றும் கால்நடைகளின் உயிர்மங்களை காப்பாற்றும் என்றும் சிந்தட்டிக் (செயற்கை) உரங்கள் வழங்கும் உப்புகள் உயிர்மங்களை நோயுறச் செய்வதுடன் மண்ணில் உள்ள நுண்ணுயிர் இயக்கங்களை அழித்து மண், காற்று, உணவு, எல்லாவற்றையும் மாசாக்குவதாக எச்சரித்தார்.

அடுத்தபடியாக டாக்டர் ஜோசப் வீஸ்மன் (Dr. Joseph Weissman) நீண்டகால ஆராய்ச்சிக்குப்பின் திடுக்கிடும் உண்மையை வெளியிட்டார். முற்காலத்தில் நோய் என்றால் தொற்றும் தன்மையுள்ள பிளேக், அம்மை, க்ஷயரோகம் ஆகியவற்றுக்கு மட்டுமே அஞ்ச வேண்டியிருந்தது. அவற்றுக்கெல்லாம் கூட மருந்துண்டு. ஆனால் தொற்றிக் கொள்ளாத நோய்கள் இன்னும் பயங்கரமானவை. இவை 19, 20 ஆம் நூற்றாண்டில்தான் அதாவது விவசாயத்தில் இரசாயனப் பயன்பாட்டுக்குப்பின் தோன்றியவை. மாற்று இதயம், மாற்றுச் சிறுநீரகம், புற்றுநோய், பைபாஸ் சேர்ஜரி ஆகியவற்றுக்கெல்லாம் உரிய மருத்துவக் கண்டுபிடிப்பு, ஆராய்ச்சிக்குத்தான் பில்லியன் பில்லியன் டொலராகப் பணம் செலவாகிறது என்று ஆதாரத்துடன் வரைந்துள்ளார். முதல் முறையாக 1910-இல்தான் இரத்தக்குழாய் வெடித்து இதய நோயால் மனிதன் இறந்த விஷயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இன்று இதய நோய் இல்லாத மனிதனைக் காண்பதே அரிது. சுமார் 70 சதவீதமக்கள் இதயநோயால் இறக்கின்றனர். முற்காலத்தில் புற்றுநோய் அபூர்வம். இன்று உலகில் 5 சதவிகித மக்களுக்குப் புற்றுநோய் உள்ளது. நீரிழிவு நோய் சுமார் 50 சதவீத மக்களுக்கு உள்ளது. இதற்கெல்லாம் இரசாயன விவசாயமே காரணம்.

தொழில் வளர்ச்சி - தொழிற்சாலைகளின் கழிவுகள் - நகர வளர்ச்சிக் கழிவுகள் எல்லாம் ஆறுகளில் கலந்து கடலில் கலக்கின்றன. தொழிற்சாலைக் கழிவுகளால் நிலமும் நீரும் விஷமாகி அந்த விஷம் தாவரங்கள் வழியே மனிதனையும் கால்நடைகளையும் நோயாளியாக்கிய விஷயம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே மருத்துவத்துறை விஞ்ஞானிகள் எடுத்துக்காட்டிவிட்டனர். D.D.T விஷம் பற்றிய விழிப்புணர்வை முதலில் உணர்த்தியவர் டாக்டர் வீஸ்மன். இவற்றைப் பயிர்களின் மீது தெளித்தனர். குறிப்பாகத் தீவனங்கள் தெளித்த D.D.T விஷம் மாடுகளில் எஞ்சி அவற்றின் மடிகள் வழியே பாலில் கலந்து அப்பாலை அருந்திய தாய்மார்களின் முலைப்பால் விஷமானது. கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அமெரிக்காவில் 99 சதவீதத் தாய்மார்களின் முலைப்பாலில் D.D.T விஷம் உள்ளது கண்டறியப்பட்டது. D.D.T விஷம் பற்றிய விரிவான செய்திகளை அறிய ரோச்செல் கார்சன் அம்மையாரின் மௌன வசந்தம் (Silent Spring) என்ற நூல் மூலம் அறியலாம். அமெரிக்காவில் D.D.T -ஐத் தடை செய்ய வேண்டிய நெருக்கடியை கார்சன் ஏற்படுத்தினார். D.D.T விஷத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானி சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த போல் ம்யூலர் (Paul Muller) ஆவார். 1874இல் இக் கொடிய விஷத்தை இவர் கண்டுபிடித்தாலும் கூட, 1939-இல்தான் பயிர்களில் தெளித்து புழு பூச்சிகள் மடிவதை விவசாயிகள் கண்டறிந்தனர். மரணவிளைவு அறியப்படாமல் விவசாயத்தில் இந்த விஷம் பூச்சிமருந்தாக மிக வெற்றிகரமாகச் செயல்பட்டதைப் பாராட்டி போல் ம்யூலரின் D.D.T கண்டுபிடிப்புக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. வரலாற்றின் விசித்திரங்களுக்கு எல்லையே இல்லை. மண் விஷமானதை எடுத்துக் காட்டிய டாக்டர் அலெக்சிஸ் கர்ரெலுக்கும் நோபல் பரிசு. மண்ணை விஷமாக்கிய போல் ம்யூலருக்கும் நோபல் பரிசு. அதுபோலவே வெடிமருந்துக்கும் பயன்பட்ட ஜேர்மனிய இரசாயன நிறுவனங்களுக்கு அமெரிக்க முதலீடு பெறப்பட்டது. ஐ.ஜி. ஃபார்பென் (I.G.Farben) 1925-இல் மாபெரும் பன்னாட்டு நிறுவனமாக வளர்ந்து பின்னர் ஹிட்லரின் சோவியத்-போலந்து படையெடுப்புக்கும் ஆக்கிரமிப்புக்கும் உதவியது. நியூ ஜெர்சி ஸ்டாண்டர்ட் எண்ணெய் கம்பனி வழங்கிய பெட்ரோல் உதவியில் ஜெர்மானிய டாங்குகள் சோவியத்துக்குள் நுழைந்தன.

ஜேர்மனிடம் சரணாகதியடைந்த பிணைக்கைதிகளை அடிமைகளாக்கி ஐ.ஜி.ஃபார்பெனுக்கு ஹிட்லர் வழங்கினார். அப்படிப்பட்ட அடிமைகளின் உதவியுடன் ஹிட்லரின் உத்தரவுப்படி ஆஷ்விட்சில் (Ausch Witz) இருந்த மரண முகாம்களில் பல இலட்சக் கணக்கான யூதர்கள் மீது ஃபார்பென் அமோனியா விஷவாயுவைச் செலுத்திக் கொர்ன்றார். ஜேர்மானிய இரசாயன விஞ்ஞான நுட்பங்கள் எல்லாம் இரண்டாவது உலகப்போர் சமயம் அமெரிக்காவை அடைந்து ஏராளமான இரசாயன கம்பனிகள் - அதாவது வெடி குண்டு நிறுவனங்கள் லாபத்தில் கொழித்தன. மக்களின் வரிப்பணம் எல்லாம் அமோனியா-நைதரசன் வெடிகுண்டுகள் - சுமார் 10 இலட்சம் தொன் எடையுள்ளவை ஜேர்மனி மீது போடப்பட்டன. பெர்லின் தரைமட்டமானது.

(08ஆம் பக்கம் பார்க்க)

**ஜேர்மனிடம் சரணாகதியடைந்த பிணைக்கைதிகளை அடிமைகளாக்கி, ஐ.ஜி. ஃபார்பெனிடம் ஹிட்லர் வழங்கினார். அப்படிப்பட்ட அடிமைகளின் உதவியுடன் ஹிட்லரின் உத்தரவுப்படி ஆஷ்விட்சில் (Ausch Witz) இருந்த மரண முகாம்களில் பல லட்சக்கணக்கான யூதர்கள் மீது ஃபார்பென் அமோனியா விஷவாயுவைச் செலுத்திக் கொன்றார். ஜேர்மனிய இரசாயன விஞ்ஞான நுட்பங்கள் எல்லாம் இரண்டாவது உலகப் போர் சமயம் அமெரிக்காவை அடைந்து ஏராளமான இரசாயன கம்பனிகள் – அதாவது வெடிகுண்டு நிறுவனங்கள் இலாபத்தில் கொழித்தன.**



# கிழக்கின் அடிப்படைவாதக் குழுக்களுடன் நெருக்கத்தைப் பேண விரும்புகிறதா அமெரிக்கா?

(கொழும்பு)

கிழக்கில் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்களுடன் அமெரிக்கத் தூதுவர் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதன் உள்நோக்கம் குறித்து இராஜதந்திர வட்டாரங்களில் பலத்த சந்தேகங்கள் மேற்கிளம்பியுள்ளன.

இந்த நடவடிக்கை இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அத்துமீறித் தலையீடு செய்யும் நடவடிக்கை என்று கூறி கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாட்டின் உள்ளக விடயங்களில் அநாவசியமாக அமெரிக்கா தலையீடு செய்து வருவதாக 'த நேசன்' என்ற ஆங்கில செய்தித்தாள் குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செய்ல் சிசன், முஸ்லிம்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 20 அமைப்புக்களுடன் கலந்துரையாடியுள்ளார். 45 நிமிடங்கள் நீடித்த கலந்துரையாடலில் இலங்கையின் நிலவரம் குறித்தும் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள அமைப்புக்களின் வன்முறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் திருகோணமலையில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் அமெரிக்கத் தூதுவர் இலங்கையின் நடைமுறை அரசியல் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

எனினும் அமெரிக்க தூதுவரின் திருகோணமலை விஜயம் தொடர்பில் தமக்குத் தெரியாது என்று இலங்கையின் வெளியுறவுத் துறை அமைசசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க தூதுவரின் இந்த செயற்பாடு வியன்னா உடன்படிக்கை யின்படி இராஜதந்திர அத்துமீறல் சம்பவம் என்று 'த நேசன்' குறிப்பிட்டுள்ளது.

# விடுதலையானார் துமிந்த குமுறுகிறார் ஹிருணிக்கா



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் விடுதலையானது, நாட்டில் நீதித்துறை பிழையாக வழிநடத்தப்படுகின்றமைக்கான சான்றாக அமைந்துள்ளது என்று கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மகள் ஹிருணிக்கா குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில், நடைமுறை அரசாங்கத்தின் சட்டம் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே துமிந்த சில்வாவினால் கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தமது தந்தையான பாரத லக்ஸ்மனின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறான நிலையில் துமிந்த சில்வாவின் விடுதலை மேலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக ஹிருணிக்கா குறிப்பிட்டுள்ளார்.

சட்டக்கல்லூரியின் மாணவி என்ற நிலையில் இது நாட்டின் நீதித்துறைக்கு அச்சுறுத்தலான விடயம் என்றும் ஹிருணிக்கா தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் இன்னும் துமிந்த சில்வா, முழுமையாக குணமடையவில்லை என்று கூறப்பட்டது.

எனினும் பாரிய சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்பட்ட துமிந்த சில்வா நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் இருந்து வெளியேறியபோது அவர் பழைய உருவத்தில் எவ்வித மாற்றங்களையும் காணமுடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மின்சார. சபையை சாடுகிறார் சம்பிக்க



(கொழும்பு)

மின்சரசபையின் பிழையான கணக்கீடுகளே மின்சார கட்டண அதிகரிப்புக்கான காரணம் என்று முனனாள் மின்சாரத்துறை அமைசசர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதாக சம்பிகக ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இயங்குகின்ற தனியார் மின்சார உற்பத்தி நிலையங்கள் தாம் நிர்ணயித்த விலைகளில் மின்சார உற்பத்திகளை தேசிய உற்பத்திக்கு வழங்குகின்றன.

எனவே, இது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியான கணக்கீடுகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்று ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் மின்சாரத் தடை ஏற்படுத்தப்பட்டால் மணித்தியாலம் ஒன்றுக்கு நாட்டின் உற்பத்தி ஒரு வீத வீழ்ச்சி ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நஷ்டத்தில் ஓடுகிறது விமானசேவை நிறுவனம்

(கொழும்பு)

நட்டங்களை எதிர்நோக்கி வரும் விமான சேவைநிறுவனங்களுக்காக அமைச்சரவை மேலும் 315 பில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன்படி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்க்கு புதிதாக 6 விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. அத்துடன் அரச பாவனைக்காக நான்கு விமானங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

ஏற்கனவே ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 13 விமானங்களை கொண்டுள்ளது. இதில் 7 விமானங்கள் 10 வருடங்களாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தற்போது 20 பில்லியன் ரூபாய் நடைமுறை நட்டத்தில் இயங்கிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொலைபேசிகளை ஒட்டுக்கேட்க நவீன கருவிகள் இணைப்பு

## கொழும்பு வார இதழ் தகவல்

(கொழும்பு)

தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பதற்கான நவீன கருவிகளைத் தேசிய புலனாய்வுப் பிரிவு கொள்வனவு செய்துள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கருவிகளின் மூலம் கைத்தொலைபேசி மற்றும் தரைவழித் தொலைபேசி உரையாடலகளை ஒட்டுக்கேட்க முடியும்.

கடந்த ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ள இந்தக் கருவிகளின் மூலம், எந்தவொரு தொலைத்தொடர்பு நிறுவனத்தினதும் ஒத்துழைப்பு இல்லாமலேயே தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்க முடியும்.

எனினும், இந்த முறையின் மூலம் தொலைபேசிகளை ஒட்டுக கேட்பது சட்டவிரோதமானது என்றும் இதற்கு எதி ராக நீதிமன்றம் செல்ல முடியும் எனவும் சட்டவாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுவது நாட்டின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைச் சட்டதுக்கும், தனிநபர் உரிமைக்கும் முரணானது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக தொலைபேசிகளை ஒட்டுக் கேட்க வேண்டுமென்றால் அதறகு நீதிமன்ற உத்தரவு பெறப்பட வேண்டும் என்று மேற்படி சட்டவாளர் சங்கத்தின் பொதுச் செயலர் சஞ்சய கமகே தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றில் முன்னாள் புலிகள்

(கொழும்பு)

புனர்வாழ்வை நிறைவு செய்த 375 முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தை பார்வையிட்டனர்.

இந்தக் குழுவினர் எதிர்வரும் காலங்களில் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கும் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

# புலிகள் மனித உரிமைகளை மிதித்தபோது மனித உரிமைவாதிகள் எங்கே சென்றனர்

## கெஹலிய கேள்விக்கணை

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடதத்கூடாது என்று கோரிக்கை விடுக்கும் கன்டா மற்றும் மனித உரிமை அமைப்புகள் முன்னாள் புலிகளிடமும் புலம்பெயர் தமிழர்களிடமும் பணம் வாங்கிக் கொண்டு வேலை செய்வதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தம்மீதான மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பில் பேச வேண்டிய தரப்பினருடன் பேசி முடிந்துவிட்டது என்றும் இலங்கையில் மாநாட்டை நடத்தும் விடயத்தில் தடைகள் ஏதும் இல்லை என்றும் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

தம்மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கும் அமைப்புகள் பக்கச் சார்புடன் செயற்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் விடுதலைப்புலிகள் படுகொலைகளிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டபோது மனித உரிமை அமைப்புக்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் எங்கே போனார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மனித உரிமை அமைப்புகள் பணம் வாங்கிக்கொண்டு பேசுவதாக சுமத்தும் குற்றச்சாட்டு, தொடர்பில் என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்டபோது, இலங்கை மீது மனித உரிமை குற்றச்சாட்டு



சுமத்துபவர்களிடம் என்ன ஆதாரம் இருக்கிறது என்று இலங்கை அமைச்சர் கேட்டார்.

இலங்கை இறைமையுள்ள ஜனநாயக நாடு, இங்கு மூன்றாம் தரப்பு வந்து சுயாதீன விசாரணை எல்லாம் நடத்த முடியாது என்றும் அமைச்சர் கெஹெலிய கூறினார்.

# பௌத்தத்தைச் சிதைக்க சதித்திட்டம் தீட்டப்படுகிறதா?

(கொழும்பு)

நாட்டில் பௌத்த மதத்தை சிதைப்பதற்கு சதித் திட்டம் தீட்டப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ராவணா பலய என்ற அமைப்பு சந்தேகம் கிளப்பியுள்ளது.

இலங்கையில் பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேற்படி பௌத்த மத அமைப்பான ராவணா பலய குற்றம் சுமத்தியுள்ளது.


இது தொடர்பில் அந்த அமைப்பு, பௌத்த சாசன அமைச்சில் முறைப்பாட்டை செய்துள்ளது.

அண்மைக்காலமாக முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு தமது அமைப்பின் மீது குற்றம் சுமத்தப்படுவது திட்டமிடப்பட்ட செயல் என்று ராவணா பலய குறிப்பிட்டுள்ளது.

இது பௌத்த மதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ள ராவணா பலய - வடக்கு கிழக்கில் பௌத்த மதச்சின்னங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் கோரியுளளது.

# பாரம்பரிய கலை அம்சங்கள் சமூகத்தில் பரவலாக்கப்படல் வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது இனத்தின் பாரம்பரிய இசை மற்றும் கலை அம்சங்கள் பரம்பரை பரம்பரையாக ஒரு வரையறுக்கப்பட்ட சமூகத்திற்குள் மட்டுமே செல்வாக்கு செலுத்துகிறது என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இடம்பெற்ற சரவணபவன் பிரணவன் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது இனத்திற்கே உரித்தான பாரம்பரிய இசை மற்றும் கலை அம்சங்கள் ஒரு பரம்பரையாக பின்பற்றி வருகின்ற ஒரு குறிக்கப்பட்ட சமூகத்திற்குள் மட்டுமே செல்வாக்குச் செலுத்தி வருகிறது. எனவே இந்த நிலைமை மாற்றப்படல் வேண்டும். அதன் மூலம் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் கொண்டு செல்லப்பட்டு வளர்க்கப்படும் போதே சமூகத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் எங்களுடைய பாரம்பரிய கலைகள் கொண்டு செல்லல் அவசியமாகிறது. இதன்மூலம் சமூக பிறழ்வுக்குள் செல்கின்ற இளைய தலைமுறையின்ரை மாற்றி கட்டுக்கோப்புள்ள நல்ல சமுதாயத்தை ஏற்படுத்த முடியும். எனவே பாரம்பரிய மிக்க இவ்வாறான கலைகள் சமூகத்தில் பரவலாக்கப்படல் காலத்தின் தேவையாகின்றது.

தற்போதைய சூழலில் எங்களிடம் இதற்கான வளங்கள் நிறைவாகவே உள்ளன. யாழ்ப்பாணம் - மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக்கல்லூரி உருவாக்கியுள்ள நுண்கலை பட்டதாரிகள் இதற்கு போதுமானதாகவே உள்ளனர். இவர்களை கொண்டு பாடசாலை மட்டத்திலிருந்தே இவ்வாறான கலைகளை உருவாக்க வேண்டும் என்பதோடு எமது கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாதுகாத்து வளர்க்கும் சமூகமாக நாம் மாறவேண்டும். அப்போதுதான் மழுங்கடிக்கப்படுகின்ற அல்லது மறக்கப்படுகின்ற எமது பண்பாட்டு கலை அம்சங்களை தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க முடியும். என்றார்.

இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிப்பாளர் லியனகே, ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேல்.ஆனந்தன், ஓய்வுநிலை இசை ஆசிரியரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற செயலாளருமான சங்கீத பூசணம் ச.பாலசிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# அரச ஊழியர்களுக்கிடையே ஆக்கத்திறன் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருப்போரின் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் நோக்குடன் சிறுகதை, சிறுவராக்கம், பாடலாக்கம், கவிதையாக்கம், குறுநாடகம் மற்றும் ஓவியம் என ஆறு துறைகளில் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

போட்டிக்கான ஆக்கங்கள் யாவும் 2013.06.30 அன்றோ அதற்கு முன்னரோ செயலாளர், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு 8 ஆம் மாடி செத்சிரிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டித்தொடர் 2013 எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு: 011 287 2002, 011 287 2001 - 131 என்ற இலக்கங்கள் வழியாக தொடர்புகொள்ளலாம்.

(10)

# எங்கே செல்கிறது யாழ்ப்பாணம்




அண்மைக்காலமாக யாழ்.குடா நாட்டில் உள்ள இளந்தலை முறையினரின் செயற்பாடுகள் தொடர்பாக பத்திரிகைகளில் நாளாந்தம் வெளிவரும் செய்திகள் கவலையளிப்பதாகவே உள்ளது.

பொழுது போக்குவதற்காக சுமார் இரண்டரை மணிநேரம் பார்க்கும் தென்னிந்திய திரைப் படங்களில் வரும் வன்முறைச் சம்பவங்களை தமது வாழ்விலும் புகுத்தியுள்ள எமது இளைஞர்களை என்னவென்று சொல்வது? சினிமா வாழ்க்கையாகாது என்பது இவர்களுக்கு ஏன் புரிவதில்லை.

குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் வாள் வெட்டுச் சம்பவங்களும், அடிதடி, கோஷ்டி மோதல்களும், மதுபான விற்பனை நிலையங்களில் அதிகரித்த இளைஞர் கூட்டங்களுமென எங்கிருந்து வந்தது இந்த நிலைமை.

இன்று குடா நாட்டில் பிள்ளைகளுக்கு புத்திமதி கூறவே பெற்றோர்கள் அஞ்சுகின்றனர். ஏன் இந்த நிலைமை இவ்வாறு இளைஞர்கள் சீரழிவதற்குக் காரணம் என்ன? இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான வழி தான் என்ன?

அரசியற்போராட்டம், உரிமைப் போராட்டம் என அறைகூவல் விடுத்துக்கொண்டிருக்கும் நாம் எமது இளந்தலைமுறையினர் சீரழிந்து செல்வதனைக் கவனிக்காது விட்டது ஏன்?

**இ.இந்திராணி**
**இணுவில்**

# திருத்தப்படாத முட்கொம்பன் வீதி; போக்குவரத்தில் பெரும் சிரமம்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட முட்கொம்பன் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

பூநகரியில் இருந்து 11 கிலோ மீற்றர் கொண்ட இந்த வீதி அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம் ஊடாக யாழ்ப்பாணம் செல்லக்கூடிய இலகுவான மார்க்கமாகக் காணப்படுகின்றது.

தற்போது இவ்வீதி பாவனைக்குதவாத நிலையில் சேதமடைந்துள்ளதால் இதனூடாக பயனம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே போக்குவரத்துக்கு முக்கியமான இவ்வீதியைப் புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கெள்கின்றனர். (140)

# முரசின் இன்றைய பலன்

**(29.04.2013 - திங்கட்கிழமை)**

விஜய வருஷம் சித்திரை மாதம் 16 ஆம் திகதி.
நட்சத்திரம் கேட்டை. முற்பகல் 11.44 வரை. திதி சதுர்த்தி மாலை 05.17 வரை. இராகுகாலம் 07.28 - 08.58 வரை.
சுபநேரம் 11.58 - 1.28 வரை. சித்தம்.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்** | சம்பந்தமில்லாப் பணி ஒன்று குறுக்கிடலாம். சூழ்நிலை அறிந்து, செயறபடுவது நல்லது. தொழில், உள்ள அனுகூலத்தை, பிறரிடம் சொல்ல வேண்டாம். குறைந்த பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு நன்மை. பழைய விவகார சிக்கல் தீரும். |
| **ரிஷபம்** | பேச்சில் நிதாதனம் பின்பற்ற வேண்டும். வீண் கௌரவத்திற்காக போட்டி, பந்தயம் வேண்டாம். ஆர்வத்தையும் சுறுசுறுப்பையும் சொந்தப் பணிகளில் திருப்பி விடுக. தொழிலில் குறுக்கீடு வந்து, மாற்று உபாயத்தால் சீராகும். வரவை விட செலவு கூடும். |
| **மிதுனம்** | உங்களுக்கு வாக்குறுதி தந்தவர் நிறைவேற்ற மறுக்கலாம். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். தொழில் நிலை, சுமாரான அளவில் இருக்கும். வரவை விட செலவு கூடும். உடல் நலத்திற்கு உணவில் கவனம். மறதியால் சிறு சச்சரவு வந்து நீங்கும். |
| **கடகம்** | எண்ணமும், செயலும் உற்சாகம் பெறும். முடியாதிருந்த வேலைகளையும், சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், முன்னேற்றம் பெறும். சராசரி பணவரவு. கடன் வசூலாகும். தொடங்கிய காரியம் வெல்லும். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். |
| **சிம்மம்** | சிறிய வேலைக்கும், அதிக முயற்சி தேவைப்படலாம். அனுபவசாலியின் ஆலோசனை நல்வழியில் நடத்தும். தொழில், இருக்கிற அனுகூலத் தன்மை பாதுகாக்கவும். சேமிப்பு செலவுக்கு பயன்படும். வாகன பயணத்தில் கவனம். புதிய அறிமுகம் வரும். |
| **கன்னி** | மனதில் அதிக நம்பிக்கையுடன் செயறபடுவீர்கள். முயற்சிக்கு பலன் வந்து சேரும். தொழில், செழிக்க அனுகூலம். பயன்படுத்தி உபரி வரவு பெறுவீர்கள். விரும்பிய பொருள் வாங்குவீர்கள். இனிய பயணம் வாய்க்கும். அரசிடமிருந்து உதவி. |
| **துலாம்** | மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். சிரம சூழ்நிலை விலகி, எதிர்பார்த்த நன்மை பெறுவீர்கள். தொழில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவில், குடும்புத் தேவை நிறைவேற்றுவீர்கள். உறவினர் இல்ல சுபநிகழ்ச்சிக்கு அழைப்பு. |
| **விருச்சிகம்** | உங்கள் கௌரவத்திற்கு சிறு சோதனை வரலாம். குடும்பப் பெருமை உணர்ந்து பொறுமையுடன் செயறபடுவீர்கள். தொழில், அதிக உழைப்பு அவசியம். மிதமான பணவரவு. போக்குவரத்தில் கவனம். தாய்வழி உறவினரிடமிருந்து ஆதரவு கிடைக்கும். |
| **தனுசு** | எதிர்ப்பாக செயறபட்டவர், மாறுவார். சமூகத்தில் பெற்ற அந்தஸ்தை பாதுகாத்துக் கொள்வீர்கள். தொழில், செழிக்கும். உபரி வருமானத்தில், கொஞ்சம் சேமிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் மனங்குளிர நடப்பர். இசைப் பாடலை ரசித்து ஓய்வு. |
| **மகரம்** | உறவினர் ஒருவரின், பாசம் வியப்பைத் தரலாம். யாரையும் விமர்சிக்க வேண்டாம். தொழில், உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு. பயன் தராப் பொருள் வாங்குவதைத் தவிர்க்கவும். வெளியூரிலிருந்து மனம் உவக்கும் செய்தி. |
| **கும்பம்** | நண்பரின் உதவியால், பெருமிதம் கொள்வீர்கள். எதிர்கால நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், போட்டி குறையும். தாராள பணவரவு. வீடு, வாகன திருத்தம், மாற்றம் செய்ய நேரும். அயலவர் ஆதரவாக நடப்பர். புத்திரரின் செயல், மனதை மகிழ்விக்கும். |
| **மீனம்** | முன்யோசனையுடன் செயறபடுவீர்கள். முன்பு செய்த நற்பணிக்கு, பாராட்டு தேடிவரும். தொழில், அபிவிருத்தி அடைந்து, எதிர்கால நம்பிக்கை வளரும். பணவரவு திருப்திகரமாகும். வழிபாடு நடத்துவீர்கள். குடும்பத்துடன் உல்லாசமாய்க் கழிப்பீர்கள். |

# விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவிக்கான சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையிலான போட்டிப்பரீட்சை (2012) இற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய இறுதித்தி திகதி 27.05.2013 ஆகும். ஆட்சேர்க்கும் ஒழுங்கு விதிகள், நிபந்தனைகள், தகைமைகள், வயதெல்லை, ஏனைய தகைமைகள் பரீட்சை நிபந்தனைகள் போன்ற விபரங்களை 26.04.2013 வெள்ளிக்கிழமை அரச வர்த்த மானியில் பார்வையிடமுடியும். (105)

# மீனவர் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கத் தயக்கம் ஏன்?




இந்திய மீனவர்கள் மீது இலங்கை கப்பற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலுக்கு எதிராக கடும் நடவடிக்கை தேவை.

இந்த விடயத்தில் தயக்கம் காட்டுவது என்பது மத்திய அரசு தமிழகம் மற்றும் தமிழக மீனவர்கள் மீது அக்கறையில்லை என்பதையே நிரூபிக்கிறது என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

சிறைப் பிடித்த மீனவர்களை விடுவிகக கோரி பல்வேறு அரசியல் கட்சிகள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர். மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெறும் போது தமிழக அரசும் பிரதமருக்கு கடிதம் எழுதுகிறது.

இதனை அடுத்து மத்திய அரசு இலங்கை அரசிடம் முறையீடு செய்கிறது. நாடாளுமன்றத்தில் அறிக்கை வெளியிடுகிறது. அதனுடன் தனது பணி நிறைவடைந்து விட்டது என நம்புகிறது எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்துக்கும் மின்சாரம் கிடைக்கும்



(மதுரை)

கூடங்குளத்தில் உற்பத்தியாகும், 2,000 மெகா வாட் மின்சாரத்தில், தமிழகத்திற்கு, 925 மெகாவாட் வழங்க இருப்பதாக, அணுசக்திதுறை தெரிவித்துள்ளது. நெல்லை, கூடங்குளம் அணுமின் நிலையத்தில், முதலாவது யூனிட் அமைக்கப்பட்டு, 1,000 மெகாவாட் மின் உற்பத்தி துவங்க, தயாராக உள்ளது.

இரண்டாவது யூனிட்டிலும், 1,000 மெகா வாட் உற்பத்தி செய்வதற்கான, கட்டமைப்புப் பணிகள் நடந்து வருகின்றன.

இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும், தமிழகத்திற்கே வழங்க வேண்டும் என, தமிழக அரசு முதல், தொழில், வர்த்தக அமைப்புகள் வரை, குரல் கொடுத்து வருகின்றன.

இதற்காக, மதுரை சிறு குறுந் தொழில் அதிபர்கள் சங்கம் (மடீட்சியா) டில்லி நாடாளுமன்று முன், போராட்டம் நடத்தியது. தமிழக மின் தேவைக்கு, மின் பாதை அமைக்க வேண்டும் கூடங்குளம் மின்சாரத்தை, முழுமையாக தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என, வலியுறுத்தி, பிரதமர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

இதைத்தொடர்ந்து, அணு சக்தி துறையின் சார்பு செயலர் சி.டி.சாக்கோ, மடீட் சியா நிர்வாகிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், கூடங்குளத்தில் உற்பத்தியாகும், 2,000 மெகாவாட் மின்சாரத்தில், தமிழகத்திற்கு, 925 மெகாவாட், கர்நாடகத்திற்கு, 442 மெகாவாட், கேரளத்திற்கு, 266 மெகாவாட், புதுச்சேரிக்கு, 67 மெகாவாட், ஒதுக்கீடு செய்யப்படாதவை, 300 மெகாவாட் என, குறிப்பிட்டுள்ளார். அணுசக்தித் துறையின் இந்த அறிவிப்புக்கு, மடீட்சியா தலைவர் மணிமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# இனிவரும் புயலுக்கு "மகேசன்" என்று பெயர்

வானிலை ஆய்வுக்குப் பயன்படுத்தும் வகையில், காரைக்காலில் ஓரிரு மாதங்களில் ரேடார் மையம் தொடங்கப்படும் என்று சென்னை 'வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட எஸ்.ஆர்.ரமணன், செய்தியாளர்களிடம், செயற்கைக்கோள் மற்றும் ரேடார் ஆகியவற்றைப் பயன்படுத்தி வானிலை ஆய்வு நடத்தி வருகிறோம்.

இப்போது, தமிழ்நாட்டில் சென்னையில் மட்டும் ரேடார் மையம் உள்ளது. கூடுதலாக காரைக்காலில் ரேடார் மையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, ரேடார் கருவியும் அமைக்கப்பட்டு வருகிறது. விரைவில் இம் மையம் செயற்படத் தொடங்கும். இதேபோல, ராமநாதபுரம் மாவட்டம், புல்லாங்குடியில் ரேடார் மையம் அமைப்பதற்கான இடத்தை தமிழக அரசு ஒதுக்கித் தந்துள்ளது. இங்கு,' எதிர்காலத்தில் ரேடார் மையம் அமைக்கப்படும்.

காரைக்காலில் அமைக்கப்படும் ரேடார் மையம் மூலம் மேலும் கூடுதலாக சுமார் 400 கிலோ மீற்றர் தூரத்துக்கு, அதாவது இலங்கை நாடு வரை உள்ள வானிலை நிகழ்வுகளைக் கூட ஆய்வு செய்ய முடியும்.

இந்தியா, இலங்கை உள்ளிட்ட 8 நாடுகளின் சார்பில் தலா 8 பெயர்கள் அடங்கிய பட்டியலை ஜெனிவாவில் உள்ள உலக வானிலை கழகத்தில் கொடுப்பர். இப் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு வங்கக்கடல், அரபிக் கடலில் ஏற்படும் புயலுக்கு ஒவ்வொரு நாட்டின் பெயரும் வரிசைப்படி வைக்கப்படும்.

அதன்படி, இனி ஏற்படப் போகும் புயலுக்கு மகேசன் என்று பெயர் வைக்கப்படும். இது, இலங்கை நாடு வைத்த பெயர் என்றார் எஸ்.ஆர்.ரமணன்.

# அவர் இன்னும் மறக்கவில்லை



நாகார்ஜுன்-நயன்தாரா ஜோடியாக நடித்த கிரீக் வீருடு என்ற படம, லவ் ஸ்டோரி என்ற பெயரில் தமிழில் வருகிறது. இந்தப் படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா, சென்னை ஆர்.கே.வி. ஸ்டுடியோவில் நடந்தது. பாடல்களை இசையமைப்பாளர் தமன் வெளியிட்டார்.

விழா மேடையில், நயன்தாராவின் பனர் மிகப்பெரிய அளவில் வைக்கப்பட்டு இருந்தது. அதில், அவருடைய கையில் பிரபு என்று பிரபுதேவா பெயரை பச்சை குத்தியிருந்தது துண்டாக தெரிந்தது.

விழாவில் நடிகர் மன்சூர் அலிகான் கலந்து கொண்டு பேசும் போது, நயன்தாரா பச்சை குத்தியிருந்தது பற்றி குறிப்பிட்டு பேசினார். அவர் பேசியபோது,

பிரபுதேவா மீது நயன்தாராவுக்கு எவ்வளவு காதல் இருந்தால் அவர் பெயரை தன் கையில் பச்சை குத்தியிருப்பார்? நயன்தாரா அழகி மட்டுமல்ல, ராசியானவரும் கூட. அவர் நடித்த படங்கள் எல்லாம் வெற்றி பெறுகின்றன. பிரபுதேவாவின் பெயரை நயன்தாரா தன் கையில் இருந்து இன்னும் அழிக்காமல் வைத்திருப்பதில் இருந்தே அவரை இவர் இன்னும் மறக்கவில்லை என்று தெரிகிறது.

நயன்தாராவின் ராசியால்தான் பிரபுதேவா இந்தி பட உலகுக்குப போய் ஒரு படத்துக்கு ரூ.15 கோடி சம்பளம் வாங்குகிறார். இப்படி நானும் உயர்வதற்கு, எந்த நடிகையும் என் பெயரை பச்சை குத்தவில்லையே என்றார்.

# கர்நாடக அரசியல் களம் அடுத்த முதல்வர் யார்



கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு, தலித் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை மாநில முதல்வராகத் தேர்வு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அந்த மாநில முன்னாள் முதல்வரும், முன்னாள் மத்திய அமைச்சருமான எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

பெங்களூரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பத்திரிகையாளர்கள் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது, 52 ஆண்டு காலமாக அரசிய லில் ஈடுபட்டு வருகிறேன். 40 ஆண்டு காலமாக காங்கிரஸில் இணைந்து செயலாற்றி வருகிறேன்.

கர்நாடகத்தில் மூத்த அரசியல்வாதிகளில் நானும் ஒருவர் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. தேசிய அளவிலும், மாநில அளவிலும் அனைத்து உயர் பதவிகளை வகித்துள்ளேன்.

80 வயதானவர்கள் பதவியிலிருந்து விலகி இளைஞர்களுக்கு வழிவிட வேண்டும் என காங்கிரஸின் மேலிடம் எடுத்த முடிவின்படி, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பதவியிலிருந்து நான் விலகினேன். மேலும், நான் முதல்வராக இருந்தபோது பெங்களூரை தகவல் தொழில்நுட்ப நகரமாக மாற்றினேன். இதற்கு விப்ரோ, இன்போஸிஸ் நிறுவன உரிமையாளர்களான அஜிம் பிரேம்ஜி, நாராயணமூர்த்தி ஆகியோர் உதவினர். எனது முயற்சி இல்லையென்றால், அதன் பயனை ஹைதராபாத் நகரம் அடைந்திருக்கும்.

கடந்த தேர்தல்களில் இதை வாக்குகளாக மாற்றிக் கொள்ள காங்கிரஸ் தவறிவிட்டது. தேர்தலுக்கு பிறகு தலித் சமுதாயததைச் சேர்ந்த ஒருவரை முதல்வராக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

## நல...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி...,.)

உலகப்போர் சமயம் இப்படியாக அமெரிக்காவில் வளர்ந்த 18 மாபெரும் அமோனியா வெடிமருந்து நிறுவனங்களில் டுபாண்ட், டௌ குறிப்பிடத்தக்கவை. போர் நின்றாலும் வெடி உப்புகள் தீரவில்லை. அவையெல்லாம் இரசாயன உரங்களாக மாறி விளைநிலங்களில் கொட்டப்பட்டன. மண்ணை மாசாக்கும் இந்தப் பாவிகளை ஏசு மன்னிப்பாரா என்று தெரியவில்லை.

இரசாயன ஊட்டங்கள் நோய்களை ஏற்படுத்தும் என்று பல நாடுகளில் உள்ள மருத்துவப் பல்கலைக் கழகங்கள் எச்சரித்தன. அதனையும் மீறி மண்ணில் இரசாயனங்கள் கொட்டப்பட்டது. இது பற்றாமல் அறுவடை செய்த தானியங்களைப் பக்குவப்படுத்துவதிலும், பக்குவப்படுத்தியதைக் கெடாமல் பாதுகாக்கும் வழியிலும் இரசாயனங்கள், நிறங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலை நாடுகள் இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு மேலும் மேலும் ஊக்கமளித்ததுடன் இரசாயன விபரீதங்கள் பற்றிப் பேசிய மருத்துவர்களுக்கு எச்சரிக்கைகள் விடப்பட்டன. ஒரு சிலர் மீது சட்டம் பாய்ந்தது. மேலை நாடுகளில் பசுமைப்புரட்சி ஏற்படும் முன்பே இரசாயனப் புரட்சி ஏற்பட்டு இரசாயன உரங்களும் பூச்சிமருந்துகளும் பயன்பாட்டுக்கு வந்து இயற்கை விவசாயம் முற்றிலும் ஒழிக்கபபட்டது.

# ஏன் இந்தப் புறக்கணிப்பு

மத்திய அரசு சார்பில் கொண்டாடப்படும், இந்திய சினிமா விழாவில், தமிழக சினிமாத்துறையின் பங்களிப்பு, முற்றிலுமாக இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளதை கண்டித்து, பிரதமரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

பிரமாண்டமான இந்திய சினிமாவை போற்றும் வகையில், டில்லியில், மத்திய அரசின் சார்பில், பிரமாண்டமான விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த, 25 ஆம் திகதி தொடங்கிய விழா கொண்டாட்டங்கள், நாளை (30.04) வரை நடக்கின்றன.

தாதா சாகேப் பால்கேயின் முதல் சினிமாவான, "ராஜா ஹரிச்சந்திரா" 1913 ஆம் ஆண்டு வெளியானது. இதை மையமாக வைத்தே, இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, நடந்து வருகிறது. ஆனாலும், விழாவில், முற்றிலும் இந்தி சினிமாவே முன்னிலைப்படுத்தப்படுவதாக, குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின், தென்காசி சட்டசபை தொகுதி எம்.பி., லிங்கம் சார்பில், மத்திய செய்தி ஒளிபரப்புத் துறை அமைச்சர் மணீ' திவாரியிடம், ஒரு மனு அளிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில், கூறப்பட்டுள்ளதாவது,

இந்திய சினிமாவில், 5,000 சினிமாக்களை தயாரித்துள்ள பெருமை, தமிழ் சினிமா துறைக்கு உண்டு. தியாகராஜ பாகவதரில் தொடங்கி, சிவாஜி, எம்.ஜி.ஆர்., இளையராஜா, ரகுமான், ரஜினி, கமல் என, மிகப்பெரிய ஜாம்பவான்களை எல்லாம், சினிமா உலகத்திற்கு தந்தது தமிழ் சினிமாவே. தமிழ் சினிமாவைச் சேர்ந்த, எண்ணற்ற தொழில்நுட்ப கலைஞர்களை, இன்றும் கூட பாலிவுட் பயன்படுத்துகிறது.

அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தமிழ் சினிமாவையும், அதன் பங்களிப்பையும், மத்திய அரசு, இப்போதைய விழாவில் இருட்டடிப்பு செய்துள்ளது. எல்லாமே, இந்தி சினிமா பற்றியே உள்ளது.

இந்திய சினிமா என்றால், இந்தி சினிமா மட்டும் தானா? இந்த நிலை, வேதனையளிப்பதாக உள்ளது. இவ்விஷயத்தில் உடனடியாக தலையிட்டு, மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# கே.சி.சி.சி. கிரிக்கெட் தொடரின் அரையிறுதியில் பல்கலை, யாழ். சென்றல், ஜொனியன்ஸ்

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு ஜொனியன்ஸ் யாழ். பல்கலைக்கழகம், யாழ். சென்றல் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் யாழ். மாவட்ட முன்னணி கிரிக்கெட் அணிகள் பங்குகொள்ளும் 30 ஓவர்கள் கிரிக்கெட் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ். பல்கலைக்கழக மைதானங்களில் நடைபெற்றன.

இதில் முதலாவதாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் நியூஸ்ரார் அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி 27 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அமிர்தயன் 66, அகிலன் 32, காண்டீபன் 17, பிரதீபன், அன்புஜன் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றமணன் இரண்டு, நிஷா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூஸ்ரார் அணி தீவா, சஞ்சீவ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இறுதி வரை வெற்றிக்காகப் போராடியது. இருப்பினும் ஜொனியன்ஸ் அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் தோல்வியைத் தழுவியது. இறுதியில் நியூஸ்ரார் அணி 27.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் தீவா 49, சஞ்சீவ் 26, நிஷா 22, றமணன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். இவ்வெற்றியின் மூலம் ஜொனியன்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து மாலை நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் மானிப்பாய் பரிஸ் அணியும், யாழ். சென்றல் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மானிப்பாய் பரிஸ் அணி கிசோகுமாரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மானிப்பாய் பரிஸ் அணி 28.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விநோத் 38, கிசோகுமார் 40, துவாரகன் 28, திலக் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சலீஸ்ரன் நான்கு, யசிந்தன், சுபதீஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி றோகான், ரஜீவ்குமார் ஆகியோரின் பொறுப்பானஆட்டத்தின் மூலம்இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் யாழ். சென்றல் அணி 25.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பாலேந்திரா 21, கலிஸ்ரன் 25, ரஜீவ்குமார் 34, றோகான் 38 ஓட்டங்களைப் பெற்றனர். இவ் வெற்றியின் மூலம் யாழ். சென்றல் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும், அரியாலை ஐக்கிய அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ்.பல்கலைக்கழக அணி 26.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்ரன் 47, தசநீதன் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துவாரகன் ஆறு, சிந்துஜன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 138 ஓட்டங்களைப்பெற்றால்வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை ஐக்கிய அணி 26.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிரோஜ் 13, நிரேசன் 12, சிந்துஜன், வதுஷன் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வினோதரன் மூன்று, ஜனதரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றி மூலம் யாழ். பல்கலைக்கழக அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. (42)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு திருநெல்வேலி மத்தி வங்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி வாழ் மக்களுக்கிடையே பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் உட்பட பல விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. திருநெல்வேலி பாரதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் கயிறிழுத்தல், பலூன் ஊதி உடைத்தல், சங்கீதக் கதிரை மெதுவான சைக்கிள் ஓட்டம், பணிஸ் சாப்பிடுதல், மாவுதீ காசு எடுத்தல் போன்ற பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் இறுதியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதில் பலூன் உடைத்தல், சங்கீதக் கதிரை மற்றும் உத்தியோகத்தர்களுக்கான சங்கீதக் கதிரை போன்ற நிகழ்வுகளில் போட்டியாளர்கள் உற்சாகமாகப் பங்குகொள்வதைக் காணலாம். (26)

# கூட்டுப் பொறுப்புடையவர்களாக பல்கலை மாணவர் வெளிவரவேண்டும்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் படிப்புக்களை மட்டும் நம்பியிராமல் விளையாட்டுக்கள் மூலம் சிறந்த கூட்டுப் பொறுப்புடையவராக பல்கலைக்கழக மாணவர்கள் வெளிவர வேண்டும் என பல்கலைக்கழக விளையாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் சுனில் குணவர்தன தெரிவித்தார்.

11ஆவது பல்கலைக்கழக விளையாட்டு விழா தொடர்பான செய்தியாளர் மாநாடு அண்மையில் கொழும்பு ஒலிம்பிக் இல்லத்தில் இடம்பெற்றது. அதன் போது அவர் தெரிவித்ததாவது, பல்கலைக்கழகங்களில் நல்லதொரு சிறந்த உடல் ஆரோக்கியம் உள்ள ஒருவர் தான் எதிர்காலத் தலைவராக வரமுடியும்.

நாங்கள் தற்போது பல்கலைக்கழகத்திற்கு புதிதாக மாணவர்களை சேர்க்கும் போது அவர்களுக்கு இருவாரம் பயிற்சி வழங்குகின்றோம். ஆனால் அதைக்கூட எதிர்க்கின்றனர்.

ஆனால் தற்போதைய சுகாதார நிலைமையில் அனைவருக்கும் உடற்பயிற்சி முக்கிய தேவையாக உள்ளது. நாங்கள் எதிர்காலத்தில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கு அமைய சகல பல்கலைக்கழகங்களிலும் நீச்சல் தடாகம், விளையாட்டு அரங்கம், உடற்பயிற்சி நிலையம் என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம்.

பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது பட்டம் பெற்றாலும் அரசியல்வாதிகளின் தயவை நாடுகின்றனர். காரணம். அவர்களுக்குத் தேவையான அனைத்து வகையான ஆளுமைகள் இல்லாமலே காரணம் ஆனால், தற்போது நாங்கள் எந்தவொரு பட்டதாரி மாணவர்களுக்கும் அரசியல்வாதிகளின் உதவியைப் பெறாத அளவுக்கு முழுமையான பயிற்சியை வழங்கி சர்வதேச தரத்திற்கு அமைவான பட்டதாரிகளை எதிர்காலத்தில் சந்தையில் விடவுள்ளோம்.

அப்போது தான் எங்களது பட்டதாரிகள் தரம் வெளி உலகுக்கு சரியாகத் தெரியவரும். பல்கலைக்கழகங்களில் இருந்து குறைந்த அளவுக்கு சர்வதேச விளையாட்டுப் போட்டிக்கு தயார்படுத்தும் தளமாக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் அமையும். அதேநேரம்ஏனைய நாடுகளைப் பொறுத்தவரையில்பல்கலைக் கழகங்களில் உள்ள மாணவர்களே சர்வதேச போட்டிகளில் பிரகாசிக்கின்றனர்.

எமது பல்கலைக்கழகங்களில் இருந்து அடுத்துவரும் சர்வதேசப் போட்டிகளில் குறைந்தளவு 35 வீர, வீராங்கனைகளை தயார்படுத்த எண்ணியுள்ளோம். அதற்கான பயிற்சிகளும் வழங்கப்படும். அது மட்டுமல்லாமல் அரசு அதற்கான நிதி உதவிகளை வழங்கவுள்ளது.

பல்கலைக்கழகங்களில் தற்போது. குறைந்தளவு 20 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அதனைஅமுல்படுத்தியும் காட்டியுள்ளோம் என்றார்.

கூட்டுப் பொறுப்புள்ள ஒரு சமூகத்தின் மூலமே பொருளாதார ரீதியிலும் நிமிர முடியும். அந்த வகையில் மேலத்தேய நாடுகளில் தற்போது பொருளாதாரத்தை ஈடுகொடுக்கும் முக்கிய துறையாக விளையாட்டுத்துறை விளங்குகின்றது. அதாவது விளையாட்டில் சாதிப்பதன் மூலம் அது சாத்தியமாகின்றது. இதனை கருத்திற்கொண்டு எமது இளைஞர்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாவட்ட மட்ட வலைப்பந்து
## இளவாலை மெய்கண்டான் சம்பியன்

(ஆவரங்கால்)

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் ஆவரங்கால் இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் 'இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அணியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும் மோதின. மூன்று செட்களைக் கொண்ட இத்தொடரின் முதல் செட்டை 25-15 என்ற கணக்கில் கைப்பற்றி இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அணி முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இரண்டாவது செட்டை 25-19 என்ற கணக்கில் கைப்பற்றிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி சமப்படுத்தியது. வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதிச் செட்டில் வீறுகொண்ட இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அணி 25-14 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும்,புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதல் சிறப்பான முறையில் செயற்பட்ட புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

# பூநகரிக் கோட்ட கபடி முடிவுகள்

கிளிநொச்சி –பூநகரிக் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டி முடிவுகளின் விபரம் வருமாறு: 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில், முதலாமிடத்தை பூநகரி மகாவித்தியாலயம், இரண்டாமிடத்தை முழங்காவில் மகாவித்தியாலயம், மூன்றாமிடத்தை பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பூநகரி மகாவித்தியாலயம், இரண்டாமிடத்தை முழங்காவில் மகாவித்தியாலய அணிகள் பிடித்துக் கொண்டன.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடம் முழங்காவில் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், மூன்றாமிடம் பூநகரி மகாவித்தியாலயம், பெண்களுக்கான போட்டியில் முதலாமிடம் பூநகரி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் முழங்காவில் மகாவித்தியாலயம் ஆகிய அணிகள் பிடித்துக்கொண்டன. (160)

# அழியும் காலத்தில் புலிகள் புலம்பெயர் சமூகத்தின் நிதியில் தங்கியிருந்தனர்

**- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.**

வெளிநாட்டில் எல்.ரீ.ரீ.ஈயின் நிதி திரட்டும் பொறிமுறை ஐந்து விதமாக இயங்கி வந்தது.

முதலாவது முறை நிலையான கட்டளை என்பதன் ஆங்கிலப்பதமான ஸ்ராண்டிங் ஓடர் என்பதன் முதல் எழுத்துக்களான "எஸ்.ஓ" என்பதால் அழைக்கப்பட்டது. இது எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள் தங்கள் வங்கிகளினூடாக குறிப்பிட்ட ஒரு தொகையை மாதாந்தம் நேரடியாக அவனுடைய அல்லது அவளுடைய நாட்டில் இருக்கும் எல்.ரீ.ரீ.ஈயின் முன்னணி அமைப்புக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் ஒரு முறையாகும். ஒப்பீட்டளவில் இது ஒரு சிறிய தொகை, ஆனால், ஒழுங்காக அனுப்பப்படுவதை உத்தரவாதம் செய்கிறது. இதில் கட்டாயப்படுத்தல் கிடையாது, ஏனெனில் இந்தப் பங்களிப்பை செய்பவர்கள் அனைவரும் எல்.ரீ.ரீ.ஈயின் உண்மையான ஆதரவாளர்கள் அதை அவர்கள் விருப்பத்துடன் செய்தார்கள். இந்த வழியினூடக திரட்டப்படும் நிதி ஒவ்வொரு நாட்டிலும் எல்.ரீ.ரீ.ஈயின் கிளைகள் அல்லது முன்னணி அலுவலகங்கள் நடத்துவதற்கு பயன்பட்டன.

இரண்டாவது முறை வருடாந்த பொது சேகரிப்பு ஆகும். இதில் தமிழர்கள் அவர்கள் ஆதரவாளர்களோ அல்லது இல்லையோ அனைவரும் இலக்கு வைக்கப்படுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட அளவான தொகை சில தவணைகளில் செலுத்தப்படுவதற்கான உறுதிமொழி அவர்களிடமிருந்து பெறப்படுகிறது.

நிர்ப்பந்தம், அச்சுறுத்தல், மற்றும் கட்டாயப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் வாக்களித்த தொகையை மக்கள் செலுத்துவதற்காக, அல்லது தொகையினை அதிகரிப்பதற்காக இந்த சேகரிப்பு முறையில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதுண்டு. தமிழர்களை பயப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு இலகுவான வழி, இலங்கையில் வாழும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஊறு விளைவிக்கப் போவதாக அச்சுறுத்துவதேயாகும். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் சொந்த விருப்பத்துடன்கூட இதை செலுத்தியுள்ளார்கள். முன்னர் புலிகளின் நிதி சேகரிப்பாளர்கள் தொண்டர் அடிப்படையிலேயே, பணியாற்றினார்கள், பின்னர் அவர்கள் சேகரிக்கும் தொகைக்கு ஏற்றதான ஒரு தரகுப் பணம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் விளைவாக நிதி சேகரித்தலில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. அதேநேரம் அளவுக்குமீறிய ஆர்வமிக்க சேகரிப்பாளர்கள், தங்கள் சொந்த வருமானத்தில் தரகு மூலம் விகிதாசாரப்படி அதிகரிப்பை ஏற்படுத்துவதற்காக, சேகரிக்கும் பணத்தினை அதிகரிப்பதற்காக வன்முறை மற்றும் அச்சுறுத்தல்கள் என்பனவற்றிலும்கூட ஈடுபட்டார்கள்.



இந்த சேகரிப்புகள் மூலம் திரட்டப்பட்ட நிதி, மூன்று வழிகளில் செலவிடப்பட்டன. கணிசமான பகுதி, வன்னியில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ தலைமையகத்திற்கு இயக்கத்தின் பராமரிப்பு மற்றும் பரிபாலன தேவைகளுக்காக அனுப்பப்பட்டது. மற்றொரு பகுதி வெளிநாட்டிலுள்ள கொள்வனவு முகவர்களுக்கு ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக அனுப்பப்பட்டது. மூன்றாவதாக, மிகப் பெரிய பங்கானது வெளிநாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் மற்றும் அங்கு வியாபார நிறுவனங்களை அமைப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டன.

மூன்றாவது வகையான நிதி திரட்டல், விசேட சேகரிப்பு எனப்படும். இது உண்மையில் ஒரு வகையான கடன் திட்ட ஏற்பாடு, பிரத்தியேகமாக ஆயுதக் கொள்வனவுக்கு வசதியாக பயன்படுத்தப்பட்டது. இதன் கரு, முன்னர் எல்.ரீ.ரீ.ஈ யின் வெளிநாட்டு கொள்வனவு அல்லது ஆயுதம் வாங்குவதற்கு பொறுப்பாக இருந்த கேபி என்கிற செல்வராசா பத்மநாதனினால் முன்னோடியாக ஏற்படுத்தப்பட்டது. அப்போது ஆயுதங்கள் வாங்குவதற்கு குறுகிய கால அவகாசத்தில் பெருந்தொகையான பணம் தேவைப்பட்டது. அந்தநேரம் எல்.ரீ.ரீ.ஈயின் வெளிநாட்டு நிருவாகத்துக்கும் மற்றும் நிதி திரட்டலுக்கும் ஒட்டுமொத்த பொறுப்பாளராக இருந்த கேபிக்கு குறுகிய காலத்தில் நிதி திரட்டுவதற்கு இந்த விசேட சேகரிப்பு எண்ணம் உதயமாகியது.


இந்த விசேட சேகரிப்பு என்பது, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நம்பிக்கையான தீவிர எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள், குறிப்பாக வங்கிகளில் அவர்களது வரவு வைப்பு நல்ல நம்பிக்கையான நிலையில் உள்ளவர்கள் மூலமாக, அவர்கள் பெயர்களில் கடன் பெற்று அதை அந்த நாட்டு எல்.ரீ.ரீ.ஈ முகவருக்கோ அல்லது முன்னணிக்கோ மாற்றுவது. பெரும்பாலான தருணங்களில் அவர்கள் கடன் பெறுவதற்காக அவர்களின் கடன் முறிகளையோ அல்லது வீடுகளையோ பிணையாக வைப்பார்கள். இந்த முறை மூலம் மிகப் பெருந்தொகையான பணம் விரைவிலேயே சேகரிக்கப்பட்டு ஆயுதக் கொள்வனவிற்கு பயன்படுத்தப்பட்டது. இந்தக் கடன்களுக்காக வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய வட்டியை எல்.ரீ.ரீ.ஈயின் உள்நாட்டுக் கிளை தாங்கள் நிலையான வைப்பு மூலம் பெறும் பணத்திலிருந்து அவர்களுக்கு வழங்கியது. இந்த விசேட சேகரிப்பு வழக்கமாக 18 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வந்தது.

இவைகளைத் தவிர வேறு இரண்டு முறைகளும் நிதி திரட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டுவந்தது. ஒன்று நிகழ்ச்சிகள் மற்றும் காட்சிகளை மேடையேற்றி அங்கு நாள் காட்டி, காணொளிகள், டி.வீ.டி.க்கள், பாடல் இறுவெட்டுக்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை விற்பனை செய்து நிதி திரட்டுதல். ஒரு பக்கத்தில் மக்களுக்கு நுழைவு கட்டணமாக பெருந்தொகை பணம் அறவிடப்பட்ட போதும் மறுபக்கத்தில் செலவினங்களை ஈடுகட்டுவதற்காக நன்கொடைகளை வழங்கும்படியும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

இறுதியாக வர்த்தக அக்கறைகளில் முதலீடு செய்யப்படுவது.

போரின் இறுதிக்கட்டங்களில் இராணுவம் முன்னேறி புலிகள் பின்வாங்கி தீவில் எல்.ரீ.ரீ.ஈயின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கோளம் சுருங்கியதன் விளைவாக, புலிகளின் வருவாய் அடிப்படையிலும் சுருக்கம் ஏற்பட்டது. அதன்படி ஒரு காலத்தில் எள்ளி நகையாடிய புலம்பெயர் சமூகத்தினரிடமிருந்து திரட்டப்படும் நிதியினை மேலும் மேலும் நம்பியிருக்க வேண்டிய கட்டாயத்துக்கு புலிகள் ஆளானார்கள்.

## கி.மு. 5500 - கி.மு. 230



- மனிதர்கள் நிர்வாணமாய் இருந்து, பின் இலை, குழைகள், விலங்குகளின் தோல்கள் என அணிய ஆரம்பித்தனர். பின் ஆடையின் முக்கியத்துவத்தை உணர்ந்தபின், முதன்முதலாக கி.மு. 5500 - ஆம் ஆண்டில் சணலில் இருந்து நூல் எடுத்து ஆடை தயாரிக்க ஆரம்பித்தார்கள். எகிப்தில் வாழ்ந்த மனிதர்கள்தான் சணல் ஆடையின் முன்னோடிகள்.
- காட்டு விலங்காய் கட்டுக்கடங்காமல் சுதந்திரமாய்த் திரிந்த குதிரைகள், கி.மு. 4400 முதல்தான் மனிதர்களின் வீட்டு விலங்காக பயன்பாட்டுக்கு வந்தது.
- கி.மு. 3050-இல் மிகப்பழமையான மருத்துவ நூல் தயாரிக்கப்பட்டது. எட்வின்ஸ்மித்பாப்பிராஸ் என்று இதை அழைக்கிறார்கள். இந்த நூல்தான் இன்றைய மருத்துவத்திற்கு மூல ஆதாரமானது என்று சொல்கிறார்கள்.
- மனித நாகரிக வளர்ச்சியில் சக்கரத்தின் பங்கு முக்கியமானது. முதல் சக்கரங்கள் பூட்டிய சாரட் வண்டி கி.மு. 3000ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்த வண்டி மனிதர்களை இடம்விட்டு இடம் துரிதமாக நகரவைத்து பலவகை மனிதர்கள் கலந்து பழகி நாகரிகமடைய காரணமானது.
- முதன்முதலில் சீன நாகரிகத்தை உருவாக்கியவர்கள் கி.மு.2205 முதல் 1767 வரை சீனாவை ஆண்ட ஸியா பேரரசின் அரச வம்சம்தான்.
- கி.மு.1900 இல்தான் பருத்தியின் உபயோகத்தை மனிதன் அறிந்தான். இந்தியாவில் ஹரப்பா நாகரிக மனிதர்கள்தான் பருத்தியை முதன்முதலாக பயிர்செய்து நூல் எடுத்து துணி தயாரித்தனர்.
- கி.மு. 1100இல் ஒஸ்திரியாவில் முதன்முதலாக இரும்பு உபயோகம் பழக்கத்திற்கு வந்தது. இங்கிருந்து ஐரோப்பா முழுவதும் பரவியது. இரும்பு உபயோகத்திற்கு வந்த முதல் பகுதியை "ஹல் டொட் காலம்" என்று குறிப்பிடுகிறார்கள்.
- பூமி, சூரியனைச் சுற்றி வருவதையும் சந்திரன், பூமியைச் சுற்றி வருவதையும் அரிஸ்டார்கஸ் என்பவர் கி.மு. 230 இல் கண்டறிந்து சொன்னார். இவர் இறந்து பல நூற்றாண்டுகளில் இதை நிரூபிக்க முயன்றவர்கள் மதவெறியர்களால் தடுக்கப்பட்டனர்.

**ரோம் நகரம் உருவாகி 2766 ஆண்டுகள் ஆவதைக் குறிக்கும் முகமாக ஏப்ரல் 21ஆம் திகதியன்று அந்நகர மக்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். அந்த ஊர்வலத்தில் பண்டைய ரோமாபுரியில் வாழ்ந்த மக்களின் உடையலங்காரத்தை அணிந்து நடிகர்கள் பங்கேற்றனர். இந்தப் படத்தில் அக்காலத்து ரோமாபுரியின் பணிப்பெண்கள் போல உடையணிந்து வருகின்றனர்.**



# காற்றுக்கு வேலி இல்லை 3

சார்லஸ் -

"Where do we go now?" படத்தில், ஊரிலிருக்கும் ஆண்கள் எல்லாரும் தங்களுக்குள் அடித்துக்கொள்ளத்தான் எப்போதும் முயல்வதாகக் காட்டப்படுகிறது. அவர்கள் பிரிவினை பேசியபடி, பகையை வளர்த்தபடி, சண்டையை எதிர்நோக்கிய படியே எப்போதும் இருக்கிறார்கள். அதேசமயம் பெண்கள் தங்களால் இயன்றவரை முயன்று ஒற்றுமையை உண்டாக்கவே போராடுகிறார்கள். ஆண்களின் மோதல் மனநிலை மற்றும் பெண்களின் அமைதிக்கான முயற்சிகள் இரண்டுக்கும் இடையிலான வித்தியாசம் தான் அரசியலுக்கும் கலைக்குமான வித்தியாசமும். அரசியல், பிளவுபடுத்தவே முயலும். கலை இணைக்கவே பார்க்கும். உலகமெங்கும் எடுக்கப்பட்ட திரைப்படங்கள் எல்லாம் கூட்டாகச் சேர்ந்து மனித குலத்துக்கு என்ன பயனை அளித்திருக்கின்றன என்று நாம் யோசித்துப் பார்க்கலாம்.

என்னுடைய சொந்த அனுபவத்தையே சொல்கிறேன். நான் பாலைவனத்தையும் ஒட்டகத்தையும் முதலில் பார்த்தது சினிமாவின் அசையும் பிம்பங்களின் வழியாகத்தான். பனிப் பொழிவையும் உறைந்த ஏரிகளையும் சினிமாதான் எனக்குக் காட்டியது. நான் வரலாற்றுப் புத்தகத்தில் படித்த நாடுகளைக் கண்ணால் கண்டதும் திரையில்தான். அந்த நாடுகளை, அவற்றின் மன்னர்களும், சதிகளும், படைகளும், போர்களும் மட்டுமேயாக வரலாறு காட்டியபோது, அது அப்படி அல்ல, எளிய மனிதர்களால் நிரம்பியதே அந்த நாடுகள் என்று எனக்கு உறைக்க வைத்தது சினிமாதான். இன்று எனக்கு ஈரான் என்றால், முதலில் நினைவுக்கு ...வது ஷாக்களோ, முல்லாக்களோ, எண்ணைக் கிணறுகளோ, உலக அரசியலோ அல்ல. நல்லெண்ணங்களும் வெள்ளை மனங்களும் கொண்ட சாதாரண மனிதர்களும், ஏழை இஸ்லாமியக் குடும்பங்களும்தான். இதை என்னுள் விதைத்தது முழுக்க முழுக்க ஈரானிய சினிமாதான்.

பூமிப் பந்தின் மேல் வரையப்பட்டிருக்கும் ஏராளமான எல்லைக் கோடுகளைத் தாண்டிச் சென்று, வேற்றுநாட்டு மனிதர்களை அவர்களின் உறவுகள் சூழல் எல்லாவற்றோடும் சேர்த்து நெருங்கி அறிவதற்கு, சினிமாவே சிறந்த கலை வடிவம். உலக இலக்கியத்தை நாம் அறிய மொழி ஒரு தடையாக இருக்கிறது. ஆனால் சினிமா என்கிற




காட்சிக் கலைக்கு அத்தகைய தடைகள் எதுவும் இல்லை. பொதுவாக எந்தக் கலை வடிவமும் புரிபடுவதற்கு ஓரளவாவது ரசனைப் பயிற்சி அவசியம். ஒப்பீட்டளவில் சினிமா எளியது.

நாம் சினிமா என்கிற வாகனத்தில் ஏறி, கடல் பயணம் முதல் விண்வெளிப் பயணம் வரை சென்றுவர முடிகிறது. எல்லைகள் கடந்த மாபெரும் மானுடத்தை சினிமா சாத்தியமாக்குகிறது. அரசியல் எல்லைகளை அழிப்பதுதான் சினிமாவின் முக்கியமான அரசியல் செயல்பாடு என்று நான் நினைக்கிறேன். புவியியல் எல்லைகளும், பொருளாதாரப் படிநிலைகளின் எல்லைகளும், மத நம்பிக்கைகளின் எல்லைகளும், இன - மொழி - சாதி எல்லைகளும் தான் அரசியலைத் தீர்மானிக்கின்றன. இந்த எல்லைகளை அழிக்க முயல்வதின் மூலமாகக் கலை அந்த அரசியல்களுக்கு எதிரான இன்னொரு அரசியலை முன்வைக்கிறது. அது "மானுடம்" என்கிற அரசியல்.

பார்க் சான் - வூக் இயக்கிய Joint security area என்ற படம் வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையிலான அரசியல் முரண்பாடுகள், எல்லையில் இருக்கும் பதட்டம், இரு இராணுவத்தினரின் ஜென்மப்பகை ஆகியவற்றைப் பின்புலமாகக் கொண்டது. எல்லைக் காவலில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பு இராணுவங்களின் இளம் வீரர்கள் சிலர் விளையாட்டுத்தனமாகத் தங்களுக்குள் ஒரு இரகசிய நட்பை உருவாக்கிக்கொள்வதைப் பற்றியதுதான் மையக் கதை. இதில் ஒரு காட்சி வருகிறது, படத்தின் இறுதியில் மீண்டும் அந்தக் காட்சி காட்டப்பட்டே படம் முடிகிறது. சில வெளிநாட்டுப் பயணிகள் அந்த எல்லைப் பகுதிக்கு சுற்றுலா வருகிறபோது, ஒரு பெண்ணின் தலையில் இருக்கும் தொப்பியைக் காற்று தூக்கிச் செல்கிறது. எல்லைக் கோட்டைத் தாண்டி அடுத்த நாட்டுக்குள் சென்று தொப்பி விழுகிறது. எதிர் நாட்டு வீரன் அந்தத் தொப்பியை எடுத்துக் கொடுப்பான். மனிதனால் உருவாக்கப்பட்ட அந்த எல்லைக் கோடு இயற்கையின் முன் அர்த்தமிழப்பதை அந்தக் காட்சியில் அழுத்தமாகப் பதிவுசெய்திருக்கிறார் இயக்குநர்.

சர்வதேச எல்லைகள் எதுவொன்றாலும் காற்றைத் தடுத்துவிட முடிவதில்லை. திரைக்கலையும் அப்படிப்பட்ட ஒரு காற்றுத்தான். அரசியல் வேலிகளுக்குள் அது அடைபட வேண்டியதில்லை.

(முற்றும்)

# "எகொனமிஸ்ட்" பத்திரிகை சோசலிசத்தை ஆதரிக்கிறதா?




இந்த வருடம் "எகொனமிஸ்ட்" பத்திரிகை "நோர்டிக் நாடுகள் - அடுத்த சூப்பர் முன்மாதிரி" என்று ஒரு கட்டுரை பிரசுரித்தது. அதொன்றுமில்லை, சுவீத்திய பொருளாதாரச் சரிவில் மொத்த ஐரோப்பாவும் கலகலத்து நொந்து போயிருக்கையில், ஜெர்மனியைத் தவிர சுதாரித்து நின்ற, இன்னும் கொஞ்சமாவது வளர்கிற நாடுகள் என்று பார்த்தால் ஸ்வீடனும், நோர்வேயும். ஐஸ்லாந்து கூட பயங்கரமாக நொடித்துப் போய், இப்போது ஓரளவு எழுந்திருக்கிறது. ∴பின்லாந்தும் ஓரளவு எழுகிறது.

ஆனால் இவற்றில் ஸ்வீடன் தான் அதிகம் முன்னேறிய வளர்ச்சியைக் காட்டுகிறது. முதலியத்தின் ஊதுகுழலான எகொனமிஸ்ட் பத்திரிகை நோர்டிக் நாடுகளைச் சென்ற சில பத்தாண்டுகள் முன்பு வரை எகத்தாளமாகப் பேசிய பத்திரிகை. ஏனெனில் இந்த நாடுகள் சோஷலிசம் என்ற ஒரு கருத்தைத் தமது அரசியலமைப்பில் வெளிப்படையாகக் கொண்ட நாடுகள். பெருநிதிக்காரர்களையும், மிக உச்ச வருமானம் கொண்ட உயர் மத்திய தரக்காரர்களையும் தீவிர வரி வசூலிப்புக்கு ஆட்படுத்தி, அப்படிக் கிட்டும் உபரி வருமானத்தை வைத்து சமூகத்தின் கீழ்நிலை மக்களுக்கு உபகாரத் தொகை கொடுக்கும் ஒரு சமூக அரசியல் பொருளாதார அமைப்பு நோர்டிக் மாதிரி அமைப்பு என்பது எகொனமிஸ்ட் பத்திரிகை போன்றவற்றிற்கு ஏற்காத வழிமுறை. பெருங்குவிப்பு என்பது தனிமனித உரிமை என்பது இந்தப் பத்திரிகையின் கொள்கை.

இன்று இப்பத்திரிகை இவ்வளவு இறங்கி வந்து சோசலிசத்தை ஏற்றுக் கொண்டு விட்டதா? அக்கேள்விக்கு நிலையை ஆழ்ந்து நோக்கினால்தான் விடை கிட்டும். இன்றைய ஸ்வீடனில் அதிகாரத்தில் இருக்கும் கட்சி பன்னெடுங்காலமாக அதிகாரத்தில் இருந்த சமூக ஜனநாயகக் கட்சி இல்லை. மாறாக மரபுவாதக் கட்சி (Conservative party) அதிகாரத்தில் உள்ளது. ஒரே ஒரு வேறுபாடு. இந்தக் கன்சர்வேடிவ் கட்சி இன்று தொடர்வதோ பழைய சோசலிச ஜனநாயகக் கொள்கைகள். இவை தமது கொள்கைகளே, கன்சர்வேடிவ் கட்சி இவற்றுக்கு உரிமை கொண்டாடக் கூடாது என்று கருத்துரிமைப் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு கோரிக்கை விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்களாம் சமூக ஜனநாயகக் கட்சியினர். இது எத்தனை கேலிக்குரியது என்று எழுதுகிறது எகொனமிஸ்ட் இதழ்.

# பாலியல் தொல்லையிலிருந்து பாதுகாப்பு!





பாலியல் கொடுமைகளிலிருந்து மகளிரைக் காப்பாற்றக் கூடிய "ஷொக்" அடிக்கும் உள்ளாடைகள் வந்துவிட்டன. சென்னையைச் சேர்ந்த ஓட்டோமொபைல் பொறியியலாளர்கள் பிரா போன்ற பெண்களின் உள்ளாடையில் 3800 கிலோ வாட் ஷொக் அடிக்கும் அமைப்பு, குளோபல் நிலைநிறுத்தும் சிஸ்டம் (GPS) மற்றும் மொபைல் தொலை தொடர்பு (GSM)கருவிகளை இணைத்து புதியதொரு சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இக்கருவிக்கு "சமூக கவச சாதனம்" எனப் பெயரிட்டுள்ளனர். இந்த உள்ளாடையை பயன்படுத்தும் பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகும்போது இந்த சாதனம் காவல்துறை மற்றும் பெண்ணின் பெற்றோருக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பும். சம்பவம் நடைபெறும் இடத்தை ஜி.எஸ்.எம். கருவி காட்டிக் கொடுத்துவிடும். இதுமட்டுமின்றி, 3800 கிலோ வாட் திறன் கொண்ட மின்சாரத்தை வெளிப்படுத்தி ஷொக் அடிக்கும். பெண்ணை நாடி வந்தவன் அப் பெண்ணைத் தொடுவதற்குக் கூடப் பயப்படுவான். இந்தக் கருவி 82 முறை இதுபோல ஷொக் அடிக்குமாம்!

எத்தியோப்பிய புல்வெளியில் வாழும் கெலடா என்கிற ஒரு வகைக் குரங்கு எழுப்பும் ஒலி, உலகின் முதல் மனிதன் எப்படிப் பேசினான் என்பதை அறிந்துகொள்ள உதவும் என்கிறார்கள்.

பொதுவாக, குரங்கு இனம் சுருக்கமாக ஒரு ஒலியை எழுப்புவது வழக்கம். இதை சிறு தொடர்ச்சியாக வெளிப்படுத்தும். ஆனால் கெலடா நீண்ட தொடர்ச்சியாக பலவித ஒலிக்குறிப்புகளை விதவிதமான ஏற்ற இறக்கங்களோடு எழுப்புகின்றன.

நாக்கு, நாக்கின் அடிப்பகுதி, உதடுகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பலவித ஒலிகளை இவை எழுப்புகின்றன. நாவை மடித்தும் கெலடாவினால் சப்தம் செய்ய முடிகிறது.

முதல் முதலாக இவற்றின் ஒலிகளைக் கேட்டபோது தம்மைச் சுற்றி யாரோ பேசிக் கொண்டிருக்கிறார்கள் என எண்ணும்படி இருந்தது என்று மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் வல்லுநர் தோர் பெர்க்மன் கூறுகிறார்.

இவற்றின் ஒலிகளைக் கொண்டு மானுடப் பேச்சின் தொடக்கத்தை அறிய முடியுமா என்று ஆராய்ந்து வருகிறார்கள். பலவித ஒலிக் குறிப்புகளைக் கொண்ட கோர்வை முதலில் தோன்றியிருக்கக் கூடும். பின்னர் இவற்றுக்கு அர்த்தம் ஏற்படுத்தியிருக்கலாம் என்று நம்ப இடமிருக்கிறது.

அதே சமயத்தில், பல புதிய விஷயங்களைக் குறிப்பிட பல புதிய ஒலிகளை உருவாக்கி ஒரு விதத் தொடர்பு மொழி உண்டாகியிருக்கலாம் என்றும் அவர் கூறுகிறார்.

கெலடாவின் விசேஷம் என்னவென்றால் அவை கூட்டமாக வாழ்கின்றன. நூற்றுக் கணக்கில் உள்ள ஒரு கூட்டம் பல வருஷங்களுக்கு ஒன்றாக வாழ்கின்றன. உயர் விலங்கின வகைகளில் இது போல பெருங்கூட்டமாக வாழும் உயிரினங்கள் வெகு சிலவே.

இந்தக் கூட்டத்தில் தனித்தன்மை வாய்ந்த ஒலி எழுப்பி தகவலைப் பரிமாறிக் கொள்வதற்காக இயற்கையில் எழுந்த அம்சம்தான் இந்தப் பேச்சாக இருக்குமோ என்று வியக்கிறார் பெர்க்மன்.





# விஜய வருட பொதுப் பலன்கள்



## மேஷம்:

### பணப்புழக்கம் அதிகரிக்கும்.

உங்கள் ராசியில் கேதுவும், ராசிக்கு 7ஆம் இடத்தில் சனியுடன் ராகுவும் இருக்கிறார்கள். தன, வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு மே 27ஆம் திகதி வரை தங்கி பின்னர் தைரிய, வீர்ய ஸ்தானத்திற்கு மாறுகிறார். நல்ல செயல்களைச்செய்து சிறப்படைவீர்கள். உங்கள் பெயரும் புகழும் வளரும். சமுதாயத்தில் அந்தஸ்துமிக்க பதவிகளில் அமர்வீர்கள். அரசாங்க ஆதரவு உங்களுக்கு இருக்கும். பொதுச் சேவை செய்யும் சங்கங்களில் உறுப்பினர் ஆவீர்கள். சமூகத்தில் முன்னிலையை தக்கவைத்துக் கொள்வதற்காக கடுமையாக உழைப்பீர்கள்.

அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சிலருக்கு புது வேலை அமையும். உங்களின் செயல்கள் நீங்கள் அறியாமலேயே மற்றவர்களுக்கு நன்மையாக அமைந்துவிடும். உங்களின் தகுதியை உணராமல் செயல்களில் குறை காண்பவர்களையும், தவறாக உங்களை விமர்சனம் செய்பவர்களையும் கண்டுகொள்ள வேண்டாம். சகோதரங்களுடன் கருத்து மோதல் வரும். பண விஷயத்தில் ஏமாற்றங்கள் ஏற்படும். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

பணப்புழக்கம் அதிகமாகும். உங்கள் வேலைகளுக்கு உரிய அங்கீகாரத்தை மேலதிகாரிகள் வழங்குவார்கள். சக ஊழியர்கள் சற்று தள்ளியே இருப்பார்கள். அவர்களை உங்களின் அமைதியான குணத்தால் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். மனதில் இருந்த ஒருவித பயம் நீங்கி தெளிவாக காரியமாற்றுவீர்கள். வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சுமுகமாக முடியும். வியாபாரத்தைப் பெருக்க புதிய சந்தைகளை நாடிச் செல்வீர்கள். பங்குதாரர்களுடன் பிரச்சினைகள் வரலாம். ஆனாலும், உங்களின் வியாபார யுக்திகள் சரியான இலக்குகளை சென்றடையும்.

கலைத்துறையினருக்கு புகழ் பெருகும். மூத்த கலைஞர்களைவிட அறிமுகக் கலைஞர்கள் ஆதாயமடைவீர்கள். பெண்மணிகள் குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண்பீர்கள். உறவினர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். மற்றவர்கள் பேச்சுக் கேட்டு மனம்தளராது உங்கள் கடமையை சரியாகச் செய்யுங்கள். ஆன்மீகத்தில் மனதைச் செலுத்துங்கள். மாணவ மணிகள் படிப்பில் நல்ல மதிப்பெண்களை பெறுவீர்கள்.



## ரிஷபம்:

### வெற்றிகள் குவியும்.

உங்கள் ராசியில் குருவும், ருணரோக சத்ரு ஸ்தானத்தில் சனி-ராகுவும், விரய ஸ்தானத்தில் கேதுவும் இருக்கிறார்கள். தன, வாக்கு குடும்பஸ்தானத்திற்கு குரு மே 27ஆம் திகதி மாறுகிறார். உங்களின் வாக்கு வன்மை அதிகரிக்கும். உடல் நலம் திருப்திகரமாக இருக்கும்.

எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். இல்லத்திற்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். சமுதாயத்தில் உங்கள் பெயரும்,புகழும் உயரும். தீயவர்களின் தொடர்பு தானாகவே விலகும். புதிய வீடு, நிலம் வாங்குவதற்கான வாய்ப்பு. மனதில் காரணமில்லாத பயம் தொடரும். சகோதர, சகோதரிகள் காரணமில்லாமல் விரோதம் பாராட்டுவார்கள்.

உங்கள் செயல்களில் குறை கண்டுபிடிப்பவர்களை நேருக்கு நேராக சந்தித்து சரியான விளக்கமளிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் சாதனைகளை செய்து புகழ் பெறுவீர்கள். தீர்க்கமாகச் சிந்தித்து முடிவெடுப்பீர்கள். ஆதாரமில்லாத விஷயங்களை நம்ப மாட்டீர்கள். உங்கள் நண்பர்கள் எண்ணங்களுக்கு மதிப்பளித்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். சமுதாயத்தில் முக்கியஸ்தர் என்கிற அந்தஸ்துக்கு உயர்ந்து விடுவீர்கள். வெளியூர், வெளிநாட்டுப் பயணங்களால் பலனடைவீர்கள்.

நட்பு நாடி வரும் பழைய விரோதிகளை இந்தக்காலகடடத்தில் நம்ப வேண்டாம். உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வும், பதவி உயர்வும் சிறிய காலதாமதத்திற்குப் பிறகே கிடைக்கும். வியாபாரிகள் சற்றுக்கூடுதல் எச்சரிக்கையுடன் வியாபாரம் செய்யவும். அனைத்து செயல்களையும் உங்களின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்ளுங்கள். கூட்டாளிகளிடம் கலந்து பேசிய பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும்.

கலைத்துறையினருக்கு திறமைகள் பளிச்சிடும். நல்ல வருமானம் கிடைக்கும். சக கலைஞர்கள் மற்றும் ரசிகர்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். சிலருக்கு விருதுகள் கிடைக்கும் உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள்.

பெண்கள், பிள்ளைகளிடம் எதிர்மறையாகப் பேசாதீர்கள். அவர்களின் நட்புவட்டத்தைக் கண்காணிப்பது நல்லது. உங்கள் பலவருடக் கனவு பலிதமாகும். மாணவ மணிகள் உற்சாகமான மனநிலையுடன் கல்வியில் ஈடுபடுவீர்கள். விளையாட்டுகளில் வெற்றிகளைக் குவிப்பீர்கள்.



## மிதுனம்:

### தடைகள் தகரும்

உங்கள் ராசிக்குப் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சனியும், ராகுவும், இலாப ஸ்தானத்தில் கேதுவும், விரய ஸ்தானத்தில் குருவும் இருக்கிறார்கள். குரு பகவான் உங்கள் ராசிக்குள் மே 27ஆம் திகதி செல்கிறார். பார்த்தவுடன் அனைவரையும் முக வசீகரத்தால் கவர்ந்திழுப்பீர்கள். உங்கள் செயல்களில் வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தால் புதிய கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்கள்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நண்பர்களை இனம் கண்டு விலக்குவீர்கள். பொதுநலத்தொண்டுகளில் ஈடுபடுத்திக் கொள்வீர்கள். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உங்கள் விருப்பங்களும் தேவைகளும் பூர்த்தியாகும். முக்கியமான விஷயங்களில் அனுபவஸ்த்தர்களின் ஆலோசனைகள், அறிவுரைகளைக்கேட்டு முடிவெடுப்பீர்கள். புதிய பதவிகளும் பொறுப்புகளும் உங்களைத் தேடி வரும்.

கடுமையாக உழைத்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். தடைகளைத்தகர்த்தெறிந்து முன்னேறுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் ஓரளவு சீராக இருந்தாலும் அவ்வப்போது வயிறு சம்பந்தமான கோளாறுகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

உங்கள் பேச்சினால் பகையைச் சந்திக்க நேரிடும். கணக்கு வழக்குகளில் சிறு சிக்கல்கள் தோன்றும். உத்தியோகத்தர்கள் அலுவலகப் பணிகளில் கடுமையாக உழைத்து செயல்களில் வெற்றிபெற்று நற்பெயர் வாங்குவீர்கள். மேலதிகாரிகளின் அன்பையும், ஆதரவையும் பெறுவீர்கள். உங்களுக்குத் தொல்லை கொடுத்த சக ஊழியர்கள் பகைமை மறந்து நட்புடன் பழகுவார்கள்.

வியாபாரிகளுக்கு இந்த ஆண்டு இலாபகரமாகவே அமையும் - வாடிக்கையாளர்களின் தேவைகளைப்புரிந்து கொண்டு அதற்கேற்ப விற்பனை முறைகளைக் கையாண்டால் போதும். மனதை அரித்துக் கொண்டிருந்த ஒரு விஷயத்தில் முக்கியமான முடிவை எடுப்பீர்கள். புதிய வாய்ப்புகள் நல்ல வருமானத்தைக் கொண்டு வந்து சேர்க்கும்.

பெண்மணிகளுக்கு குடும்பத்தினரிடம் மதிப்பு உயரும். விருந்து, கேளிக்கைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். மாணவமணிகள் படிப்பில் நல்ல மதிப்பெண்களை அள்ளுவீர்கள். மேற்படிப்புக்கான முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றியைத் தேடித் தரும்.



## கடகம்:

### பாராட்டுகள் குவியும்.

உங்கள் ராசிக்கு சுக ஸ்தானத்தில் சனியும் ராகுவும் தொழில் ஸ்தானத்தில் கேதுவும் இலாப ஸ்தானத்தில் குருவும் இருக்கிறார்கள். குரு பகவான் மே 27ஆம் திகதிமுதல் உங்கள் ராசியின் விரய ஸ்தானத்திற்கு வந்து அமரவிருக்கிறார். அயராது பாடுபடும் உங்களின் மன தைரியம் அதிகரிக்கும். சோம்பேறித்தனத்தை மூட்டைகட்டி வைத்துவிட்டு சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள்.


தாய் வழி உறவுகளில் சுமுகமான நிலைமை ஏற்படும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். பிறர் கேட்காமல் அறிவுரை வழங்க வேண்டாம். புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வீர்கள். நுணுக்கமான விஷயங்களையும் சரியாகப் புரிந்துகொள்ளும் ஆற்றல் உண்டாகும். புதிய சேமிப்புத் திட்டங்களில் சேர்வீர்கள். நகைச்சுவையுடன் பேசி பிறரைக் கவர்வீர்கள். செய்தொழிலில் தொடர்ந்து வளர்ச்சியைக் காண்பீர்கள். பிறரின் சொத்துகளை பராமரிக்கும் யோகமும் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களின் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். இடமாற்றங்கள் உங்களுக்கு சாதகமாக அமையும். அலுவலகம் தொடர்பான உங்களின் புதிய எண்ணங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவீர்கள். சக ஊழியர்களிடம் ஒற்றுமை அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுகளுக்கும், நல்லெண்ணங்களுக்கும் பாத்திரமாவீர்கள்.

வியாபாரிகளுக்கு பொருளாதாரம் நன்றாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் சிறப்பாகவே அமையும். தேவையில்லாத சில அலைச்சல்கள் ஏற்பட்டாலும் முடிவு சாதகமாகவே அமையும். கூட்டாளிகள் உங்கள் பொறுப்புகளில் பங்கெடுத்துக் கொண்டு வேலைகளை குறைப்பார்கள்.

கலைத்துறையினருக்கு சக கலைஞர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். இதனால் படிப்படியாக வளர்ச்சி அடைவீர்கள். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். ஆனாலும் அநாவசியச் செலவுகளை செய்ய நேரிடும்.

பெண்கள் குடும்பத்தில் அனுகூலமான நிலைமையைக் காண்பீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உற்றார், உறவினர்கள் இணக்கமாக இருப்பார்கள். மாணவ மணிகளுக்கு பெற்றோரின் ஆதரவுடன் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். சக மாணவர்களின் ஒத்துழைப்பை பெறுவீர்கள். அதிகாலையில் எழுந்து படிக்கப் பழகுங்கள்.



## சிம்மம்:

### குடும்ப ஒற்றுமை ஓங்கும்.

உங்கள் ராசிக்கு தைரிய, வீர்ய ஸ்தானத்தில் சனியும், ராகுவும், பாக்கிய ஸ்தானத்தில் கேதுவும் தொழில் ஸ்தானத்தில் குருவும் இருக்கிறார்கள். குரு பகவான் மே 27ஆம் திகதி இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். நீங்கள் எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றியுடன் முடியும். சிறிய அளவு முயற்சிகள் கூட பெரிய பலனைத் தரும்.


திருமணம் போன்ற சுப காரியங்கள் சுலபமாக நடக்கும். பொருளாதாரம் படிப்படியாக உயரும். உடல் உபாதைகளுக்கு மாற்று சிகிச்சை முறைகளை மேற்கொள்வீர்கள். அசையாச் சொத்துகளை வாங்குவீர்கள். மழலைச் செல்வம் கிடைக்கும். மனதிற்கினிய தொலை தூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். புதியவர்களுடன் கூட்டு சேர வேண்டாம். குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்த உறவினர்கள் மறுபடியும் ஒன்று சேருவார்கள். வருமானம் கொஞ்சம் கொஞ்சமாக உயரும். பழைய கடன்களை திருப்பிச் செலுத்துவீர்கள்.

உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். சக ஊழியர்களிடம் நல்ல முறையில் பேசிப் பழகவும். சிலர் உங்களுடன் பகைமை பாராட்டுவார்கள். ஆனாலும் அலுவலகத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

வியாபாரத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். திட்டமிட்டபடி செய்யும் செயல்களில் வெற்றி காண்பீர்கள். பழைய கடன்களை அடைத்த பிறகே புதிய கடன்களைப் பெற முயற்சி செய்யவும். புதிய முதலீடோ விரிவாக்கமோ இருந்தால் தகுந்த ஆலோசனைகளைப் பெறவும்.

கலைத்துறையினர் சுமாரான வாய்ப்புகளையே பெறுவீர்கள். மற்றபடி உங்களின் பெயரும், புகழும் உயரும். பெண்மணிகளின் பிரார்த்தனைகள் வீண் போகாது. பண வரவு அதிகரிக்கும். குழந்தைகள் உதவிகரமாக இருப்பார்கள். சுபகாரியங்கள் நடத்துவதில் ஏற்பட்ட தடைகள் விலகும்.

மாணவமணிகளின் படிப்பில் சிறு தடங்கல்கள் ஏற்பட்டாலும் பெற்றோரின் உதவியுடன் நன்றாகப் படித்து வெற்றி பெறுவீர்கள். சோம்பேறித்தனத்தைத் தள்ளி வைத்துவிட்டு ஆசிரியர் நடத்திய பாடங்களை அன்றைய தினமே படித்து மதிப்பெண்களை அள்ளுங்கள்.



## கன்னி:

### ஆரோக்கியம் மேம்படும்.

உங்கள் ராசிக்கு தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தில் சனியும், ராகுவும், ஆயுள் ஸ்தானத்தில் கேதுவும், பாக்கிய ஸ்தானத்தில் குருவும் இருக்கிறார்கள். உங்கள் ராசிக்கு தொழில் ஸ்தானத்திற்கு மே 27ஆம் திக தியன்று மாறுகிறார் குரு.

இந்த ஆண்டு, உங்களின் கிரகநிலைகளை வைத்துப் பார்க்கும் போது நீங்கள் பொறுமையுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த விஷயங்கள் அனைத்தும் முழுமையாகக் கைகூடும். உங்களை வாட்டிய உடல் உபாதைகளும் நீங்கிவிடும். மனப் புழுக்கத்திலிருந்து விடுபட்டு நிம்மதியாக் சுவாசிப்பீர்கள். உங்களை பகடைக்காயாகப் பயன்படுத்தி வந்த உற்றார், உறவினரின் உள்மனதைப் புரிந்துகொண்டு அவர்களிடமிருந்து விலகிவிடும் சந்தர்ப்பங்கள் உண்டாகும்.

எதிர்பார்த்த பொருளாதார முன்னேற்றத்தைக்காண்பீர்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். புதிய நண்பர்களை ஓரளவுக்கு மேல் நம்ப வேணடாம். பொதுக்காரியங்களில் ஈடுபட மனம் விழையும். சமுதாயத்தில் உயர்ந்தவர்களுடன் இணக்கமாகப் பழகுவீர்கள்.

உத்தியோகத்தர்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருகக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு குறைவாக இருப்பதால் அவர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும். நீங்கள் உண்டு உங்கள் வேலை உண்டு என்கிற நிலையில் இருப்பதே சிறப்பு.

வியாபாரிகள் வாடிக்கையாளர்களைக் கவர புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். பெரியமுதலீடுகளில

தொழிலை விரிவுபடுத்த நினைக்க வேண்டாம். இருப்பதை நேர்த்தியாகப் பராமரிப்பதே சிறப்பு. புதிய கடன்கள் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவும்.

கலைத்துறையினர் உழைப்புக்கேற்ற பலனை அடைவீர்கள். இரசிகர்களின் உற்சாகமான ஆதரவு உங்கள் மன வருத்தத்தைக் குறைக்கும் மருந்தாக அமையும்.

பெண்மணிகளுக்கு கணவர் வழி உறவினர்கள் பாசத்தோடு பழகுவார்கள். சிலருக்கு வயிறு சம்பந்தமான உபத்திரவங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உணவு விஷயங்களில் கவனத்துடன் இருக்கவும். மாணவமணிகள் உழைப்புக்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவீர்கள். கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் சாதனை புரிவார்கள். உள்ளரங்கு விளையாட்டுகளில் வெற்றி பெறுவீர்கள்.



## துலாம்:
### திறமைகள் வெளிப்படும்.

உங்கள் ராசிக்குள் சனியும் ராகுவும் 7ஆம் இடத்தில் கேதுவும் ராசிக்கு 8ஆம் இடத்தில் குருவும் இருக்கிறார்கள். மே மாதம் 27ஆம் திகதியன்று பாக்கிய ஸ்தானத்திற்கு குரு மாறுகிறார்.

ஏற்ற இறக்கமாக பொருளாதாரத்தில் இருந்த பாதிப்புகள் படிப்படியாக விலகும். புதிய தொழில்களில் கால்பதிக்க போராடிக் கொண்டிருந்தவர்கள் எதிர்பார்த்த மாற்றத்தைக் காண்பார்கள். அலுவலகச் சூழல்களில் இருந்த இறுக்கம் மறைந்து சகஜ நிலை உருவாகும்.

தொழிலில் புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். வேறு ஊருக்குச் சென்று தொழில் செய்யும் வாய்ப்பு சிலருக்குக் கிடைக்கும். உடலில் ஏற்படும் சிறிய உபாதைகளுக்கு உடனுக்குடன் வைத்தியம் செய்து கொண்டால் மருத்துவச் செலவுகளை குறைக்கலாம். கவலை கொள்ள வைத்த கடன் தொல்லைகள் குறைவதால், [illegible]களின் மனதில் தைரியம் பிறக்கும்.

புதிய நண்பர்களிடம் கவனமாக இருக்கவும். பூர்வீகச் சொத்தில் இருந்த இழுபறியான நிலைமை மாறும். சகோதர, சகோதரிகளிடம் உள்ள கருத்து வேறுபாடுகளை களைந்து குடும்ப ஒற்றுமையை பேணிக்காப்பீர்கள். உத்தியோகத்தர்கள் விரும்பிய இடமாற்றங்களை பெறுவீர்கள். மேலதிகாரிகளிடம் சுமுகமான உறவு. சக ஊழியர்களின் குறைகளை முன்னின்று தீர்த்து வைப்பீர்கள். புதிய முயற்சிகளை நன்கு ஆலோசித்த பிறகே செயல்படுத்தவும். கூட்டாளிகளும் நண்பர்களும் அனுசரணையாக இருப்பார்கள். கடன் கொடுக்காமல் முடிந்தவரை தவிர்க்கவும்.

கலைத்துறையினர் தேவைக்கேற்ப வருமானத்தை காண்பீர்கள். உங்களின் திறமைகள் வெளிப்பட்டு பாராட்டுகளைப் பெறுவீர்கள். புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். பெண்மணிகளுக்கு இந்த ஆண்டு புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் கிடைக்கும். பெரியோர்களின் ஆதரவு நிறைந்திருக்கும். பொருளாதாரத்தில் சிறப்புகளை காண்பீர்கள். மாணவமணிகளுக்கு பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அன்பு கிடைக்கும். மனதில் உற்சாகம் பிறக்கும். உங்களின் முயற்சிகள் தடைகளை தகர்த்து தாமதமின்றி வெற்றி கிடைக்கும். விளையாட்டில் சாதனைகளை செய்வீர்கள்.



## விருச்சிகம்:
### சொத்து சேரும்.

உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் கேதுவும் ராசிக்கு 7ஆம் இடத்தில் குருவும் விரய ஸ்தானத்தில் சனியும் ராகுவும் இருக்கிறார்கள். குரு மே மாதம் 27ஆம் திகதி அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். மனதில் இருந்த குழப்பங்கள் விலகி தெளிவான சிந்தனைகள் குடி கொள்ளும். கடன் பிரச்சினை தீர வழிகளைக்காண்பீர்கள். மறதியால் முக்கிய விஷயங்களில் தாமதம் ஏற்படலாம். சிலருக்கு பல், அடிவயிறு சம்பந்தமான உபாதைகள் தோன்றி மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

இடம், பொருள், ஏவல் அறிந்து பேசி மற்றவர்களை கவர்வீர்கள். போட்டியாளர்களின் நெருக்கடிகளை தாண்டி வேலைகளை சரியாக முடிப்பீர்கள். குடும்பத்தினருடன் இனிமையான பயணங்களைச் செய்வீர்கள். வீட்டிற்கு பராமரிப்பு செலவுகளும் வாகனங்களை பழுது பார்க்கும் செலவுகளும் உண்டாகும்.

வீண் வதந்தி, வீண் வம்பு இரண்டும் வராதவாறு இந்த ஆண்டு பார்த்துக் கொள்வது அவசியம். உத்தியோகத்தர்கள் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள். பணவரவு நன்றாக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு குறைவாக இருப்பதால் அவர்களைப்பற்றி வெளிப்படையாகப்பேச வேண்டாம். மேலும்,உங்களின் கோரிக்கைகள் சற்று தாமதமாக பரிசீலிக்கப்படும்.

வியாபாரிகள் சென்ற நந்தன ஆண்டில் எதிர்பார்த்த இலாபத்தை காண முடியாது. தீயவர்களை இனம் கண்டு அவர்களிடமிருந்து விலகியிருப்பது நல்லது. கூட்டாளிகளிடம் கவனமாக இருங்கள்.

கலைத்துறையினர் பெயரும் புகழும் உயரும். உங்களின் திறமைகள் பளிச்சிடும். சக கலைஞர்களிடமிருந்து நல்லுதவிகளை பெறுவீர்கள். புதிய வாகனங்களின் சேர்க்கை உண்டாகும். அநாவசியமான பயணங்களை செய்ய வேண்டாம்.

பெண்கள், உறவினர்களுடன் விருந்து, கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பீர்கள். தாய்வீட்டுச் சீதனம் வந்து சேரும். உங்கள் பெயரில் அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். மாணவமணிகள் படிப்பில் நல்ல மதிப்பெண்களை பெறுவீர்கள். விரும்பிய பாடப் பிரிவுகளை பெற்று மகிழ்வீர்கள். விளையாட்டில் பரிசுகளை பெறுவீர்கள்.



## தனுசு:
### ஊதியம் உயரும்.

உங்கள் ராசிக்கு பஞ்சம, பூர்வ, ஸ்தானத்தில் கேதுவும் ராசிக்கு 6ஆம் இடத்தில் ராசிநாதனான குருவும் லாப ஸ்தானத்தில் சனியும் ராகுவும் இருக்கிறார்கள். குருபகவான் மே மாதம் 27 அன்று களத்திர சப்தம ஸ்தானத்திற்கு மாறுகிறார். செய்தொழிலில் உங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் உருவாகும்

எதிர்பாராத நபர்களிடமிருந்து நல்லாதரவு கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். அவற்றிலிருந்து வருமானம் வரத்தொடங்கும். பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். எதிரிகளையும் நண்பர்களாக்கிக் கொள்வீர்கள். எந்த வியாதி என்று அறிய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் சட்டென்று குணமடைந்து விடுவார்கள்.

கூட்டு வியாபாரத்தில் உள்ளவர்கள் புதிய நண்பர்களைச் சேர்க்கும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும். ஏனெனில், தகுதியில்லாதவர்களால் வில்லங்கம் வரலாம். மற்றபடிக்கு நஷ்டம் வரும் தொழில்களிலிருந்து பக்குவமாக விலகி விடுவீர்கள். பணப் புழக்கத்தில் பின்னடைவுகள் ஏற்படாது. உத்தியோகத்தர்கள் கவனமாகப் பணியாற்றி உழைப்புக்கேற்ற பலன்களை பெறுவீர்கள். உங்களுக்குக் கீழ் பணியாற்றுபவர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் கவனமாக நடந்து கொள்ளவும். மேலிடத்தின் நம்பிக்கைக்கு உரியவர் என்ற பெயரை வாங்குவீர்கள்.

வியாபாரிகள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். உங்களின் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். புதிய முதலீடுகள் செய்வதற்கு பழைய முதலீடுகள் கைகொடுக்கும். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சாதகமாக முடியும்.

கலைத்துறையினருக்கு விருதுகளும் பாராட்டுகளும் கிடைக்கும். தொழிலில் நிலவிய போட்டி, பொறாமைகள் குறையும். பல நாட்களாக வராமல் இருந்த தொகை உங்கள் கையைத் தேடி வரும். புதிய தொழில் நுட்பத்தை அறிந்து கொள்வீர்கள்.

பெண்மணிகள் உங்களின் பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. மாணவமணிகள் நல்ல முறையில் படித்து மதிப்பெண்களைப்பெறுவீர்கள். விளையாட்டுகளில் ஈடுபட்டு உற்சாகம் அடைவீர்கள்.



## மகரம்:
### சோதனைகள் சாதனைகளாகும்.

உங்கள் ராசிக்கு சுக ஸ்தானத்தில் கேதுவும் ராசிக்கு பஞ்சம, பூர்வ புண்ணிய இடத்தில் குருவும் தொழில் ஸ்தானத்தில் சனியும் ராகுவும் இருக்கிறார்கள். குரு பகவான் மே மாதம் 27ஆம் திகதியில் களத்திர சப்தம ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களின் செய்தொழிலில் எதிர்பாராத லாபத்தைக் காண்பீர்கள். புதிய முயற்சிகளை வெற்றியுடன் செயல்படுத்துவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை உயரும்.

புத்திக் கூர்மையுடன் நல்ல முடிவுகளை எடுப்பீர்கள். சோதனைகளை சாதனைகளாக்கிக் கொள்வீர்கள். பொது நலத்தொண்டுகளில் உங்களை அர்ப்பணித்துக் கொள்வீர்கள். செல்வாக்கு உயரும். அலைச்சல் நீங்கி திட்டமிட்ட காரியங்கள் முடிவடையும். சிலருக்கு சொந்தத் தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் தேடிவரும். வழக்கு விவகாரங்களில் கவனம்.

உற்றார், உறவினர்கள் பாசம் காட்டுவார்கள். சமுதாயத்தில் பிரபலமான குடும்பத்தினருடன் திருமண உறவு உண்டாகும். அரசாங்கத்திலிருந்து சில சலுகைகளை பெறுவீர்கள். உத்தியோகத்தர்கள் இயந்திர வாழ்க்கையிலிருந்து விடுபட்டு சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பீர்கள். உங்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவர்களை விலக்கி விடுவீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவுடன் பதவி உயர்வு கிடைக்கும். சிலர் கடன் வாங்கி வாகனங்கள் வாங்குவீர்கள்.

வியாபாரிகள் நல்ல இலாபத்தைக் காண்பீர்கள். புதிய கடன்களை வாங்கி வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பீர்கள். கூட்டாளிகளுடன் ஏற்பட்ட மனக் கசப்புகளை சமாளித்து விடுவீர்கள். சிலர் திட்டமிட்டு செயற்பட்டு ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை பெறுவார்கள். கொடுக்கல், வாங்கல் சிறப்பாகவே தொடரும்.

கலைத்துறையினர் வெற்றி மேல் வெற்றி காண்பீர்கள். சக கலைஞர்களால் பாராட்டப்படுவீர்கள். புதிய நண்பர்களால் பலன் அடைவீர்கள். படைப்புகளை உருவாக்குவதில் முனைப்புடன் ஈடுபடுவீர்கள்.

பெண்கள், சீரிய முயற்சி செய்து சுப காரியங்களை நடத்துவீர்கள். உறவினர்கள் வகையில் இருந்த மனக்கசப்புகள் நீங்கி அமைதி நிலவும். பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லைகள் மறையும். மாணவமணிகள் கல்வியிலும் விளையாட்டிலும் நன்கு தேர்ச்சி பெறுவீர்கள். ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெற்று மகிழ்வீர்கள். அதிக மதிப்பெண்களை பெறுவதற்காக போதிய பயிற்சிகளை மேற்கொள்வீர்கள்.



## கும்பம்:
### மனதில் மகிழ்ச்சி மலரும்.

உங்கள் ராசிக்கு தைரிய ஸ்தானத்தில் கேதுவும் ராசிக்கு சுக ஸ்தானத்தில் குருவும் பாக்கிய ஸ்தானத்தில் சனியும் ராகுவும் இருக்கிறார்கள். பஞ்சம, பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு மே மாதம் 27ஆம் திகதி குருபகவான் மாறுகிறார். நீங்கள் எதையும் எதிர்கொள்ளும் துணிவையும் தைரியத்தையும் பெறுவீர்கள். முடிவெடுக்காமல் இருந்த விஷயத்தில் ஒரு சுமுகமான முடிவைக் காண்பீர்கள்.

சமுதாயத்தில் உயர்ந்தோரின் பார்வை உங்கள் மீது படும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உடலில் ஏற்பட்ட உபாதைகள் நீங்கி மிடுக்குடன் நடப்பீர்கள். உங்களை உதாசீனம் செய்த உற்றார், உறவினர்கள் உங்களுக்கு உதவ முன் வருவார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். புதிய உறவு முறைகள் ஏற்பட்டு மனதில் மகிழ்ச்சி நிறையும்.

சிறிய கௌரவப் பிரச்சினைக்காக நண்பர்களுடன் மனக்கசப்புகள் உண்டாகும். செய்தொழிலில் எதிர்பார்த்த மாற்றங்கள் உண்டாகும். தேவையான நேரத்தில் கடன் கிடைக்கும். சகோதர, சகோதரிகளிடம் விட்டுக் கொடுத்துப் பழகவும். அசையாச் சொத்துக்களை நல்ல விலைக்கு விற்று இலாபமடையும் ஆண்டாக இது அமைகிறது. உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். அலுவலகத்தில் பல சலுகைகள் கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். வருமானம் நல்லபடியாக வரத் தொடங்கும். புதிய முயற்சிகள் பலனளிக்கும். கலைத்துறையினர் நற்பெயர் வாங்குவீர்கள். உங்கள் செயல்களைச் சீரிய முறையில் திட்டமிட்டுச் செய்யவும்.

பெண்களுக்கு உற்றார், உறவினர்கள் அனுகூலமாக இருக்க மாட்டார்கள். அனாவசியப் பேச்சுகளை தவிர்க்கவும். வழிபாட்டில் மனதை செலுத்தி நிம்மதி அடையுங்கள். புதிய வாகனங்கள் வாங்கும் எண்ணத்தை தவிர்க்கவும். மாணவமணிகள் படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். கடுமையாக முயற்சி செய்து எல்லாத் தடைகளையும் உடைத்து வெற்றி வாகை சூடுவீர்கள். விளையாட்டில் வெற்றி பெறுவீர்கள்.



## மீனம்:
### புதிய பதவி வரும்.

உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் கேதுவும் ராசிக்கு தைரிய ஸ்தானத்தில் குருவும் அஷ்டம ஸ்தானத்தில் சனியும் ராகுவும் இருக்கிறார்கள். சுக ஸ்தானத்திற்கு குருபகவான் மே மாதம் 27ஆம் திகதி மாறுகிறார்.

நண்பர்களுக்காக சில தியாகங்களைச் செய்வீர்கள். இனிமையான பேச்சினால் பகைவரையும் நண்பர்களாக்கிக் கொள்வீர்கள். சகோதர, சகோதரிகள் மதிப்பு கொடுத்து நடந்து கொள்வார்கள். சமுதாயத்தில் உயர்ந்தோர் மூலம் செய்தொழிலை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி முடிப்பீர்கள்.

புதிய் வீடு, வாகனம் வாங்க முற்படுவீர்கள். அரசாங்கத்திலிருந்து எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்களிடம் மனக்கசப்புகளுக்கு ஆளாக நேரிடலாம். பெற்றோர் வகையில் இணக்கமான சூழ்நிலை. அவர்களின் நீண்ட நாளைய உடல் உபாதைகள் மறைந்து மருத்துவச் செலவுகள் குறையும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் நன்மை. வருமானம் படிப்படியாக உயரும். மற்றவர்களை எளிதாக நம்பி, எவருக்கும் அநாவசியமாக வாக்கு கொடுக்க வேண்டாம்.

உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாகக் குறைந்து சகஜமான சூழ்நிலையை காண்பீர்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் மறையும். கூட்டாளிகளால் நன்மைகளை பெறுவீர்கள். அரசாங்க விவகாரங்களில் எச்சரிக்கையுடன் இருக்கவும். கணக்கு வழக்குகளை சரியாக எழுதி வைத்துக் கொள்ளவும். மறதி காரணமாக வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும்.

கலைத்துறையினர், உங்களின் படைப்புகளை புதிய வடிவத்தில் தருவீர்கள். புதிய கலைப்பயணங்களையும் மேற்கொள்வீர்கள்.

பெண்களுக்கு கணவருடன் நிலவி வந்த கருத்து வேறுபாடுகள் மறையும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் உண்டாகும். மாணவமணிகள் எதிர்பார்த்த மதிப்பெண்களைப்பெற முடியாமல் போகலாம். எனவே, கடினமாக படித்து மனப்பாடம் செய்து முன்னேற முயற்சி செய்யவும்.

# வன்முறையைத் தடுக்கும் பொறிமுறை

# வீட்டில் இருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும்

## – அமைச்சர் திஸ்ஸ கோரிக்கை



பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்ப்பதோடு, பெண்களுக்குச் சரியான முறையில் பாதுகாப்பு வழங்கும் பொறிமுறை வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த குறிப்பிடுகிறார்.

தனது தாய்க்கு, சகோதரிக்கு சரியானமுறையில் அன்பும், கௌரவமும் செலுத்துகின்ற குடும்பத்திலிருக்கின்ற ஆண்மகனால் சமூகத்திலிருக்கின்ற எந்தவொரு பெண்ணுக்கும் தீங்கிழைக்கப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட கூட்டமொன்றின்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.


பெண்கள் தொடர்பான வன்முறைகளை ஆராயும்போது, பெரும்பாலான பெண்கள் தங்கள் வீடுகளிலேயே பல்வேறு துன்பங்களுக்கு முகம்கொடுப்பது தெரியவந்துள்ளது. பெரும்பாலும் சின்னஞ்சிறு பிரச்சினைகள் காரணமாக குடும்பத்திலுள்ள கணவன் - மனைவிக்குள் ஏற்படும் பிளவானது அவர்களை மட்டுமன்றி பிள்ளைகளின் மனோநிலையையும் பெரிதும் பாதிக்கின்றது. அது மிகவும் பயங்கரமானது. அந்தப் பிள்ளைகளுக்குத் தங்கள் பிரச்சினைகளை, துன்பங்கள்ளை எடுத்துச் சொல்ல யாரும் கிடையாது. அவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். அதுமட்டுமன்றி, அவர்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் ஆளாக வேண்டியேற்படும்.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சில் பணிபுரியக்கூடிய சகலரினதும் கட்டாயத் தேவையாக இருக்க வேண்டியது என்னவென்றால், அமைச்சின் குறிக்கோளை சரிவரப் புரிந்து அதற்கேற்றாற் போல பணிபுரிவதாகும்.

நானும் அந்த அமைச்சரவையில் தான் பணிபுரிகிறேன் என்று பெருமைப்படக்கூடிய வண்ணம் அமைச்சை மாற்றியமைக்க வேண்டும். பெண்கள் வன்முறைகள், சிறுவர் துன்புறுத்தல்கள் நடைபெறுவது அமைச்சின் அசமந்தப் போக்கினால் அல்ல. அதற்குப் பல்வேறு விடயங்கள் ஊன்றுகோலாய் உள்ளன. அவற்றை மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து தீர்வைக் காணவேண்டும்.

ஆயிரக்கணக்கான வரலாற்றுப் பாரம்பரியம்மிக்க எமது கலாசாரம் இன்று சீரழிந்துள்ளது. விசேடமாக இதற்கு சில ஊடகங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## பரமர் சங்கமம்



'வடலி வளர்த்துக் கள்ளுக் குடித்தல்' என்னும் பழமொழியுண்டு. அதைப்போலதான் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை என்பதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முப்பதாண்டு காலங்கள் இவ்வகைச செயல்கள் மருந்துக்கும் இல்லாமல் கழிய 2009 பின்னால் அபரிமிதமாகவே வடபகுதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைச் செய்தித் தாள்களில் வாசித்து அறியவும் முடிகிறது.

ஆனாதைச் சிறார்களை வயதுக்கு வரும்வரை பராமரித்து வளர்த்து விடவேண்டிய தார்மீகப் பொறுப்பு அரச - தனியார் - சமூக நலமிகளின் கடமையாகப் பேணப்பட்டும் வருகிறது.

அந்த முப்பதாண்டுகளின் இறுதிக்கட்டத்தில் பெற்றோரை இழந்து தனிமைப்பட்டுப்போன சிறார்கள் அனந்தம் அத்தகையவர்களை பராமரிக்கவென வெளிநாட்டு நம்மவர்களின் பெருந்தொகைப் பணம் பெற்று சுகித்திருப்போரால் அத்தகைய சேவைகளைக் கண்ணியமாக மேற்கொள்பவர்களுக்கும் களங்கமே விதைக்கப்படுகிறது.

2002ஆம் ஆண்டில் கைதடிப் பகுதியில் இந்து சமயப் பேரவையால் நடாத்தப்பட்டுவந்த அனாதைச் சிறார்கள் இல்லத்தில் தங்கி இருந்த சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட விடையம் நீதிமன்றம் வரை செல்ல நேர்ந்தது போன்றே இம்மாத நடுப்பகுதியிலும் அதே கைதடிச் சிறர்களின் இல்லத்தில் மற்றொரு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அப்பொழுது அனாதைச் சிறார்களைப் பராமரித்து வந்த இந்து சமயப் பேரவைப்பிரமுகர் படுக்கையில் தமது கால், கைகளைப் பிடித்துவிடும் வேலைகளுக்கு அனாதைச் சிறுமிகளைப் பயன்படுத்தி வந்ததாகவும் அவ்வேளை சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திப்பட்டதாகவும் அரசல் புரசலாகக் கதைகள் அடிபட்டன.

அந்தச் சம்பவத்தின் பின்பாக இந்து சமயப் பேரவைச் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. அந்த சமய நிறுவனத்தை நிறுவிக் கட்டி வளர்க்க நல்லூர் மற்றும் உடுவில் பிரதேச செயலராக இருந்த ஆ.மகாலிங்கம் என்பார் உதவித்தலைவராக இருந்து பாடுபட்டது எனக்குத் தெரியும்.

அவரது மறைவின் பின்பாகவே மேற்படி சம்பவம் நிகழ்த்தேறியது. அப்பொழுது தலைவராக இருந்த அருட்கவி சி.வினாசித்தம்பிப் புலவரும் அதனால் பெரிதும் நொடிந்து போனார்.

இத்தகைய பொதுநல நிறுவனங்களில் ஊடுருவும் ஒருசில புல்லுருவிகளால் அந்நிறுவனத்தைக் கட்டியெழுப்பிய முன்னோடிகளின் நல்லெண்ணங்கள் படுகுழியில் புதைக்கப்பட்டு வந்துள்ளதைப் பரவலாகக் காணமுடிகிறது.

'வடலி வளர்த்துக் கள்ளுக் குடிக்கும்' மனோபாவம் கொண்டவர்களால் காலத்துக்காலம் இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டே இருப்பது தமிழினத்தின் சாபக்கேடாகவே கருத இடமுண்டு.

அதைத் தவிரவும் இந்நிலைமை பரவலாக உறவுக்காரர், சகோதரர் என்றில்லாமல் சொந்தத் தந்தையாலும் சிறுமிகள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் வராமல் வளர்ந்து கொண்டிருப்பதையே நாளாந்தச் செய்திகள் வலியுறுத்தி வருகின்றன.

'கள்ளைப் பனைகள் வழங்குவதால் வடலிகளிலே' அதனை எதிர்பார்த்துச் சீரழித்தல் எதிர்காலச் சுபீட்சத்துக்கு இட்டுச் செல்லாதல்லவா என்ன நான் சொல்லுறே...

## பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம்

நாடு தழுவிய ரீதியில் நேற்று நள்ளிரவிலிருந்து பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக புகையிரத தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இப் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையை 48 மணிநேரத்திற்கு முன்னெடுக்கவுள்ளதாக நேற்று தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி செயலாளருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தமது பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்காமையின் காரணமாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்ததாக புகையிரத தொழிற்சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

## சட்டவிரோத மாத்திரை சிக்கியது

பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 30 கோடி ரூபா பெறுமதியான கருத்தடை மருந்துகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மருந்துகளை இறக்குமதி செய்தவர்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உகண்டாவுக்குப் பயணம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் உகண்டாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். உகண்டாவுக்கான குறுகிய பயணம் எப்போது இடம்பெறும் என்று விரைவில் அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனி கடந்த ஆண்டு நவம்பர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரது அழைப்பின் பேரிலேயே மகிந்த ராஜபக்ஷ கம்பாலா செல்லவுள்ளார்.



## வேலை வாய்ப்புச் செய்திகள்

பண்டத்தரிப்பில் ஸ்ரூடியோ ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. கணனி அறிவு தெரிந்திருப்பது முக்கியம். தொடர்புகளுக்கு: 077 978 5717.

---

அலுமினியத் தொழிற்சாலைக்கு றோலிங், ஸ்பினிங் அலுமினியம் வார்ப்பு மற்றும் அரிதட்டு வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. தொடர்புகளுக்கு: 077 073 4569, 077 458 9312.

---

வீட்டு சமையல் வேலை தெரிந்த பணிப்பெண்கள் தேவை. உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 075 988 0000

---

யாழ்.நகரிலுள்ள தனியார் கிளினிக்குக்கு பெண் வேலையாடகள் தேவை. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெத்திய யாழ்.நகரிலிருந்து 5 கிலோமீற்றர் இற்கு உட்பட்ட பிரதேசத்தில் இருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தமது சுயவிபரக்கோவையுடன் இம்மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு 514/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும்.

---

பிர பல்ய நிதி நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. தகைமை 18 வயது தொடக்கம் 25 வயதிற்கு உட்பட்டவர்கள். முன்அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும். க.பொ.த.சாதாரண தர, க.பொ.த.உயர்தர சித்தி என்பனவாகும். விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். முகாமையாளர், இல 208, ஸ்ரான்லி வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம். தொலைபேசி: 077 758 4634.

---

பிரபல நிறுவனத்திற்குப்பெண் பிள்ளைகள் கணக்குப் பதிவதற்கு தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு: 077 691 1089.

---

யூனியன் அஷ்யூரன்ஸ் சாவகச்சேரி பிராந்திய கிளைக்குப் பெண் லிகிதர் உடன் தேவை. (தென்மராட்சியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.) தொடர்புகளுக்கு: முகாமையாளர். தொடர்புகெள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 077 77 7721, 021 227 0073.

---

யாழிலும், வன்னியிலும் இயங்கும் பிரபல வைத்திய நிலையத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் தேவைப்படுகின்றன. வைத்தியவர்கள் (MBBS, MD, RMO), தாதிமார்கள் (பெண்கள்). தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 0777 775 0391.

---

நிவேகா ஜுவலரி பிறைவட் லிமிட்டட் நன்கு தேச்சி பெற்ற நகை விற்பனையாளர் மற்றும் சமையல் சமைக்க அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு. சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். தொடர்பு கெள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 077 367 9432, 011 282 3399.

---

தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 40 வயதிற்கு குறைந்த வீட்டுப்பணிப் பெண் இருவர் தேவை. ஒருவருக்கு 20,00 ரூபா வழங்கப்படும். அத்துடன் அலுவலக வேலைக்கு அனுபவமுள்ள சாரதி தேவை. தொடர்புகளுக்கு: 077 787 5386.

---

நூல்டிஸ் தொழிற்சாலைக்கு ஆண், பெண் தொழிலாளர்கள் தேவை. தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 330 4073.

---

இலங்கையில் முதற்தர சுகாதார மற்றும் குளியலறை சாதனங்களை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றுக்கு தொழிலாளர்கள், விநியோக உத்தியோகத்தர்கள், சாரதி போன்ற வெற்றிடங்கள் உண்டு. தொடர்புகளுக்கு: மனிதவள முகாமையாளர் 077 342 1170, 077 211 3350.

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



**01. கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

> நெருப்பு உருண்டை போலச் சூரியன் வானத்திலிருந்து பூமியைச் சுட வைக்கிறது. சூரிய ஒளிபட்ட முகில்கள் தங்க நிறமாகக் காட்சி தருகின்றன. காற்று வீசவில்லை. மலைகளில் ஊற்றுக்கள் வற்றிப் போகின்றன. ஆற்று நீர் குறைவடைகின்றது. ஆற்றின் அடியிலுள்ள கற்கள் ஒட்டகத்தின் முதுகைப் போன்று காட்சி தருகின்றன. பகலில் வெப்பத்தைத் தாங்க முடியாதுள்ளது. வியர்வை உடம்பை நனைக்கின்றது. நெருப்பினருகே இருப்பதைப் போன்று உள்ளது. வாவிகளோ வற்றி, வெடித்துக் காட்சி தருகின்றன.

01. மேலே கூறப்பட்ட சம்பவமானது பெரும்பாலும் எக்காலத்திற்குரியது?
........................................................................

02. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உலோகமொன்றின் பெயர் தருக.
........................................................................

03. இங்கு விலங்கினமொன்றின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அது என்ன?
........................................................................

04. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நீர்நிலைகள் இரண்டின் பெயர் தருக.
1) ................................    2) ................................

05. மனிதனிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள் ஒன்றை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.
........................................................................

06. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
1. பகலோன் :................................ 2. விண் :................................
3. தேகம் :................................ 4. தீ :................................

07. 'முகில்கள் தங்க நிறமாகக் காட்சி தருகின்றன' இவ்வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.
........................................................................

08. 'வியர்வை உடம்பை நனைக்கிறது' இவ்வாக்கியம் எக்காலத்திற்குரியது?
........................................................................

**02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

01. பேராடிய / அகிம்சை வழியில் / வெள்ளையருக்கு / மாமனிதர் / ஆவர் / மகாத்மாகாந்தி / எதிராக
........................................................................

02. அதிகாலையில் / அடிவானம் / இருந்தது / செக்கச் செவேலென / சிவந்து
........................................................................

**03. பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

01. சீரும் சிறப்பும் :................................

02. நட்டாற்றில் விடல் ................................

**04. அடைப்புக்குள் உள்ள சொற்களிலே சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொற்களைத் தெரிவு செய்க.**

01. குப்பி (விளக்கினை, விழக்கினை) பயன்படுத்துவது ஆபத்தானதாகும்.
........................................................................

02. பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு (பயிற்ச்சி, பயிற்சி)களை போதியளவில் செய்ய வேண்டும்.



**14. அடைப்பினுள் உள்ள சொற்களினுள் இருந்து திருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து கீறிட்ட இடங்களை நிரப்பு.**

| | | | | |
|---|---|---|---|---|
| பள்ளிவாசல் | நாம்புவ | தைனமோ | மடி | காக்கும்பலகை |
| பத்திரிப்பு | பாட்டியல் | மின்சுருள் | மின்னுயர்த்தி | மஸ்ஜித் |

01. உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவாகச் செல்லப் பயன்படுத்தப்படும் சாதனம் எது?
........................................................................

02. சைக்கிள் விளக்கினுக்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?
........................................................................

03. மீன்களை கடலிலிருந்து பிடிக்க பயன்படும் வலை வகை எது?
........................................................................

04. இஸ்லாம் மார்க்கத்தினரின் சமய வழிபாட்டின் பெயர் என்ன?
........................................................................

05. தண்ணீரினை இலகுவாக சூடாக்க பயன்படுத்தப்படும் உபகரணத்தின் பெயர் என்ன?
........................................................................


**15.** 01. 927 ரூபாவை மூன்று பேருக்குச் சமமாகப் பங்கிடும் போது ஒருவர் பெறும் பணத்தின் அளவு யாது?
........................................................................

02. கரன் 1 லீற்றர் 750 மில்லி லீற்றர் எண்ணெயையும் கரன் வாங்கியதன் இரு மடங்கு எண்ணெய்யைத் தீபனும் வாங்கினான். இருவரும் வாங்கிய எண்ணெயின் மொத்த அளவு யாது?
........................................................................

03. 50 பைக்கற்றுக்கள் கொண்ட பால்மாப் பெட்டி ஒன்றின் நிறை 12 kg 750 g ஆகும். 450 பைக்கற்றுக்கள் கொண்ட பால்மாப் பெட்டியின் நிறை யாது?
........................................................................

04. 1kg தேயிலையின் விலை 160 ரூபாவாகும். 2kg 250 g தேயிலை வாங்கி 500 ரூபாவைக் கொடுத்தால் மிகுதிப் பணம் எவ்வளவு?
........................................................................

05. பின்வரும் உருவிலுள்ள ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் ஒரு பக்கத்தின் நீளம் 1cm ஆகும்.



06. உருவின் சுற்றளவு யாது? ................................
உருவின் பரப்பளவு யாது? ................................

07. ஒரு குதிரை மணித்தியாலத்துக்கு 20km வேகமாக ஓடும். 8 மணித்தியாலத்தில் எத்தனை km ஓடி முடிக்கும்?
........................................................................

08. 2/4 + 1/2 = ................................

09. 1kg வாழைப்பழத்தின் விலை 60.00 ஆகும். 1kg 250g வாழைப்பழத்தின் விலை யாது?
........................................................................

10. ஒரு மண்ணெண்ணைக் கானில் 6 L 500 ml மட்டும் நிரப்பலாம். அப்படியானால் எத்தனை கானில் 39L நிரப்பலாம்?
........................................................................

**05. நெல் வயல்களில் அல்லது பண்ணைகளில் பின்வருவனவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சொல் எழுதுக.**

01. வயல் :........................................
02. மாடுகள் :........................................
03. கலப்பை :........................................
04. கதிர் அறுத்தல் :........................................
05. வைக்கோல் குவியல் :........................................

**06. சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

01. வீதி விளக்கில் செம்மஞ்சள் நிறம் பயணத்தை ஆரம்பிக்கலாம் என்பதற்கான சமிக்ஞையாகும் ( )
02. ஆடையில் தீப்பற்றினால் விரைவாக ஓட வேண்டும் ( )
03. மின்னினால் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக செயற்கைச் சுவாசம் அளிக்க வேண்டும் ( )
04. இலங்கையின் மிகப் பெரிய மின் உற்பத்தி நிலையம் விக்டோரியா வலு நிலையம் ஆகும். ( )
05. ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் இடம் கழிமுகம் எனப்படும். ( )

**07. பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

**(லக்சபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)**

01. இலங்கையில் மிக நீளமான ஆறு........................கங்கை ஆகும்.
02. நீர் மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வலு நிலையம்........................ ஆகும்.
03. மிக உயரமான நீர்வீழ்ச்சி ........................ நீர்வீழ்ச்சியாகும்.
04. மலை நாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப் பெறாதது ........................ஆகும்.
05. மகாவலி கங்கை உற்பத்தியாவது........................மேட்டுநிலத்திலிருந்து ஆகும்.

**08. மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**

01. மீனை மிக நீண்ட காலத்திற்குப் பாதுகாத்து வைத்திருக்கக்கூடிய முறைகளில் சிறந்தது.
   1. அவித்து வைத்தல் 2. குளிரூட்டியில் வைத்தல்
   3. புகையிட்டு வைத்தல் 4. காயவைத்து வைத்தல்
02. 'ஈசல்' என்று அழைக்கப்படும் பிராணியின் முதற் பருவம்.
   1. கறையான் 2. வண்ணத்துப்பூச்சி
   3. புழு 4. குடம்பி
03. பின்வரும் எந்த விளையாட்டில் மிகக் குறைந்த போட்டியாளர்கள் பங்குபற்றுவார்கள்.
   1. கரப்பந்தாட்டம் 2. மேசைப்பந்து 3. கூடைப்பந்து 4. துடுப்பாட்டம்
04. நீருடன் சேர்க்கும்போது நீருக்கடியில் செல்லக்கூடிய திரவம் பின்வருவனவற்றுள் எது?
   1. இரசம் 2. வினாகிரி 3. தேங்காய்ப்பால் 4. மண்ணெண்ணெய்
05. அநுராதபுரத்தில் அமைந்துள்ள அபயகிரி விகாரையைக் கட்டுவித்த மன்னன்.
   1. மகாசேனன் 2. வலகம்பா 3. தாதுசேனன் 4. துட்டகைமுனு

**09. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

01. பச்சை நிறம் :........................................
02. நத்தார் வாழ்த்துக்கள் :........................................
03. நதி :........................................

**10. பின்வரும் ஆங்கிலச் சொல்லின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. Look at me : :........................................
02. Good evening : ........................................
03. Break fast :........................................



**11. பொருத்தமான "அ" பகுதியுடன் "ஆ" பகுதியை இணைக்க.**

| அ | ஆ |
|---|---|
| 01. வைக்கோல் | 01. வயலில் நெல் அறுவடையின் பின் எஞ்சும் பகுதி |
| 02. சிவனொளிபாத மலை | 02. மழையும் வெய்யிலும் ஒன்றாக வரும்போது தோன்றுவது |
| 03. குர்ஆன் | 03. முஸ்லிம்களின் புனித நூல் ஒன்று |
| 04. வானவில் | 04. வணக்கஸ்தலம் ஒன்று |

**12. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. கெதர யன்ன :........................................
02. க்ரவில :........................................
03. பன்சலய :........................................
04. ஆயுபோவன் :........................................
05. இந்தி ஆப்ப :........................................
06. வாடிவென்ன :........................................

**13. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. பின்வருவனவற்றுள் இரவு நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?
   1. முருங்கை 2. தாமரை 3. கறிவேப்பிலை 4. அகத்தி
02. பின்வருவனவற்றுள் அயடீன் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
   1. தொண்டைக்கரப்பான் 2. நீரிழிவு 3. கண்டமாலை 4. யானைக்கால்
03. பின்வரும் விடைகளுள் தேசப்படங்களில் பெருந்தெருக்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?
   1. கறுப்பு 2. நீலம் 3. பச்சை 4. சிவப்பு
04. நுகர்வுக்கான வர்த்தகப் பொருள்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலட்சினை எது?
   1. SLS 2. SOS 3. ISO 4. ISBN
05. தொல்பொருட்கள் பெறுமதி மிக்கதாகவும், கலைத்துவப் பெறுமதிமிக்கதாகவும் உள்ள இடம்.
   1. எம்பிலிப்பிட்டிய 2. சிகிரியா 3. பானம 4. கொத்மலை
06. இரவு நேரத்தில் மலரும் பூவகை எது?
   1. நந்தியாவட்டை 2. தாமரை 3. நான்கு மணிப்பூ 4. கடுபுல்
07. எலுமிச்சைப் பழச்சாற்றில் அதிகளவில் இருக்கும் போசனைப் பதார்த்தம் யாது?
   1. கொழுப்பு 2. புரதம் 3. விற்றமின் சி 4. கல்சியம்
08. கரப்பந்தாட்டக் குழு ஒன்றுக்குரிய வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
   1. ஆறு 2. ஏழு 3. பத்து 4. பன்னிரண்டு
09. நத்தையின் முட்டையின் நிறம் யாது?
   1. வெள்ளை 2. மஞ்சள் 3. சிவப்பு 4. கபிலம்
10. எமது தேசிய விளையாட்டு எது?
   1. சடுகுடு 2. எல்லே 3. கிரிக்கெட் 4. கரப்பந்தாட்டம்

# எண் இரகசியம்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணி வீரர்கள் மற்றும் பல நாட்டு அணிகளைச் சேர்ந்த வீரர்கள் தங்களது ராசியான எண்களை ரீசேர்ட்டில் வாங்கி பதித்துக்கொள்வது வழக்கம். இந்த எண்களின் ராசி தற்போது ஐ. பி. எல். தொடரிலும் தொற்றிக்கொண்டுள்ளது. சச்சின் 10ஆவது எண் கொண்ட ரீ-சேட்டைப் பயன்படுத்தி வருகிறார். இந்த எண் ஆர்ஜென்ரீனா கால்பந்து ஜாம்பவான் மரடோனா அணிந்த நம்பராகும்.


யுவராஜ்சிங் தனது பிறந்த நாளான டிசம்பர் 12ஆம் திகதியை ராசியான எண்ணாக கருதுகிறார். இதனால் அவர் அந்த எண்ணையே பயன்படுத்தி வருகிறார். இதேபோல் ஹர்பஜன்சிங் தனது பிறந்த நாளான ஜூலை 3ஆம் திகதியை மனதில் வைத்து தனது ரீ-சேட்டை 3ஆம் நம்பரை இடம்பெற செய்துள்ளார். இதுதவிர சில வீரர்கள் புதுவித முயற்சியையும் செய்துள்ளனர்.

ரோகித் சூர்மாவிற்கு ராசியான எண் 9 ஆகும். அவர் ஐ.பி. எல்.இல் 45ஆவது எண் கொண்ட ரீ-சேட் அணிந்துள்ளார். இதன் கூட்டுத்தொகை 9 ஆகும். யூசுப்பதானுக்கும் பிடித்த எண் 9 தான். ஆனால் அவருக்கு அந்த எண் கிடைக்கவில்லை. கூட்டுத் தொகையாக வரும் 18ஆம் நம்பரும் இல்லையென்று கூறியதால் 999 என்ற எண்ணை வாங்கிக் கொண்டார்.

கம்பீர் 5ஆவது எண்ணைப் பயன்படுத்தி வருகிறார். அவர் ஒக்டோபர் 14ஆம் திகதி பிறந்தார். இதன் கூட்டுத்தொகை 5. டோனி ஷர்ட்டில் 7ஆம் எண் உள்ளது. இது மான்செஸ்டர் கால்பந்து அணி பிரபல வீரர்கள் ஜோர்ஜ் பெஸ்ட், எரிக் கன்ட்டோனா, கிறிஸ்டியானோ ரொனால்டோ அணிந்த எண்.

கிறிஸ்கெய்ல் ராசியான எண் 333. ஏனெனில் அவரது டெஸ்ட் போட்டியின் அதிக பட்ச ஓட்ட எண்ணிக்கை இது. முரளிதரன் சர்வசேத போட்டியில் 800 விக்கெட் வீழ்த்தியதால் அந்த எண்ணையே பயன்படுத்தி வருகிறார். மற்றொரு பெங்களூர் வீரரான விஜய் சோல் உள்ளூர் போட்டியில் 451 ஓட்டங்கள் விளாசியதால் அந்த எண்ணை தனது ரீ-சேட்டில் இடம் பெற செய்துள்ளார். உமேஷ் யாதவ் தனது பிறந்த வருடமான 87ஆம் எண்ணைப் பயன்படுத்துகிறார். மோர்க்கலின் உயரம் 6 அடி 5 அங்குலம் இதைக் குறிக்கும் விதமாக 65ஆவது எண்ணை வாங்கியுள்ளார். இவர்களில் விதிவிலக்காக சேவாக் எந்த எண்ணையும் பயன்படுத்தாமல் தனது ரீ-சேட்டில் அவரது பெயரை மட்டுமே பதித்துள்ளார்.

# புதிய அரங்கு திறப்பு



(ரியோ டி ஜெனிரோ)

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் உள்ள புகழ்பெற்ற மரக் கானா மைதானம், கடந்த மூன்று ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது. பராமரிப்பு வேலைகள் முடிந்து நேற்று முன்தினம் மீண்டும் அந்த மைதானம் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டது. வரும் 2014ஆம் ஆண்டின் உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டிகள் இங்கு நடை பெறும்.

குறிப்பிட்டிருந்த காலகட்டத்தைவிட நான்கு மாதங்கள் அதிகம் எடுத்துக்கொண்ட இந்தக் கட்டட வேலைகள், காலதாமதம், நிதி மற்றும் எதிர்காலத்தில் தனியார் மயமாக்குவது போன்ற பல பிரச்சினைகளுக்கிடையே திறக்கப்பட்டுள்ளது.

இன்னும் முழுமையடையாத நிலையில், இருக்கைகள் பொருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விளையாட்டு மைதானத்தை ஒட்டியுள்ள நடைபாதை போடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மொத்தம் 80,000 இருக்கைகள் கொண்ட இந்த மைதானத்தில், தற்போது மூன்றில் ஒரு பகுதியில் மட்டுமே பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிலை ஏற்படுத்திய சர்ச்சை

(சிட்னி)

இந்திய அணியின் சாதனை வீரர் சச்சின் சமீபத்தில் அவுஸ்ரேலியாவின் சிட்னி மைதான நிர்வாகம் சார்பில், இவரது மெழுகு சிலை திறக்கப்பட்டது. இந்தச் சிலையில் கடந்த ஆண்டு இலங்கையில் நடந்த ருவென்ரி-20 உலக கிண்ணத் தொடர் ரீ-சேர்ட்டுடன் சச்சின் காணப்பட்டார். ஆனால், 2006இல், தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஜோகனஸ்டீபர்க், ருவென்ரி-20 போட்டி தான் இவர் பங்கேற்ற முதல் மற்றும் கடைசி ஆட்டம். இதையடுத்து ரீ-சேர்ட் தொடர்பாக சர்ச்சை எழுந்தது.

இதுகுறித்து சச்சின் சிலை வைக்கப்பட்டுள்ள மேடம்-டுசாட்ஸ் அருங்காட்சியக செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், கடந்த 2012 ருவென்ரி-20 உலக கோப்பை தொடரில் சச்சின் பங்கேற்கவே இல்லை என்ற நிலையில், தவறான ரீ-சேர்ட் அணிந்துள்ளது, படைப்பில் ஏற்பட்ட தவறு. இதற்காக வருந்துகிறோம். இதற்குப் பதில் 2011 உலக கோப்பை தொடரில் சச்சின் விளையாடிய, ரீ-சேர்ட் போன்று விரைவில் மாற்ற முயற்சித்து வருகிறோம் என்றார்.

# இறுதியில் சானியா ஜோடி



வெற்றிக் களிப்பில் ஷரபோவா

(ஸ்டுட்கார்ட்)

போர்ஸ் டென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடரின் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மட்டக்-சாண்ட்ஸ் ஜோடி தகுதி பெற்றது.

ஜேர்மனியில் உள்ள ஸ்டுட்கார்ட் நகரில், பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ., போர்ஸ் ரென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மட்டக்-சாண்ட்ஸ் ஜோடி, ஜேர்மனியின் கெர்பர், ஆண்டிரியா ஜோடியை சந்தித்தது. இதன் முதல் செட்டை 6-4 என சுலபமாகசானியா ஜோடி தன்வசப்படுத்தியது. தொடர்ந்து இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய சானியா ஜோடி 7-5 என வென்றது.

முடிவில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி ஜோடி 6-4, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டியில் சானியா ஜோடி ஜேர்மனியின் லிசிக்கி, மோனா இணையை எதிர்கொள்கிறது.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் நட்சத்திர வீராங்கனை மரியாஷரபோவா (ரஷ்யா), உள்ளூர் வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பருடன் (ஜேர்மனி) மோதினார். மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், ஷரபோவா 6-3என்ற கணக்கில் முதல் செட்டை வென்று முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் கடும் நெருக்கடி கொடுத்த ஏஞ்சலிக் கெர்பர் 6-2 என வென்று பதிலடி கொடுக்க சமநிலை ஏற்பட்டது. இதையடுத்து, வெற்றி யாருக்கு என்பதை தீர்மானிக்கும் கடைசி செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. இரு வீராங்கனைகளும் தங்கள் சர்வீசில் புள்ளிகளைக் குவித்து முன்னேறியதால் இழுபறி நிலவியது. இதில் கடுமையாகப் போராடிய ஷரபோவா 6-3, 2-6, 7-5 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# சென்னையிலிருந்து டில்லிக்கு மாற்றம்

(புதுடில்லி)

சென்னையில் நடக்க இருந்த ஐ.பி.எல். தொடரின் பிளே ஒப் சுற்று ஆட்டங்கள் டில்லிக்கு மாற்றப்பட்டுள்ளன.

இலங்கை தமிழர் பிரச்சினை காரணமாக சென்னையில் நடக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இலங்கை வீரர்கள் பங்கேற்க தமிழக அரசு தடை விதித்துள்ளது. இதனால் தங்கள் அணிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும், எனவே மே 21ஆம் திகதி (இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்று), மே 22ஆம் திதிகளில் (வெளியேற்றுதல் சுற்று) சென்னையில் நடக்கும் பிளேஓப் சுற்று ஆட்டங்களை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று அணி நிர்வாகிகள் வலியுறுத்தி வருகிறார்கள்.

இதற்கிடையில் சென்னையில் கடந்த வாரம் நடந்த ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டாலும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்பட்வில்லை. கூட்டத்தில் கலந்து கொண்ட இந்திய கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில், பிளேஓப் சுற்று ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் பங்கேற்க அனுமதிக்கலாமா? என்று தமிழக அரசையும், பொலிஸ் அத்தியட்சகரை முதலில் கேட்போம். அவர்களின் பதிலுக்கு தகுந்தபடி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சென்னையில் நடக்க இருந்த பிளேஓப் சுற்று ஆட்டங்கள் டில்லியில் நடத்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என்.சீனிவாசனுடன் விரிவாக ஆலோசனை நடத்திய பின்னர் இந்த மாறுதல் முடிவு எடுக்கப்பட்டது என்று ஐ,பி.எல். தலைவர் ராஜீவ்சுக்லா டில்லியில் நேற்று முன்தினம் தெரிவித்தார். தமிழக அரசு தனது முடிவில் நிலையாக இருந்ததால் டில்லிக்கு ஆட்டம் மாற்றப்பட்டதாகவும், சென்னையில் நடக்க இருந்த அதே திகதிகளில் டில்லியில் ஆட்டங்கள் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

Season 6



IPL

ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்
பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்
இடம்: ஜெய்ப்பூர்
மாலை 4.00 மணி


மும்பை இந்தியன்ஸ் எதிர்
கிங்ஸ் லெவன் பஞ்சாப்
இடம்: மும்பை
இரவு 8.00 மணி

# சென்னையிடம் போராடி மடிந்த கொல்கத்தா

(சென்னை)

பிஸ்லாவின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் சென்னை அணிக்கெதிரான போட்டியில் கொல்கத்தா அணி போராடித் தோல்வியடைந்தது.ஆறாவது ஐ.பி.எல். தொடரின் 38ஆவது ஆட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மைக்கல் ஹசி, சஹா ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். அதிரடியில் அரங்கை அதிர வைத்த ஹசி அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஜெட் வேகத்தில் உயர்த்தினார். அவருக்குப் பக்கபலமாக செயற்பட்ட சஹா மற்றும் சுரேஷ் ரெய்னா ஆகியோர் அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தனர்.

இறுதியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மைக்கல் ஹசி 59 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 95 ஓட்டங்களைப் பெற்று துரதிஸ்டவசமாக ஐந்து ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டார். சுரேஷ் ரெய்னா 25 பந்துகளில் 44, சஹா 39 ஓட்டங்களைப் பெற்றனர். கப்டன் டோனி ஆட்டமிழக்காது 12 பந்துகளில் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நரைன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பதிலுக்கு 201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய கம்பீர், பிஸ்லா இணை முதலிரு ஓவர்களை நிதானமாக எதிர்கொண்டது. இதில் ஒரு முனையில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை பிஸ்லா உயர்த்தினார். மறு புறத்தில் கம்பீர், மக்கலம், கலிஸ் என நட்சத்திர வீரர்கள் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட கொல்கத்தா அணி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த மோர்கன், பிஸ்லாவுடன் இணைந்து ஓட்ட வேகத்தை அதிகரித்தார். இந்த ஜோடியின் ஆட்டம கொல்கத்தா அணிக்கான வெற்றிவாய்ப்பை பிரகாசப்படுத்தியது. இருப்பினும் 79 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை இந்த ஜோடி (பிஸ்லா) பிரிக்கப்பட சென்னையின் பக்கம் வெற்றிவாய்ப்பு சாயத் தொடங்கியது. இறுதியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் சிறப்பாக ஆடிய பிஸ்லா 62 பந்துகளை எதிர்கொண்டு 14 பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலா 92 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் இயன் மோர்கன் ஆட்டமிழக்காது 22 பந்தில் 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிராவோ, மொரிஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டை சாய்த்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக ஹசி தெரிவானார்.



# தோல்வியில் முடிந்த மருத்துவ முயற்சி

எயிட்ஸ் என்னும் உயிர்கொல்லி நோயினால் உலகம் முழுவதும் 3 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டு தோறும் 10 இலட்சத்து 80 ஆயிரம் பேர் உயிரிழக்கிறார்கள். எனவே இந்தக் கொடிய நோயைக் குணப்படுத்த அமெரிக்க விஞ்ஞானிகள் புதிய மருந்து ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

அதை கடந்த சில ஆண்டுகளாக நோயாளிகளுக்கு செலுத்தி பரிசோதனை நடாத்தினார்கள். அதில் இந்த மருந்து எயிட்ஸ் நோயைப் பரப்பும் வைரஸ் கிருமியை அழிக்கவில்லை என்பது தெரியவந்தது. இதனால் புதிய மருந்து தோல்வி அடைந்ததாக தற்போது நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

# துப்பாக்கிச் சமர்; 10 படையினர் பலி


இராக்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில் பாதுகாப்புப் படையினர் 10 பேர் உயிரிழந்தனர். இராக் தலைநகர் பாக்தாதின் வடக்குப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் சென்ற வாகனத்தை வழிமறித்து அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் 5 வீரர்கள் உயிரிழந்தனர்.

அதே போல் திக்ரித் பகுதியில் சோதனைச்சாவடி அருகே அல்கெய்தா எதிர்ப்புப் படையினர் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

# செவ்வாய்க் கிரகத்தில் குடியேற பூலோக வாசிகள் ஆர்வம்

(ஹாலந்து)

செவ்வாய்க் கிரகத்தில் மனிதனைக் குடியேற்ற, தனியார் நிறுவனம் விடுத்திருந்த அறிவிப்பின் காரணமாக, ஏராள மானவர்கள் விண்ணப்பித்துள்ளதால், தற்போது, பலரது பெயர்கள் காத்திருப்புப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க் கிரகத்தில், மனிதர்கள் வாழ்வதற்குரிய சூழல்கள் குறித்து, தீவிர ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.




இந்நிலையில், ஹாலந்து நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று, செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை அழைத்துச் செல்வதற்கான அறிவிப்பை வெளியிட்டது. அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக அறிவிப்பு வெளியானது. அறிவிப்பு வெளியான சில தினங்களுக்குள்ளாகவே, காத்திருப்போர் பட்டியல் வந்துவிட்டதாக, நிறுவனத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், காத்திருப்போர் பட்டியலிலும், மக்கள் முன்பதிவு செய்த வண்ணம் உள்ளதாக, நிறுவனத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், நிறுவன விளம்பரத்தில், செவ்வாயில் நிரந்தரமாக மக்களைக் குடியேற்றும் திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதில், விரைந்து முன்பதிவு செய்யும் குறிப்பிட்ட, எண்ணிக்கையிலான நபர்களை மட்டும் அழைத்து செல்வதாக, நிறுவனத்தின் சார்பில், தெரிவிக்கப்பட்டது.

மக்கள் மனதில், செவ்வாய் கிரகத்தை பார்வையிடும் ஆர்வம், அதிகமாய் இருப்பதால், ஆயிரத்தையும் தாண்டி, காத்திருப்புப் பட்டியலில் முன்பதிவுசெய்துள்ளனர். இந்நிறுவனம், 2018 ஆம் ஆண்டு, மக்களை செவ்வாய் கிரகத்திற்கு அழைத்து செல்லத் திட்டமிட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# சிறைச்சாலையில் கலவரம் 13 பேர் பலி மெக்ஸிக்கோவில் விபரீதம்



மெக்ஸிகோ நாட்டின் சான் லூயி போடோசி மாநிலத்தில் உள்ள, லாபிலா சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் கைதிகளின் இரு பிரிவினரிடையே பயங்கர மோதல் ஏற்பட்டது.

அவர்கள் ஒருவருக்கொருவர், வீட்டு உபயோகத்திற்காக செய்யப்பட கத்திகளாலும், ஆயுதங்களாலும் தாக்கிக் கொண்டனர் என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது. ஆயினும், பொலிஸார் தற்போது நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகளில் அளவுக்கு மேற்பட்ட கைதிகள் இருப்பதால், போதை மருந்துக் கும்பல்களிடம் இதுபோன்ற சண்டை, சச்சரவுகள் அடிக்கடி எழுகின்றன என்றும், சில சிறைச்சாலைகள் இத்தகைய் கைதிகள், கும்பல்களால் நிர்வகிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சண்டையில் 13 பேர் கொல்லப்பட்டனர். 65 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கைதிகளின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதுவே இதற்கு முக்கிய காரணம் என்றும், இந்த செயற்பாடுகள் மாற்றப்பட்டால்தான் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்றும் அந்நாட்டின் மனித உரிமைக் கழகங்கள் தெரிவிக்கின்றன.

# முன்னாள் பிரதமர் முஷாரப்பிற்கு தொடர்கிறது ஆபத்து



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டு அவரது பண்ணை வீட்டிலேயே சிறை வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைக்காக வீட்டிலிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும்போது அவரைக் கடத்திச் செல்ல தெஹ்ரிக் தலிபான், பாகிஸ்தான் அமைப்பினர் திட்டமிட்டுள்ளனர் என்று அந்நாட்டு உளவு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான செய்தி ஜியோ நியூஸ் தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பானது. தலிபான்கள் மேலும் சில தீவிரவாத குழுக்களுடன் இணைந்து முஷாரப்பை கடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்றும் அந்த தொலைக்காட்சிச் செய்தியில் கூறப்பட்டது.

# இரசாயன ஆயுதப் பயன்பாடு; அடியோடு மறுக்கிறது சிரியா

சிரியாவில் அதிபர் ஆசாத் அரசுக்கு எதிராக உள்நாட்டுப் போர் இரண்டு வருடங்களாக நடந்துவருகிறது.

இந்தப் போரில் சிரியா இராணுவம் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி போராட்டக்காரர்களையும் சிரிய மக்களையும் கொன்று குவித்ததாக அமெரிக்காவும், இங்கிலாந்தும் குற்றம் சாட்டியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் குழு இரசாயன ஆயுதப் பயன்பாடு குறித்து விசாரணை நடத்த சிரியா ஒப்புதல் அளிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் கேட்டுக்கொண்டார்.

இந்தக் குற்றச்சாட்டை சிரியா நிராகரித்துள்ளது. இதுகுறித்து சிரியாவின் தகவல் தொடர்புத்துறை மந்திரி உமர் அல் சோபி கூறியதாவது,

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை மந்திரி மற்றும் இங்கிலாந்து கூறியிருக்கும் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. அது அப்பட்டமான பொய் என்பதை முதலில் உறுதி செய்ய விரும்புகிறேன்.

# மயிரிளையில் உயிர் தப்பினார் ஜப்பானிய பிரதமர்

(டோக்கியோ)

ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே நேற்றுமுன்தினம் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக காரில் புறப்பட்டுச் சென்றார். அவருடன் 5 கார்களும் பின் தொடர்ந்து சென்றன.

இந்நிலையில் டோல்கேட் அருகே செல்லும் போது பொலிஸ் கார் திடீரென நிறுத்தியதால் பின்னால் வந்த பிரதமர் கார் பிரேக் அடித்ததில் தாவி பின்புறமாக திரும்பி நின்றது. இதில் காயங்களின்றி பிரதமர் தப்பினார். காரின் முகப்பில் சேதம் அடைநதது. பின்னால் வந்த மற்ற பெலிஸ் காரில் நிருபர்களும் இருந்ததாக பொலிஸ் வட்டாரச் செய்தி தொடர்பாளர் தகவல் தெரிவித்தார்.

# விஷம் தடவிய கடிதம் அனுப்பிய விகாரம்; சந்தேகத்தில் ஒருவர் கைது




(வாஷிங்டன்)

அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் ஏற்பட்ட குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் ஒபாமா உட்பட சில முக்கிய பிரமுகர்களுக்கு, விஷம் தடவப்பட்ட கடிதம் வந்தது.

அதனை அனுப்பியவர் குறித்த தகவல்கள் இன்னும் தெளிவாகத் தெரியாத நிலையில் அமெரிக்கக் காவல்துறை நேற்று முன்தினம் மிசிசிபியைச் சேர்ந்த எவரெட்ஷ் டட்க்ஸ்கி என்ற தற்காப்புக்கலைப் பயிற்சியாளர ஒருவரை கைது செய்துள்ளது.

டுயுப்லோவில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டபின் அவர் இராணுவத் தலைமையகத்திடம் ஒப்படைக் கப்பட்டார்

உயிரியல் பொருட்களை ஆயுதமாக உபயோகிக்க ஏதுவாக இருக்கும் வண்ணம், அவர் இத்தகைய பொருட்களின் முகவர் உரிமம் பெற்றுள்ளார் என்று கருதப்படுகின்றது.

அதிபரின் கடிதத்தில் தடவியிருந்த ‘ரெசின்’ என்பது விளக்கெண்ணைய் செடியிலிருந்து எடுக்கப்படுவதாகும், இது சயனைடைவிட 6,000 மடங்கு அதிக விஷத்தன்மை கொண்டது.

அதேபோல் அமெரிக்க அரசால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு பின்னர் வெளிவிடப்பட்ட நபர் ஒருவருடனும் இவருக்குத் தொடர்புள்ளதாகக் கூறப்படுகின்றது. இரண்டு நாட்களாக தீவிர கண்காணிப்பிற்கு உள்ளான எவரெஷ்டின் வீட்டில் வைத்து அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாகவும், 41 வயதான எவரெட்ஷ் இன்று திங்கட்கிழமை மிசிசிபி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் என்றும் அரசாங்க வழக்கறிஞர், அலுவலகத்தால் கூறப்பட்டது. இவர் மீதுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் இவர் ஆயுள் தண்டனையும், 2,50,000 டொலர் அபராதமும் பெறுவார்.

# மன்னார் சென்ற ஐ.தே.க. குழுவினர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்தனர்

மன்னாருக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி குழுவினர் மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்தனர். இதன்போது, மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மன்னார் நகரசபை, மன்னார் பிரஜைகள் குழு, தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவை, காணாமற் போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் காணாமல் போனவர்களின் உறவினர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது பல தரப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்ட நிலையில் மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் காணாமற் போனதாகக் கூறப்படும் சுமார் 472 பேருடைய விபரங்களை காணாமல் போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பின் தலைவி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.

குறித்த சந்திப்பின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு, மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அன்டனி விக்டர் சோசை, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்த்தனா, ரவி கருணாநாயக்க, திஸ்ஸ அத்தநாயக்க, கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முசம்மில் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் முஸ்லிம் மதப் பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதனைத் தொடர்ந்து மன்னார் நகரசபை மண்டபத்தில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது. இதன்போது மீனவ சங்கப் பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்கள், மாதர் மற்றும் கிராம சங்கப் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள், விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக குறித்த குழுவினருக்கு தெரியப்படுத்தினர்.

# இலங்கையுடன் இராணுவ உறவு வலுப்படுத்திக்கொள்ளும் சீனா

இலங்கையுடனான இராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள சீனா இணக்கம் தெரிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வருவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் சீனா வழங்கிவரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என இலங்கை அறிவித்துள்ளது. இலங்கை கடற்படைத் தளபதி ஜயநாத் கொலம்பகே தற்போது சீனாவிற்கு விஜயம் செய்துள்ளார். அவர் சீனாவின் முக்கிய படையதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது எதிர்வரும் காலங்களில் இலங்கைக்கு கூடுதலான இராணுவ உதவிகளை வழங்கத் தயார் என சீனா அறிவித்துள்ளது.

# மே தினத்தில் கலந்துகொள்ள யாழ். மக்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவுள்ள மேதின கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு மக்கள் விடுதலை முன்னணியினரால், யாழ்ப்பாண மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பு அடங்கிய சுவரொட்டிகள் பல யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வேறு பிரதேசங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

எதிர்வரும் மே முதலாம் திகதி மாலை 3.30 மணியளவில், தெகிவளை எஸ்.டி.எஸ்.ஜயசிங்க மைதானத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள ஜே.வி.பி.யினரின் மே தின் ஊர்வலம், கொழும்பு பி.ஆர்.சி மைதானத்தில் நிறைவு பெறுவதுடன் அங்கு மே தினக் கூட்டம் நடைபெறும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மே தினக் கூட்டத்தில் யாழ். மக்களையும் அணிதிரளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(25)

# மே தின நிகழ்வுகளை நடாத்த மூன்று இடங்களில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி எதிர்வரும் மே தின நிகழ்வுகளை யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும், கண்டியிலும் நடாத்தத் திட்டமிட்டிருப்பதாக அதன் தலைவர் சி.கா. செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். யாழ். மாவட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின நிகழ்வுகள் சுன்னாகத்தில் இருந்து துவிச்சக்கர வண்டிப் பேரணியுடன் ஆரம்பமாகி யாழ். நகரை வந்தடைந்ததும் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பட்டப் படிப்புகள் கல்லூரியில் தொழிலாளர்களை ஒன்று கூட்டி பொதுக்கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது.

இதேவேளை வவுனியாவில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமாகும் தொழிலாளர் பேரணி வவுனியா நகரசபை மைதானத்தை அடைந்து அங்கு மாபெரும் பொதுக் கூட்டமொன்றுக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் சி.கா.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கண்டியிலும் இதே போன்று கிறிஸ்தவ தொழிலாளர் மண்டபத்தில் மே தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டண உயர்வு, போக்குவரத்துக் கட்டண உயர்வு, பொருட்களின் விலையேற்றம் என்பவற்றை கண்டித்தும் சம்பள உயர்வை வலியுறுத்தியுமே தமது மே தின அறைகூவல் அமையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முழுநாட்டைப் பொறுத்தவரையும் நெருக்கடியான காலத்தில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பொருளாதார ரீதியில் நாடு எதிர்நோக்கும் சவால்கள் மற்றது நாட்டின் தேசிய இனப்பிரச்சினை, சிக்கல்கள், தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்பேசும் மக்களில் 90 வீதமான மக்கள் தொழிலாளர்களாகவேயுள்ளனர். இவர்களது உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும் எனவும் சி.கா.செந்தில்வேல் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் மே தின நிகழ்வுகளை நடாத்துவதற்குப் பிரதான கட்சிகள், தொழிற் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களும் தொழிலாளர்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் அது குறித்து பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளன.(பா)

## வடக்குத் தேர்தலில்...

நான் யோசிக்கவில்லை. எவ்வாறாயினும் நான் தேர்தலில் நிற்கவேண்டுமா? இல்லையா? என்பதனை தமிழ் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இப்போதைக்கு நான் சமூகசேவை தொண்டுப் பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். அதைத் தொடர்ந்து எப்படி முன்னெடுப்பது என்பது பற்றித்தான் சிந்தித்து வருகிறேன் என்று தமிழ் ஊடகவிய லாளர்களிடம் தெரிவித்தார் கே.பி.

## பலாத்காரமாக...

பட்டு விட்டதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் வடபகுதியில் இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவில்லை.

அத்துடன் வடபகுதியிலுள்ள சிறு பற்றைக்காடுகள் எல்லாம் அரசாங்கம் துப்புரவு செய்கின்றது. ஏனெனில் இவற்றை எல்லாம் அரசாங்கம் பல்தேசியக் கம்பனிகளுக்கு விற்பனை செய்யவுள்ளது.

எனவே மக்களின் காணிகளைக் குறிப்பாக வடபகுதி மக்களின் காணிகளை பலவந்தமாக எடுக்கக்கூடாது. யுத்தம் முடிவடைந்து. நான்கு வருடங்கள் சென்றநிலையில் இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான உரிமை உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை...

சிறுவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார். அத்துடன் திருகோணமலையில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும், இலங்கையின் நடைமுறை அரசியல் குறித்து கலந்துரையாடியுள்ளார். இதேவேளை, வடக்கு மாகாண சபைக்கு முறையாக தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் வட, கிழக்கு மாகாணங்களை அமெரிக்கா உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக முஸ்லிம் மக்களிடம் தெரிவித்ததூதுவர்,

கிழக்கில் அடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்தும் விசாரித்தறிந்துள்ளார். ஆனால் அமெரிக்கத் தூதுவரின் திருமலை விஜயம் 'தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாதென வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு அமெரிக்கத் தூதுவரின் இந்தச் செயற்பாடு வியன்னா உடன்படிக்கையின் படி இராஜதந்திர அத்துமீறலென த நேசன் மேலும் தெரிவித்துள்ளது.

## உதயன்...

பத்திரிகையின் பிரதான செய்தியாக அதன் முன்பக்கத்தில் தேடப்படும் குற்றவாளிகளான டக்ளஸ, கே.பி. ஆகியோரை தமிழர்களின் தலைவர்களாக்க அரசு முயற்சிப்பது ஏன் நாடாளுமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. கேள்வி எனும் தலைப்பின் கீழ் செய்தி ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட செய்திப் பிரசுரத்தின் உள்ளடக்கமானது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதுடன் பொய்யான விடயமெனவும், உண்மையான காரணங்களைக் கண்டறியாத வகையிலும், உறுதிப்படுத்தாத வகையிலும் தீய நோக்கத்துடன் செயற்பட்டு, மேற்படி கம்பனியானது இப்பிரசுரத்தைப் பிரசுரித்து விநியோகித்துள்ளது என்பதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் பேசியதாக தன்னை அவதூறுக்கு உள்ளாக்கும் பொய்யாகப் புனையப்பட்ட மேற்கூறப்பட்ட செய்திப் பிரசுரத்தை மேற்படி கம்பனியானது தனது உதயன் பத்திரிகையில் பிரசுரித்து அதனை பொதுமக்களுக்கு விநியோகித்து விற்பனை செய்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ் வழக்கில் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி கம்பனியால் செய்யப்பட்டுள்ள மேற்படி செய்திப் பிரசுரமானது அதனளவில் தன்னை அவதூறுக்கும், அவமானத்திற்கும் உள்ளாக்கும் பிரசுரமாகும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஐந்நூறு (500) மில்லியன் ரூபா பணத்தை இவ்வழக்குத் தொடுக்கப்பட்ட தினத்திலிருந்து தீர்ப்பளிக்கும் தினம் வரையிலான சட்டரீதியான வட்டியுடனும், அதன் பின்னர் தீர்ப்பளிக்கப்பட்ட தினத்திலிருந்து அத்தீர்ப்பில் குறிப்பிடப்படும் முழுத்தொகைக்கும் உரிய முழுப்பணமும் செலுத்தி முடியும் தினம் வரைக்கும் உரித்தான சட்டரீதியான வட்டியையும் எதிராளியிடமிருந்து அறவிட்டுத் தருமாறு கோரி அமைச்சர் இவ் வழக்கை தாக்கல் செய்துள்ளார். இவ் வழக்கினை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் மே மாதம்-17 ஆம் திகதிக்கு எதிராளி கம்பனியை நீதிமன்றத்திற்கு ஆஜராகி இவ்வழக்கிற்கு பதிலிடுமாறு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

## பொதுநலவாய...

வெளிவிவகார திணைக்களத்தின் எமா வெல்போர்ட் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை நிலைமைகள் குறித்து திருப்தி அடைய முடியாத நிலையில் முழு அளவில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரிய யுத்தக் குற்றச் செயல்கள், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், நல்லிணக்கம் ஏற்படுத்தல் மற்றும் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் கனடா தொடர்ச்சியாக இலங்கையை வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## மண்ணெண்ணெய்க்குப்...

மேலும் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியிலுள்ள இரண்டு வர்த்தக நிலையங்களுக்கு வந்த இனந்தெரியாத இருவர், தம்மிடம் மண்ணெண்ணெய் இருப்பதாகவும் ஒருபரல் 21 ஆயிரம் ரூபா எனவும் தெரிவித்துள்ளனர். இவர்களின் கபடத்தை அறியாத வர்த்தகர்களும் இரண்டு பரல் மண்ணெண்ணெய் கொண்டுவருமாறு தெரிவித்தனர்.

எண்ணெய் கொண்டுவருவதாகவும் இதற்கு தம்மிடம் பரல் இல்லையெனவும் எனவே இரண்டு பரல்களும், பரல்திறக்கப் பயன்படுத்தும் சாவியையும் தருமாறு கேட்டுள்ளனர். வர்த்தகர்களும் அவற்றை அவர்களிடம் கொடுத்துள்ளனர்.

இவற்றை வாங்கிக்கொண்ட குறித்த இருவரும் தமது பட்டா வாகனத்தில் பறந்தனர். ஒருமணி நேரம் கழித்து வந்த அவர்கள், பரல்களை திறப்பதற்கான சாவியை விட்டுவிட்டு வந்துவிட்டதாகவும், தாம் அவசரமாக செல்லவேண்டியுள்ளதனால் இரண்டு பரல் எண்ணெய்க்குமான 42 ஆயிரம் ரூபாவை தந்து உடன் அனுபபுமாறும் கேட்டுள்ளனர்.

வர்த்தகர்களும் அவர்களது பேச்சை நம்பி முழுப்பணத் தொகையையும் கொடுத்து அவர்களை அனுப்பிவைத்த பின்னர் பரல்களைத் திறந்து பார்த்தவேளை, இரண்டிலும் தண்ணீர் இருப்பது தெரியவந்ததுடன், தாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என் பதனையும் நினைத்து கவலையுடன் உள்ளனர்.(125)

## மோட்டார்...

மோட்டார் சைக்கிள்கள் மற்றொரு மோட்டார் சைக்கிளுக்கு வழிவிட முயற்சித்த போது மோதி விபத்திற்குள்ளாகியதில் குறித்த மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று அதிகாலை மரணமடைந்துள்ளார். மற்றைய மோட்டார் சைக் கிளில் பயணித்தவரும் தற்சமயம் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட மூன்று மோட்டார் சைக்கிள்களும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (பா)

# இன, மத வாதத்திற்கெதிராக அனைவரும் ஒன்றுபடவேண்டும்

## - அழைப்பு விடுக்கிறார் சமித்த தேரர்




நாட்டில் யுத்தம் முடிந்து அமைதியான சூழல் நிலவிக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் சில இயக்கங்கள் இனவாதம், மதத் துவேஷம் மற்றும் குரோதங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டில் பாரிய இன்னல் தோன்றலாம். எனவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயக்கங்களின் செயற்பாடுகளை இல்லாதொழிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் என தென் மாகாணசபை உறுப்பினர் பத்தேகம சமித்த தேரர் தெரிவித்தார்.

“எம்மை நாமே வெற்றியடைதல் ஆயிரம் யுத்தங்களில் வெற்றியடைவதிலும் சிறப்பானது” என்ற தொனிப் பொருளில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கொழும்பு தாமரைத் தடாகம் மாவத்தையில் நடந்த இனவாத எதிர்ப்பு பேரணியில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்

சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்து அண்மைக்காலமாக கடும்போக்கு பௌத்த அமைப்புக்கள் முன்னெடுத்துவரும் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்தப் பேரணி நடந்துள்ளது. இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில்இவ்வாறானதொரு பேரணி மேற்கொள்ளப்பட்டமை சந்தோசமாக உள்ளது. சில இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் மதத் துவேஷமான குரோத செயற்பாடுகளுக்கு நான் இறப்பதற்கு முன் முற்றுப்புள்ளி வைக்க முடியுமா என எண்ணிப் பார்த்தேன். ஆனால் இச்செயற்பாடுகளை இல்லாதொழிக்க ஒருமைப்பாட்டுக்கான பேரணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டில் மீண்டும் ஒரு இனவாதம் தோன்றுவதற்கு முன்னர் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்றார்.

இதன்போது நிகழ்வை திசை திரும்பும் வகையில் சிலர் இந்த பேரணியினுள் நுழைந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். இதை அறிந்த ஏற்பாட்டுக் குழு அவைகளை வாங்க வேண்டாம் என அறிவுத்தினர்

இதனையடுத்து குறித்த கும்பலை பொலிசார் அவ்விடத்திலிருந்து விரைவாக விரட்டியமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேரணியில் சுமந்திரன், மனோகணேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# டெல்லியிடம் பணிந்தது புனேவாரியர்ஸ்



(ராஜ்பூர்)

ராஜ்பூரில் நேற்று நடந்த 39ஆவது ஐ.பி.எல். போட்டியில் புனேவாரியர்ஸை 15ஓட்டங்களால் தோற்கடித்தது டெல்லி டேடெவில்ஸ்

நாணயச்சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தது. புனேவாரியர்ஸ். இதனையடுத்து துடுப்பாட டெல்லி அணியின் மஹேல, சேவாக் களமிறங்கினர் எனினும் மஹேல 12, சேவாக் 28, உன்முகுந்சந்த் 17 என வெளியேறிய போதிலும், வோனர் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக்குவித்தார். இறுதியில் டெல்லி அணி 20 ஓவர் நிறைவில் 5விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்ளைப் பெற்றது. இதில் யாதவ் 25, வோனர் ஆட்டமிழக்காது 25 பந்தில் 4பவுன்டரி, 4 சிக்ஸர்கள் அடங்கலாக 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டின்டா 3, றைற், நாயர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு 165 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என களமிறங்கிய புனேவாரியர்ஸிற்கு உத்தப்பா 37, பின்ஞ் 37,யுவராஜ் 31, சிறப்பாக ஆடிய போதிலும், வெற்றிக்கான எத்தனிப்பை காண முடியவில்லை. இறுதியில் புனே 20 ஓவர்நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் பதான், யாதவ் தலா 2 விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் நாயகனாக வோனர் தெரிவானார்.

# பிரச்சினைகளை திசைதிருப்ப ஆளுங்கட்சிக்குள் குற்றச்சாட்டு

## - என்கிறார் ரணில்



(கொழும்பு)

ஆளும் கட்சியினர் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி பிரச்சினைகளை திசை திருப்ப முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பில் ஆளும் கட்சி அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி, பிரச்சினையைத் திசை திருப்பிவருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு குற்றச்சாட்டுக்களை சுமத்துவதன் மூலம ஊழல் மோசடிகள் மற்றும் ஏனைய குறைபாடுகளை மூடி மறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் நீர்மின் திட்டங்களை அறிமுகம் செய்த சேர் ஜோன் கொத்தலாவலவிற்கு எதிராகவும் அரசாங்கம் குற்றச்சாட்டுக்களை சுமத்தக் கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.

இப்படியே போனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இழிவு படுத்தும் நோக்கில் தோமஸ் அல்வா எடிசனுடன் இணைந்து தமிழ்ப் புலம்பெயர் மக்கள் மின்குமிழைக் கண்டு பிடித்தனர் என குற்றம் சுமத்தக் கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புலிகளிடமிருந்து மீட்ட பொருட்கள் எங்கே?

## யாழில் சுவரொட்டிகள்




விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து மீட்கப்பட்ட பொருட்கள் எங்கே? என்று கேள்வி எழுப்பிய சுவரொட்டிகள் பல, யாழ்ப்பாணம் நகரின் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

ஊழல் எதிர்ப்புக்குரல் என்ற அமைப்பினால் உரிமை கோரப்பட்ட இந்த சுவரொட்டிகளில், விடுதலைப் புலிகளிடமிருந்து மீடகப்பட்ட தங்கம், பணம் மற்றும் கப்பல்கள் எங்கே என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள யாழ். மின்சார நிலைய வீதி உள்ளிட்ட சில வீதிகளிலேயே இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இருபபினும் இவற்றில் பல இனந்தெரியாதோரினால் கிழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

# வடக்கு தேர்தலை எதிர்கொள்ள மே தினம் முடிந்ததும் நடவடிக்கை

## - அமைச்சர் டலஸ் தகவல்




மே தினம் முடிவுற்றதும் வடமாகாணத்தில் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பான நடவடிககைகளை ஆரம்பிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது தற்போது கட்சியின் மே தினக் கொண்டாட்டங்களைக் சிறப்பாக நடத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர், ஓரிரு வாரங்களில் வேட்பு மனுக்கான விண்ணப்பங்களைக் கோரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனுவில் வடக்கிலுள்ளோர் இணைத்துக் கொள்ளப்படுவர். அதற்கென அவர்கள் விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உபதலைவர் அமைச்சர் டபிள்யூ. ஜோன் செனவிரத்ன வடமாகாண தேர்தல் தொடர்பில் தெரிவிக்கையில், வேட்பு மனுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சை மூலம் பொருத்தமானோர் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

# வாகன புகைப்பரிசோதனை மே மாதம் முதல் நடைமுறை

(கொழும்பு)



வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையை பரிசோதனை செய்யும் நடவடிக்கை அடுத்த மாதத்திலிருந்து நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எம்.ஹரிஸ் சந்திர தெரிவித்தார்.

வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும்போது, வாகனத்திலிருந்து வெளியேறும் புகை, பரிசோதனைக்கு உட்படுத்துவது கட்டாயம் என அவர் தெரிவித்தார்.

தற்போது வாகனங்களில் இருந்து அதிகளவான புகை வெளியேறுவதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு முறைப்பாடு கிடைக் கப்பெற்றுள்ளது.

இதன்படி வாகனங்களிலிருந்து வெளியேறும் புகைகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் புகை பரிசோதனை உபகரணம் மாவட்ட அலுவலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எஸ்.எம். ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

இப்பரிசோதனையின்போது சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் புகை வெளியேறும் வாகனங்களின் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எம். ஹரிஸ்சந்திர குறிப்பிட்டார்.

# உயர்தர பரீட்சையில் போட்டி குறைப்பதற்கு நடவடிக்கை

கல்வி மற்றும் உயர்தரப் பரீட்சையில் காணப்படுகின்ற கடும் போட்டித்தன்மையை குறைக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. இதற்கமைய பகுதியளவில் அரச பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர்ஷனிகா ஹிரும்புரேகம தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் காணப்படுகின்ற போட்டித் தன்மை மாணவர்களை உளரீதியில் பாதிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி, மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பும் நடைமுறையொன்றை ஏற்படுத்திக் கொடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்களின் தரத்தைப் பாதுகாக்கும் வகையில் மற்றுமொரு நிறுவனமொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.